பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜூலை 2022



Dr ஜலீலா முஸம்மில்

## கலை இலக்கியப் பயணமும் அறிமுகமும்

பக்கம் 46



## தாய்ப்பாலே எல்லாம் தரும்...

### மருத்துவர் சாம்பசிவம்

பக்கம் 30

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஜூலை 2022

607



ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

தோழமைகள் யாவருமே வாழ்த்து மழையால் என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டீர்கள். தொலைபேசியூடாகவும், முகநூல், புலன வழியாகவும், குறுஞ்செய்திகளூடாகவும்  வந்த உங்கள் வாழ்த்துகளின் மூலம் பொழிந்த அன்புமழை எனைத் திக்குமுக்காடச் செய்து விட்டதென்றால் அது மிகையல்ல.

உண்மையில் பிறந்தநாளென்பது நம் ஆயுளின் நீளம் குறைவதையே குறிக்குமென்பது என் அபிப்பிராயம். இருப்பினும் உங்கள் அனைவரது பேரன்பும், பெருவாழ்த்துகளும் என்னைப் புதிதாய் பிறந்த பாலகனாய் பூமியில் தவழ வைத்து, புதுத்தெம்பையும் நல்கியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. எல்லோரும் எனைக் கொண்டாடும் வண்ணம் நான் எடுத்துக் கொண்ட பணிகளைச் சிறப்பாக செய்து முடித்திருக்கிறேன் என்பதில் எனக்கும் ஆத்மதிருப்திதான்.

முதுமையும், தள்ளாமையும் சிலசமயம் என் பணிகளின் வேகத்தை சற்றே தளர்வடையச் செய்தாலும், உங்கள் அனைவரதும் மாறாத அன்பும் ஆதரவும் என் மனோதிடத்தை அதிகரிக்கச் செய்து, மீண்டும் என் பாதையில் பந்தயக் குதிரையாக பயணிக்கத் தூண்டுகோலாய் அமைகின்றன. இது போதும் எனக்கு உங்கள் ஆசிகள் என்னை நூற்றாண்டு காணத் தாங்கிப் பிடிக்கும். வரும் தலைமுறையும் என் பெயரை ஓங்கிப் படிக்கும்.  நான் உள்ளவரை தமிழுக்கான என் அர்ப்பணிப்பும்  தொடரும்.

மனதார வாழ்த்திய நல்லுள்ளங்களுக்கு என் நல்வாழ்த்துகளையும், பேரன்பின் நன்றிகளையும் ஆழ்மனதிலிருந்து அள்ளி சமர்ப்பிக்கிறேன். தமிழால் இணைந்த நாம் தமிழோடு தொடர்ந்து செல்வோம். வெல்வோம்.

நன்றிகள்!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)



# பேரார்வம்

Love the Life you Live. Live the Life you Love
- Bob Marley

வாழும் வாழ்க்கையை விரும்புங்கள்.
விரும்பும் வாழ்க்கையை வாழுங்கள்
- பாப் மார்லி

தனக்கு என்ன பிடிக்கும் என்பதை விட, என்ன கிடைக்கும் என்று இன்று பலரும் தங்கள் வாழ்வியல் முறைகளை தேர்வு செய்கிறார்கள்.

என்னைச் சுற்றி இருப்பவர்கள் சுய நலமாக இருக்கும்போது நான் மட்டும் எப்படி பொது நலமாக இருக்க முடியும்?! இந்த எண்ணம் தான் இன்று பலரையும் ஒரு சீசாவில் பூதத்தை அடைத்து வைப்பது போல், தன்னிடம் இயற்கையாக சுரக்கும் மனிதத்தை, பிறருக்கு தன்னலம் பாராமல் ஓடிச் சென்று உதவும் இயல்பை, கொடுத்தலில் கிடைக்கும் மகிழ்ச்சியை, தன் விருப்பத்தை, ஆழ்மன அடியில் அதட்டி இருத்திப் போட செய்கிறது.

உனக்கு ஏதேனும் ஒன்றை பிடித்தி ருக்கிறது என்றால் அந்த ஒன்றுக்கும் உன்னை பிடிக்கும் என்கிறார் பாரசீகக் கவிஞர் ரூமி. உங்களுக்கு படம் வரைதல் பிடிக்கும் என்றால் அதற்கும் உங்களைப் பிடிக்கும். அதனால் அதை நீங்கள் மிக திறமையாக செய்வீர்கள். மனம் எதை விரும்புகிறதோ அதற்கான திறமை உங்களிடம் இயற்கையாகவே இருக்கும். அதில் உங்கள் வாழ்க்கைக்கான தேடல் (purpose) இருக்கிறது. எந்த சூழலிலும் அதை விட்டு விடாமல் அதையே உங்கள் வழிகாட்டியாக கொண்டு சென்றால் அது தேவையான நேரத்தில் மிகப் பெரும் ஆற்றலோடு வெளிப்படும்.

ஆனால், பலரும் தனக்கு எதில் விருப்பம் இருக்கிறது என்பதை விட சமூகத்தில் இன்று எதற்கு மதிப்பு இருக்கிறது என்பதையே முக்கியம் என்று நினைக்கும் சூழலில் இருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக இலாபம் தராத ஒன்றை தன்னுடைய பேஸ்ஸன்(passion) என்றே மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அப்படியே ஏற்றுக் கொண்டாலும் சிறு தடுமாற்றங்களில் சுருண்டு, எத்தனை உயரம் பறந்தாலும் விமானங்கள் தரையில் இறங்கித்தான் ஆக வேண்டும் என்று தனக்குத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு, தன் விருப்பங்களை தரை மட்டமாக்கித் தனக்குள் தளர்ந்து போகிறது.

சூழ்நிலையால் விருப்பமில்லா

# Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)

வேலையை ஏற்றுக் கொள்ளும் பலர், அந்த இயந்திர ஓட்டத்தில், தங்களது பேஸ்ஸனை, ஒரு பொழுது போக்காக கூட தொடராமல், எங்கே தன்னை அது மீண்டும் ஈர்த்து விடுமோ, அன்றாட கடமையை செய்ய விடாமல் தடுத்து விடுமோ எனும் சுய பயத்தில், மற்றதை விடவும் இன்னும் அதிகமாக தள்ளி வைத்து விடுகிறார்கள். உண்மையான தன் விருப்பத்தை விட்டு விட்டு ,தன் வேலைக்கும் சூழலுக்கும் ஏற்ற ஒன்றை தங்கள் பொழுது போக்காகவும் விருப்பமானதாகவும் மாற்றிக் கொண்டு, அதையும் ஒரு ரூட்டினாக கடமையாக செய்யப் பழகி உள்ளுக்குள் ஒரு நிறைவே இல்லாமல் தவிக்கிறார்கள்.





உள்ளிருந்து வெளியே வரவேண்டிய ஒன்றை வெளியிலிருந்து உள்ளே செலுத்துகிறீர்கள். நீங்கள் பார்க்கும் வேலை மட்டுமல்ல... உங்கள் விருப்பம், உங்கள் பொழுது போக்கு ஆகியவற்றைக் கூட சமூகத்தின் அளவீட்டைப் பொறுத்தே, அது உங்கள் ஸ்டேட்டஸ்க்கு பொருந்துமா என்பதை எடை போட்டே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. உண்மையில் நீங்கள் விரும்பி ஒன்றை செய்தால் அதற்கு உங்கள் ஆழ்மன ஆற்றல் துணை நிற்கும். பிரபஞ்சத்தின் சக்தி கிடைக்கும். அது இந்த சமுகத்திற்கே பலனளிக்கக் கூடியதாக இருக்கும். பிறருக்கு கொடுக்கும் மகிழ்ச்சியையும், பேரும் புகழையும் தரும்.



பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த அந்த சிறுவனுக்கு சிறு வயதிலிருந்தே Scuba diving ல் ஆர்வம் இருந்தது. சிறுவன் வளர வளர அவனது ஆர்வமும் வளர்ந்து அடுத்த கட்டமான, குகைகளுக்குள் உள்ள நீர் நிலைகளில் மூழ்கும் Cave Diving ல் நிபுணனாகிறான். அதே நேரம் தன் சூழலால் கணிணி ஆலோசகர்

அட்டையில்...

## தாய்ப்பாலைப் போற்றும் மருத்துவர் சாம்பசிவம்

வேலையில் அமர்கிறான். இருந்தாலும் தன்னுடைய passion னை மட்டும் அவன் விடவே இல்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் டைவிங்கிற்கு சென்றுவிடுவான். கணிணி வேலையில் இருப்பவர்கள் கடின வேலைகள் செய்வதே அபூர்வமாக இருக்கும் நிலையில் டைவிங்கின் ஃபார்முலா ஒன் என்று சொல்லப் படும் கேவ் டைவிங்கை, தொடர்ந்து செய்து வருகிறான். ரிஸ்க் மிகவும் அதிகம், வருமானமும் கிடையாது, இருந்தாலும் இதில் விருப்பம் இருக்கிறதென்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என ஆழமாக நம்பும் அவன் அதை ஆர்வத்தோடு செய்து தன் ஆற்றலை அதிகப் படுத்திக் கொள்கிறான்.

சில வருடங்களுக்கும் முன் ஜூன் மாத இறுதியில் தாய்லாந்தில் இருக்கும் அவனது நண்பர் ஒருவரிடமிருந்து, அவனுக்கு செய்தி வருகிறது 'தாய்லாந்தில் உள்ள ஒரு குகைக்குள் பிக்னிக் சென்ற ஒரு கால்பந்தாட்ட குழுவைச் சேர்ந்த 12 சிறுவர்களும் அவர்களை அழைத்துச் சென்ற பயிற்சியாளரும், மழை பெய்ததால் குகைக்குள் வெள்ளம் வந்து விட திரும்பி வெளியே வரும் வழி அடைபட்டு உள்ளே சிக்கிக் கொண்டார்கள். தேடி வந்தவர்கள் குகைக்குள் செல்லவே முடியாத அளவு நீர் நிறைந்துள்ளதை பார்த்து திகைத்து நிற்கிறார்கள். செய்தி அறிந்து வந்த கடற்படை வீரர்களும் டைவிங் கியர்கள் அணிந்து கொண்டு உள்ளே சென்று விட்டு அவர்களும் ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கு மேல் செல்ல முடியாமல் திரும்பி விட்டார்கள். உங்கள் உதவி தேவைப் படுகிறது' என்கிறார் அவர்.

அவன் உடனே தனது டைவிங் பார்ட்னரையும் அழைத்துக் கொண்டு தாய்லாந்து செல்கிறான். அங்கு இருவரும் உயிரைப் பணயம் வைத்து மீட்பு பணியில் ஈடுபடுகிறார்கள். தாய்லாந்து கடற்படை வீரர்கள் சென்ற தூரத்தை தாண்டி இன்னும் இரு மடங்கு தூரம், அலைக்கழிக்கும் நீரோட்டத்தை சமாளித்து, 2 அடிக்கும் குறுகலான செங்குத்து சரிவுகளில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களை முதுகில் இருந்து கழற்றி தலைக்கு முன் பிடித்துக் கொண்டு, கலங்கிய தண்ணீருக்கு அடியில் கும்மிருட்டில், இன்னும் எத்தனை தூரம் போக வேண்டும் என்பது தெரியாமல், உள்ளே யாரேனும் இருப்பார்களா, இருந்தாலும் உயிரோடு இருப்பார்களா என்பது அறியாமல், சுமார் 6 மணி நேரம் கடந்து இறுதியில் அங்கு ஒரு மேடான பாறையின் மேல் அமைதியே உருவாக அமர்ந்திருந்த அந்த 13 பேரை கண்டு பிடித்து விட்டு, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டிய பின் வெளியே வந்து, "நான் டைவிங்கை எனது விருப்பத்திற்காக செய்து கொண்டிருந்தாலும் இதற்கு ஏதேனும் தேவை இருக்குமா என்று எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பேன், இந்த 2 வாரங்களுக்காகத்தான் என் வாழ்நாள் முழுவதும் நான் தயாராகிக் கொண்டிருந்திருக்கிறேன் என்று இப்போது புரிகிறது" என்று அத்தனை அயர்ச்சியிலும் நெகிழ்ச்சியோடு கூறிய 'ஜான் வோலன்தன்' க்கு அப்போது வயது 47 .

கடற்படை வீரர்களே தேடி விட்டு இதற்கு மேல் செல்ல முடியாது என்று சொன்ன போது அனைத்து தடைகளையும் தாண்டி அவர்கள் இருக்கும் இடத்தை முதலில் அடைந்து கண்டு பிடித்ததில் இருந்து அவர்கள் அத்தனை பேரையும் பத்திரமாக கரை சேர்த்தது வரை அவருக்கு உந்துதலாக இருக்கிறது அவருடைய passion . அவருடன் ஒன்றாக சென்ற அவரது நண்பர் 'ரிச்சர்ட் ஸ்டேன்டன்' க்கு அப்போது வயது 57. மூட்டு வலி, கால் வலி என பலரும் முனங்கும் அந்த வயதில் தான் அவர் மீண்டும் மீண்டும் குகைக்குள் டைவிங்கில் சென்று ஆபத்தான பகுதிகளைக் கடந்து பலரையும் மீட்டு வந்திருக்கிறார், ஏனென்றால் இவருக்கு இந்த

திறமை அவர் மனம் அடையாளப் படுத்தியது. அது அவரை எந்த வயதிலும் திடமாக வழி நடத்துகிறது.

தவிர, இந்த கால்பந்தாட்ட சிறுவர்கள் அத்தனை பேராலும் எப்படி இத்தனை நாள் தாக்கு பிடிக்க முடிந்தது என்றால் அவர்கள் அத்தனை பேரும் தங்கள் விருப்பத்தில் சென்ற பயணம் அது. அதில் இருக்கும் சிரமங்களுக்கு அவர்கள் மனரீதியாக தயாராக இருந்தனர். அதுவே அவர்கள் தாக்கு பிடிக்கும் சக்தியை அதிகப்படுத்தியது.

இந்த ரெஸ்கியூ டீமில் இருந்த மற்றுமொருவர் மருத்துவர். இருந்தும் குகை டைவிங்கில் தனக்கு விருப்பம் இருக்கிறது என்பதற்காக அதைக் கற்றுத் தேர்ந்தவர். இவர்கள் யாரும் தங்கள் வேலையை கடமைக்கு செய்யவில்லை. சுயவிருப்பத்தில் செய்தார்கள். அந்த விருப்பம் சுயநலமில்லாதது. அதை பிரபஞ்சத்திற்கு செய்யும் போது அந்த பிரபஞ்சமும் அதற்கு சக்தி கொடுக்கிறது, சவால்கள் சாதனையாகின்றன.

உங்களுடைய விருப்பம் என்னவென்று, எந்த ஒரு perception னும் இல்லாமல் உங்களுக்குள் பாருங்கள். உங்கள் மனக் கதவுகளை பிறருக்கு கொடுப்பதற்காக திறந்து வையுங்கள். கொடுத்தல் என்பது ஒருவரை மட்டும் சார்ந்தது அல்ல. அது ஒரு தொற்று. ஒருவர் உதவ முன் வருவது பலரை தொடரச் செய்யும். எல்லோரையுமே அது கவரும். தானும் ஏதாவது செய்ய வேண்டும் எனக் கையும் காலும் பரபரக்க மனம் துடிக்கும். என் பங்குக்கு நான் ஏதாவது செய்ய முடியுமா என ஏங்க வைக்கும். செய்யாமல் இருப்பது குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தும். நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்காக திறந்து வைக்கும் கதவில் உங்களிடமிருந்து உதவிகள் வெளியே போக மட்டும் செய்யாது. உங்களுக்கான ஆற்றலும், உதவியும் உங்களுக்கும் வந்து சேரும். எந்த அளவு உங்கள் மனதை விசாலமாக வைத்திருக்கிறீர்களோ அதே அளவு உங்கள் மனம் மகிழ்ச்சியால் நிறையும்.

# ஆத்ம ஞானம்

- ஊருக்கும் கொடுத்து<br>உன்னதமாய் வாழுங்கள்.<br>யாரோ வள்ர்த்த மரம்<br>எல்லோரையும் இளைப்பாற்றுகிறது.

- பைத்தியம் பிடித்தவனாய்<br>கோடிகளுக்கு அலைகிறாய்.<br>வயிற்றின் அளவு<br>ஒரு சாண் தானே.

- காலிப் பாத்திரமாய் தான்<br>கடவுள் உனைப் படைத்தான்.<br>இடையில் ஏன் உனக்கு<br>இத்தனைக் குப்பைகள்..?

- சித்தத்தில் அழுக்கிருந்தால்<br>அவப் பெயர் தீண்டும்.<br>செத்தால் காடு சேர்க்க<br>நாலு பேர் வேண்டும்.

- உழைத்துச் சேர்த்ததே<br>உடன் வருவதில்லை.<br>கெடுத்தும் சேர்க்கிறாயே<br>கேடு கெட்ட மனிதனே.

- வாழும் காலங்களில்<br>புண்ணியத்தை விதையுங்கள்.<br>போகும் நேரத்தில் அது<br>ஆன்ம சாந்தி கொடுக்கும்.

- இறந்தால் மறக்கும் படியே<br>எல்லோரும் வாழ்கிறார்கள்.<br>மரணமும் மறக்காத படி<br>சிலர் வாழ்ந்து விடுகிறார்கள்.

**- ஜென்ஸி**

# என்னவளே வாராயோ

கன்னக்குழி சிரிக்கையிலே கட்டழகு தெரியுதடி,
சின்னப்பொண்ணு நீ தானே சீக்கிரமா வெளைஞ்சாயோ..
அன்னநடை நடக்காதே அடிவயிறு கொதிக்குதடி,
சின்னவளே சிங்காரி சிரிச்சு சிரிச்சு மயக்குறியே.

வந்தவள பாரு மச்சான் வானத்துல என்ன யிருக்கு..
தந்திடவே நானிருக்கேன் தயக்கமா ஏன் உனக்கு..
முந்திவந்து நானிருக்கேன் முந்தானை சொல்லலையா,
தந்தி போல என்னை நீ  தாராளமா வாசி மச்சான்.

காத்தடிக்கும் நேரத்துல. கன்னிப் பொண்ணு நிக்காதே,
ஏத்தமா மனசுக்குள் என்னென்னவோ தோனுதடி,
ஊத்தான கனவெல்லாம் உசுப்பேறி நிக்கையில,
போத்திக் கொள்ள ஆசைதான போர்வை நீ எனக்கு.

ஆனாலும் அவசரம் தான் அடிமனசு பயப்படுதே,
காணாம போனாக்க கலங்கிடுமே எம்மனசு,
தேனாக பேசி நீயும் தேகத்தை சூடாக்கி,
வீணாக யில்லாமா வெளையாட வா மச்சான்.

காந்தக் கருவிழியோ கதை சொல்லும் மணிவிழியோ,
ஏந்தும் கனவெல்லாம் இளமங்கை மைவிழியோ,
பேசும் விழிகளுக்குள் பெரியதோர் புராணமாய்,
வீசும் பார்வையிலே விந்தைப் புயல் மழையோ?

மொழியறியா மெல்லியளோ மௌனத் தேவதையோ!
விழி வழி காதல் சொல்ல விளைந்த நல் பருவக் கொடியோ,
ஒளியாடும் ஊர்வலமாய் உணர்வுக்குள் கலந்திங்கு,
வழி மறைத்து நின்றாளோ..வாசல் வழி மறந்தாளோ.

பேரழகின் தடமிவளோ பெரும்புகழில் இவளுருவோ,
காரமில்லா இனிப்பான காதல் பலாச் சுவை தானோ,
நேரமிங்கு நெருங்கிடவே நெக்குருகும் நிறைமதியாய்
சோரம் போகாக் காதலுக்குள் சொட்டும் அமுதத் தேன் தானோ.

காற்றோடு போட்டியோ கட்டியணைத்து கதவடைப்போ..
ஊற்றாகும் கனவிங்கே உலகத்தை மறக்கிறதோ,
மாற்றமில்லா மனப்பூவில் மகிழ்ந்தாடும் வாசமெல்லாம்,
ஆற்றலோடு ஆரணங்கை அழகாக்கிப் பார்க்கிறதோ.

பூச்சூட நான் வரவா புதுப் பெண்ணே நீ மணமா,
வீச்சரிவா விழிவிழுந்து விக்கி நிக்கிறேன் நீ சுகமா,
ஆச்சர்யம் ஏனிங்கே அள்ளி யெடுத்தாக் குறைஞ்சுடுமா,
கூச்சமினி வேணாமே.. குளிர் போக்க நான் தானே.

தேகம் சுடுகிறதே. தேவை புரிகிறதா,
வேகமா வா கொஞ்சம்.. வெவரம் நான் சொல்றேன்,
சோகம் போதுமடி சுகமினி வரவாகும்,
சாகசம் செய்திட  சந்தனப்பூ  நீ தானே.

முல்லைப் பூ நீ வைச்சு முழுசா வந்து நிக்கையிலே,
கள்ளம் தோனுதடி கனவெல்லாம் விரியுதடி,
உள்மனசுகொதிக்கிறதே.. உன்மனசு சொல்லலையா,
வெள்ளிப் பூங்கொடியே.. வெளஞ்சவளே வா கொஞ்சம்.

இடை சிறுத்தக் கொடியா நீ... இல்லை யென குறையுண்டா,
உடுத்திடவே நானிருக்கேன்.. உணர்வாய் வா புள்ளே,
தடுத்திட யாருண்டு.. தலை வாழை நீ தானே,
எடுத்தாள நிலமிருக்கு..என் பட்டா உன் பெயரில்

வாசிக்க வந்தவளே வைகறை  வருகிறதே,
யோசனை இன்னுமா யோகப்பூ விரிகிறதா,
நேசப் பார்வையிலே நெஞ்சுருகும் பாவையே,
வாசனை அறிவதற்கே வா கொஞ்சம் என்னருகில்..

இதயம் விரிகிறதே இளையவளே உணர்ந்தாயா?
உதயம் இனிதானே..உன்வரவு எப்போது,
எதையும் தாங்கி நிற்கும் என்னினிய இளம்பூவே,
நிதமும் உனக்காக... நிம்மதி நமக்காக.

கரையோரம் கால்வைக்க கருவிழிகள் சிரிக்கிறதோ,
திரையோடும் கதைக்குள்ளே திருவிழா தெரிகிறதோ..
உறவான என்னவளே உணர்வுப்பூ அழைக்கிறதே..
மறவாதே மா மயிலே மாமன் மனம் உனக்குத் தான்.

ஏக்கம் இனியெதற்கு எதிர்காலம் நமக்குண்டு,
நோக்கம் விழித்திருக்க நுழைவாயில் நமக்காக.
ஆக்கம் அன்பாகி அறிவுப்பூ இதழ் விரிக்க,
தேக்கம் இனியெதற்கு தேவதையே விழித்திடுவாய்..

நெஞ்சத்து இளங்குயிலே.. நிழலாடும் என் மானே,
மஞ்சத்துத் தாமரையே மகிழ்ந்திங்கு வருவாயே,
தஞ்சமென வருவாயோ.. தளிர் மனக் கொடியாளே,
வஞ்சியுன் நினைவினிலே வாழ்விங்கு கரையுதடி.

கரைந்த மனக் கரைசலிலே கனவு விரியுதடி,
விரைந்திங்கு வருவாயே.. விழிதிறந்து பார்ப்பாயே,
நிறை மனப் பேரழகி நினைவெல்லாம் நீ யிருக்க
மறைந்திருந்து பார்க்காதே மகிழ்வாகும் மாங்குயிலே.

இளவஞ்சி கொடியிங்கு இளைப்பாற வருவாயே,
வளம்தரும் சொல்லெடுத்து வாழ்வாகி நிலைப்பாயே,
களமாகும் கருவிழிக்குள் காதல் மனம் சொல்லிடவே,
உளமாற வந்து நீயும் உயிர்த்துணையாய் நிலைப்பாயே.

எனையாள நினைப்பவளே என் விழிப் பார்வை நீயே,
மனையாளாய் நீ வரவே மனமிங்கு ஏங்குதடி,
நனையாத கனவெல்லாம் நாயகி உனக்காக..
இணையாக துடிக்குதடி.. இளவேனிற் பூவே வா.

- பரணி சுப சேகர்

# குன்றென நிமிர்ந்துநில்

தங்க அன்புவல்லி பட்டுக்கோட்டை

1.
அடுத்தடுத் திழைத்திழைத் தல்லல்செயுந் துன்பமே
அரிய நெஞ்சின் உறுதிகொல்ல வல்விரைந்து வருவதேன்
தொடுத்தமற் றயலுளார் துன்பநோக்(கு ) போதிலே
தூசுநமது துயரமென்ற தெளிவுசேர வேண்டுமே
கடுத்திருக்கும் முகச்செருக்குக் கனிந்து மென்மை சேரவே
கல்வியென்றும் கவிதையென்றும் காரணிகள் தேடுவாய்
மடைத்தலைப் புனல்ஒழுக்கு மண்கடந்து மற்றுள
வயற்பரப்பும் ஊறல்போல் மனவருத்தம் பரப்பிடேல்

2.
நோய்ப்படுக்கை வீழ்த்துமோ வறுமைநாய் கடிக்குமோ
நொந்துநைய நமதுசுற்றம் சொற்களாலே கொத்துமோ
வாய்ப்புவந்து நழுவுமோ மனம்நடுங்க வாய்க்குமோ
மாற்றமில்லாச் சலிப்பினாலே வாய்பிதற்ற நேருமோ
ஆர்ப்பரிப் படங்குகின்ற முதுமைவந்த வேளையும்
அன்புநெஞ்சம் குறைகளாலே அலைக்கழிதல் தவிர்குவாய்
தோப்பிருக்கும் தனிமரத்தும் பறவைவரக் கூடுமே
தொட்டணைக்கும் சிறியகாற்றும் வியர்துடைத்துப் போகுமே



3.
தன்னிரக்கம் விழுத்திடாத தலைமைகொண் டெழுகவே
சால்புசற்றும் குறைபடாத தகைமைகைக் கொள்கவே
தன்னையன்றித் தனையுயர்த்த முன்வருவோர் உண்டுகொல்
தன்னையன்றித் தன்துணைக்கு யாரைநீ யழைப்பையோ
பொன்னின்னொளி மண்கிடந்தும் புழுதிதின்ப தில்லையே
பொலிகவென்னும் வாழ்த்துமொழி பொய்படுவ தில்லையே
தன்னைவென்று சீற்றமின்றி உலகினோடு பயில்கவே
தனிநிமிர்ந்து குன்றுபோல நிலைத்துநின்று மகிழ்கவே



# அப்பா என்றாலே பெரும் துணிவு

அப்பாவின் முன் எதுவும் அழகில்லை
அப்பா மட்டுமே பேரழகு
அப்பா முன் இருக்கையில்
எதற்கும் பயமில்லை
அப்பா மட்டுமே பெரும் துணிவு
காலையில் கண் விழித்தால் -
கதிரவனாவான்
மாலையில் மனம் மகிழ
மார்கழியாவான்
கோடையை அறிய விடாத
பெருங்கொடை தந்தையே
பாடை போகும் மட்டும் அறிய முடியா -
அவன் ஒரு விந்தையே...!

கோபமாய் இருப்பது போல் நடிப்பார் -
கோப ப்பட்டதற்காய் இரவிலும்
உறங்காமல் துடிப்பார்
இவன் என் பிள்ளை என்று
ஊருக்கே சொல்லி மகிழ்வார்
உயிரை கரைத்து உழைத்து
ஊமையாய் கிடந்து அழுவார்

தந்தைக்கு முன்னே எல்லா
தியாகமும் தோற்கும் -
யாரும் அறிவதில்லை
தந்தையின் வாழ்வை மரணம்
தொடும் வரை
யாரும் அழுவதில்லை
பிள்ளையின் ஓர் சொட்டு கண்ணீரை
உதிரமாய் எண்ணி அழுகின்ற
ஜீவனடா
தன் பிள்ளை உலகாள வேண்டும்
என்பதற்காகவே அதிகாலை
உழுகின்ற தேவனடா

பெத்தவனை போல சாமீ
உண்டா கோயிலிலே
பெத்தவனை கண்டா சாமீ கூட விழுமே
அவன் பாதத்திலே

பத்துமாதம் சுமந்த தாய்க்கு
ஈடு இணை இல்லை தான்
பல வருசம் வளர்த்தவன் முன்
அது கூட சொற்பம் தான்

வேராகயிருந்து மலராக்கி
மலர்ந்தவனை
வேகாத வெயிலில் வெறும்
காலால் கடந்தவனை
நோகாத வாழ்வை தந்து
பூவாக உதிர்பவனை
தேராக அழைத்து வந்து
திருவிளக்கு ஏற்றுங்கடா-
உங்கள் தீராத பாவம் எல்லாம்
அவனின் ஓர் பார்வையில்
தீருமடா - அது ஒன்றே
உன் வாழ்வை உணர்த்துமடா
உன் பிள்ளைக்கு நீ கூறும் பாடமடா

**- ஆனந்த சுப பாலா**

## கனவு

நயனம் நித்திரையில்
நெஞ்சம் கனாவிடை
சயனம் தனித்திருக்க
சல்லாபம் சகியோடு

இமைகள் கனத்திருக்க
இன்பம் சுகித்திருக்க
சுமைகள் மறந்திருக்க
சுவனம் முன்னிருக்க

பெரும்வாவி பரந்திருக்க
பதுமம் அலர்ந்திருக்க
கருமுகில் களைத்திருக்க
கரிசல் நனைந்திருக்க

கலையாதே கனாமுகிலே
குறுஞ்சாரல் காத்திருக்க
வலைகள் அவிழுமுன்னே
விருந்தும் எஞ்சியிருக்க!

வேங்கை மார்பன்
(சையத் யாகூ ப்)

# விடியல் பரிசு

எனக்காக
சில நொடிகள்
நின்றுசெல்லும்
பேருந்து

தவறாமல்
புன்னகையினை
முழமிடும் மல்லிகை
அக்கா

தினமும்
'பை' சொல்லி
கையாட்டும்
சிறுகுழந்தை

வழியில் எப்படியும்
தென்பட்டுவிடுகிற ஒரு
வண்ணத்துப்பூச்சியென

எனக்கான விடியலை
இன்னுமின்னும்
வெளிச்சமாக்குகின்றன
இயல்புமாறா உள்ளங்கள்!

# கருப்பங்கி

'உன் பேர அய்யா
கேட்டா தைரியமா
சொல்லணும்'

'எதுக்கு வந்திருக்கீங்கனு கேப்பார்...
ஜாமீன் வாங்க அய்யானு கும்பிடணும்'

கையிலிருக்கும்
வழக்குத்தாள்கள்
பிரம்பாக மாற

தலையசைத்தவாறிருக்கும்
கும்பலின் எதிரில்
கருப்பங்கியோடு
ஒரு கரும்பலகை

சற்றுநேரத்திற்கு
வகுப்பறையாகியிருந்தது
நீதிமன்றம்

உள்நுழைந்ததும்
அவர்களைப் பார்த்துக்
வணங்கினார் நீதியரசர்!

**ரகுநாத் வ, மதுரை**



ஒருநாள்
அவள் உறங்கிட
குடும்பமே
விழித்துக் கொண்டிருந்தது
எதை எப்படி
செய்வதென்று அறியாமல்.

**- மக்கொனையூராள்**

அந்த ஊரில பொன்னம்மாதான் சலவைத்தொழில் செய்யிறவங்கள்ல எல்லாருக்கும் பிடிச்சவங்க. நாளைஞ்சு பேர் அந்ததொழில்ல இருந்தாலும் அவ ளுக்குத் தனி மவுசுதான்.

துணிகளை எண்ணி அதை சலவைக் கணக்கு நோட்டில எழுதிக்கிட்டு அப்புறம் மூட்டையாகட்டிஎடுத்துட்டுப்போய்அதுல சலவைக் குறிபோட்டு ரகம் பிரிச்சி ஓவர் மண்ண போட்டு பெரிய தாழில வெள்ளாவி வைச்சி அப்புறம் அதைக்கழுதைமேல ஏத்தி கொண்டுபோய் கம்மாயில போட்டுத் தொவைச்சி காயப்போட்டு அப்புறம் அதை திரும்ப கழுதையில ஏத்தியாந்து இஸ்த்திரி போட்டு திரும்ப வீடு வாரியா பிரிச்சி அடுக்கிக்கொண்டாந்து நல்ல வாசனையோட வீடு வீடாக்குடுத்துட்டு அதுக்கு காசோ இல்ல வருசத்துக்கு நெல்லோ இல்ல அன்னன்னக்கி அவங்க குடுக்குற கஞ்சி கூழோ அதை வாங்கிட்டு பொழப்ப ஓட்டிக்கிட்டு இருந்தவதான் அவ.

மீனாச்சியம்மாவுக்கும் அவளுக்கும் அப்புடி ஒருநட்பு. அப்ப அப்ப பொன்னம்மா சொல்றமாதிரி அம்மா குடுக்குற கஞ்சிக் கும் பழைய கொழம்புக்கும் பத்து தலை மொறைக்கி துணி தொவைக்கலாம். இது போக நல்லது கெட்டதுக்குத் தணியா எடுத்துக்குடுக்குற பொடவைய ஆசையா வாங்கிக்கட்டிக்குவா. அப்ப அப்ப செலவுக்குக்காசு வாங்கிட்டு அதை சலவைக்கணக்குல கழிச்சிக்க சொல்லுவா மீனாச்சியம்மா படிச்சதோ அஞ்சாப்பு. அத வைச்சிக் கிட்டு சலவை நோட்டில பவாடை 5 சீலை 10 சாட்டை 8 வெட்டி 6 ன்னு தப்பும் தவறுமா அம்மா எழுதியிருந்தாலும்



வாசிக்கும் போது சரியா வாசிக்கும். மீனாச்சியம்மாளதுவுமே படிக்காக கணக்கு வைச்சி சலவைக்குறி மூலமா அடையாளம் வைச்சி (அது சோழர் காலக் கல் வெட்டு போல இருக்கும்) துணிமாறாமக் கொண் டாந்து குடுக்குறது பொன்னம்மா சாமர்த்தியம்.

காலமாத்தத்தில பலபேர் வாசிங் மிசினுக்கு தாவிட்டு தேய்க்கிறதுமாத்திரம் பொன்னம்மாகிட்ட வர கழுதைக்கும் வெள்ளாவிப் பானைக்கும் சலவைக் குறிக்கும் வேலை இல்லாமப் போச்சு. அதுமட்டுமா அவளுக்கு எல்லார் கூட இருந்த அந்த குடும்ப நெருக்கம் கொறைஞ்சு போச்சு... எல்லாம் காசுக்கா கன்னு ஆயிப்போச்சு.

அதுனால அந்தத்தொழில் செய்யிற வங்க பெரும்பாலானோர் தொவைக் கிறதை விட்டுப்புட்டு டவுனுல போய் தேய்க்கிற வேலை செஞ்சித்தர கடை போட்டுட்டாங்க. அதுனால சனங்களும் வாசிங்மிசின்ல தொவைச்சிட்டு தேய்க்கி றதுக்கு மாத்திரம் கொண்டாந்து குடுத்து தேய்ச்சு வாங்கிக்கிட்டு அதுக்குக் காசுகுடுத்திட்டுப்போனாங்க.

ஆனா மீனாச்சியம்மாமாத்திரம் அந்த வாசிங்மிசின் வாங்க ஒத்துக்கல. அம்ம பொன்னம்மாவும் நானுமிருக்குறவரை அவ தான் துணி எடுப்பா தொவைப்பான்னு தீர்மானமா சொல்லிட்டாக. அதேபோல பொன்னம்மாவும் அம்மா கிட்ட மாத்திரம் அதைத்தொடர்ந்துச்சு. மத்தவங்க செலர் அதுமாதிரி எங்க வீட்டுலயும் துணி எடுத்துட்டு போம்மான்னு சொன்னப்ப அதை முடியாதுன்னு தீர்மானமா சொல்லி டுச்சு பொன்னம்மா.

பொன்னம்மா பிள்ளைகளும் அவகிட்ட ஏன் அங்க மட்டும் எடுக்கிற நமக்கு இனிமே அந்த தொழில் வேணாம். எங்களுக்கு கஸ்ட்டமா இருக்குக்குன்னு சொன்னப்ப பொன்னம்மா சொல்லிடுச்சு மக்கா நாம பசியும் பட்டினியுமா



## வாழ்க்கைப் போராட்டம்

வாழ்க்கை ஒரு போராட்டம்
பிறப்பு முதல் இறப்பு வரை
நிகழ்கிறது...
கருவறை முதல் கல்லறை வரை
நடக்கிறது...

சில நேரத்தில் வெற்றியும்
பல நேரத்தில்
தோல்வியும் சகஜம்தான்.
தோல்வியில் படிப்பினையும்
வெற்றியில் உத்வேகத்தையும்
பெற்றுக்கொள்ள கற்றுக்கொள்.

ஆயிரம் தோல்விகள்
உன்னை ஒருநாள்
சாதனையாளராக்கும்.

சின்னச்சின்ன வெற்றியில்
தலைக்கனம் கொள்ளாமல்
சின்னச்சின்ன தோல்வியில்
துவண்டுவிடாமல் வாழ்க்கை
போராட்டத்தை எதிர்கொள்.

உன் போராட்டத்தில்
உயிரின் பயத்தோடுஓடும்
மானைப்போல் போராடு.
உன் இலட்சியத்தில் இலக்கை
பசியோடு பாயும்
புலியாய் குறிவை.

தனியாக போராடுகிறேன்.
வெற்றியை கிட்டுமா?
என நினைக்காதே -
நீ தனியாக போராடுவதே
வெற்றியின் முதல் படிதான்..

**வாழையூர் கவிநிலா**
நுஸ்ஹா அஸீம்

கெடந்தப்ப வயித்துக்கு கஞ்சி ஊத்துனது அந்தத் தாயிதான். அந்த விசுவாசம் உங்களுக்கு இல்லாட்டினாலும் எனக்கு இருக்குது. நான் உசிரோட இருக்குறவரை நான் அந்தத் தாயிக்கு செய்யிவேன் எனக்கப்புறம் ஒங்கவிருப்பம்னு சொல் லிட்டு அதை தொடர்ந்துச்சு.

திடீருன்னு ஒருவாரமா பொன்னம் மாவக் காணாம். அம்மா ஆளுககிட்ட விசாரிச்சிச்சி அவளுக்கு கீழவிழுந்ததுல கால்ல அடிபட்டுக் கட்டுப்போட்டு படுத்துருக்காம்னு கேள்விப் பட்டு நேரயே விசாரிக்கப்போயிடுச்சு. மீனாச்சியம்மா பழம் எல்லாம் வாங்கிக்கிட்டுபோய் பாத்து ஆறுதல் சொல்லிட்டு கொஞ்சக்காசும் செலவுக்குக்குடுத்துட்டு வந்துச்சு. பொன்னம்மா வோட பிள்ளைக கூட இல்ல. அதுனால அப்ப அப்ப பக்கத்துல இருந்த ஒரு பிள்ளைக்கிட்ட கஞ்சி குடுத்து விட்டுச்சு அம்மா

கொஞ்சநாள்ல சரியாகி பொன் னம்மா நொண்டி நொண்டி நடந்துக் கிட்டு மீனாச்சியம்மா வீட்டுக்கு வந்துச்சு. தாயி எப்புடி இந்தக்கடனை அடைக்கப் போறம்னு கண்ணீர் விட்டுச்சு. அப்ப மீனாச்சியம்மா சொல்லிச்சி மனுசனுக்கு மனுசன் ஒதவுறதுக்கு கடன்ற பேரெல்லாம் கெடையாது அது ஒரு மனசு அம்புட்டுத் தேன்னு சொல்லிசிரிச்சது.

அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா பழைய நெலமைக்குத்திரும்பி மறுபடி துணி எடுத்துட்டுப்போக ஆரம்பிச்சா பொன்னம்மா.

அப்பயெல்லாம் வழக்கம் போல மீனாச்சி அம்மாகிட்டக்க அது குடுக்குற துணிமணிகளை வாங்கிட்டுப்போய் தொவைச்சி தேய்ச்சு கொண்டாந்து குடுத்துட்டு அது என்ன குடுத்தாலும் வாங்கிக்கிட்டு சந்தோசமாப் போய்கிட்டு இருந்துச்சு.

அது அவளைப்படைச்ச சாமிக்கும் புடிக்கலைபோல. பாவம் மீனாச்சியம்மாக்கு ஒடம்பு முடியாமப் போயிடுச்சு. படுத்த படுக்கை ஆயிருச்சி. தினம் மூத்திரம் போறது எல்லாம் படுக்கை யிலன்னு ஆயிப்போச்சு. மீனாச்சி யம்மாவோட மகன் அதைப்பாக்க ஒரு அம்மாவ சம்பளத்துக்கு வைச்சான். ஆனா மூத்திரத்துல நனைஞ்ச துணிய என்னா பண்ணுறதுன்னு தெரியல.

அப்பப் பொன்னம்மா வந்து பாத்துப்புட்டு சொன்னா அய்யா நான் எடுத்துட்டுப்போய் அலசிக் கொண்டாரு றேன்னு சொல்லி தினம் எடுத்துட்டுப் போய் அலசிதொவச்சி தேய்ச்சி கொண்டாந்து குடுத்தா. அதைப் பாத்துட்டு மீனாச்சியம்மாக்குக் கண் கலங்கிடுச்சு. பெத்த புள்ளைக தொட அருவருக்குற மூத்திரத்துணிகளை நீ அலசுறீயே இதுக்கு என்ன கைமாறு செய்யப் போறேன்னு அழுதுச்சு. அப்ப பொன்னம்மா சொல்லிச்சி எங்க ஆத்தா இப்புடி இருந்தா நான் பாக்க மாட்டனா நு சொல்லிடுச்சு

நாளுக்கு நாள் மீனாச்சியம்மா ஒடம்பு மோசமாயிடுச்சு. ஒன்னு ரெண்டு எல்லாமே பெட்டுலன்னு ஆயிப்போக பொன்னம்மாவுக்கு வேலை சொமை கூடிப்போச்சு. அப்ப மீனாச்சியம்மாவோட மகன் சொன்னான் எங்களுக்கே கஸ்ட்டமா இருக்கு. அதுனால கடையில இதுக்குன்னு பேடு விக்கிது அதை வாங்கி மாட்டிவிட்டுருறோம். இனிமே நீ அதை தொவைக்க வேண்டிய அவசியமில்லன்னு சொன்னான்.

அதுக்கு பொன்னம்மா சொன்னா அம்மாவோட துணிமணி குடுங்க தெனமும் போடுற அந்த கெவுனக்குடுங்க தொவைச்சி கொண்டாருறேன்னு சொல்லி வாங்கிட்டுப் போய் தொவைச்சிக் கொண்டாந்து குடுத்தா.

ஒருநா பொன்னம்மா வை மீனாச்சி யம்மா கூப்புட்டுச்சு எந்த சென்மத்துல புண்ணியம் செஞ்சனோ என்ன மக மாதிரி நெனச்சி எல்லாம் பண்ணுற எனக்குப்புடிச்ச சேலை ஒன்னு இருக்கு

அதை நீ தொவைச்சி கொண்டாந்து மகன் கிட்ட குடுத்துறு. சீக்கிரமே நான் ஆருக்கும் தொந்தர வில்லாமப் போகப்போறேன். எனக்கு எல்லாரும் செத்தபின்னாடி சேலை கொண்டாந்து போடுவாக. ஆனா கடைசில என்ன எரிக்கும்போது நீ சலவை பண்ணிக் குடுத்த எனக்குப்புடிச்சமான அந்த சேலையத் தான் எனக்குப்போட்டுவிடனும்னு கண்ணீரோட சொல்லிச்சி . அதை மகன் கிட்டயும் சொல்லிருச்சு.

அதேமாதிரி அந்த மஞ்சள் சேலைய வாங்கிட்டுப்போய் நல்லா தொவச்சி இஸ்திரி எல்லாம் போட்டுக்கொண்டாந்து குடுத்தா பொன்னம்மா. அவ கொண்டாந்து குடுத்த மறுநாள் மீனாச்சியம்மா கண்ண மூடிருச்சு.

சொன்னது மாதிரி எல்லாரும் சேலை வாங்கியாந்து போட்டாக. கடைசியா எல்லாச்சேலையும் எடுத்துட்டு அந்த மஞ்சச்சேலைய கடைசியா போத்துனாங்க அம்மாவுக்கு. அதைப் பாத்துட்டு ஒரு ஓரத்துல நின்னு பொன்னம்மா குலுங்கி குலுங்கி அழுதுக்கிட்டு இருந்தா. அவ குடுத்த மஞ்சச்சேலைய போத்திய படி மீனாச்சியம்மா தன்னோட கடைசிப் பயணத்துல போறதப்பாத்து அடிவயிறு பத்திக்க தாங்கமுடியாம அழுதுச்சு பொன்னம்மா. அப்ப அம்மாவோட மகன் அவளைக்கூப்புட்டு ஒரு பட்டுசேலைய குடுத்தான் அம்மா குடுக்கச்சொன்னதா. அதை வாங்கும்போது அம்மாவையே தூக்கிட்டு இருக்குறமாதிரி தோணிச்சி. அதை அம்மா நெனவா பாதுகாத்து வைச்சிக்கனும்னு நெனைச்சிக்கிட்டா பொன்னம்மா.

அப்ப அம்மாவத் தூக்கிட்டுப் போகும் போது அந்த மஞ்சச்சேலையில முந்தானையில சலவைக்குறி தெரிஞ்சது.... அது X மார்க்கும் கண். படமும் போட்டுருந்துச்சு... அது இவபோட்ட சலவைக்குறி.

அந்த X மார்க ரயில்ல கடைசிப் பெட்டில போட்டுருக்குமே இதுதான் கடைசின்னு அதை நாவகப்படுத்துச்சு... அந்தப்படத்துல இருந்த கண்ணுல இருந்து எப்பயோ பட்ட ஒரு துளி கண்ணீர் சொட்டுச்சு அதைப்பாத்துட்டு பொன்னம்மா வாயப்பொத்தி அழுதா கண்ணீரோட... அப்ப தானே பேசிக்கிட்டா... எல்லாம் முடிஞ்சி போச்சி இனிமே எனக்குன்னு ஒருத்தருமில்லன்னு. பசிச்சி கெடந்தாலும் ஆரும் கஞ்சி ஊத்தப்போறதில்ல,னு பொலம்பிக்கிட்டே வெறிச்சிப்பாத்தா... தூரத்துல அம்மா போய்கிட்டு இருந்தா... திரும்பாத எடத்துக்கு...

## விரிவுரை

பங்கெடுத்த விரிவுரைகளில்
கவர்ந்த விரிவுரை
கலகலப்பான
கதையாடல்களை கொண்டதே !

பாடவேளையாக நிமிடங்கள்
‘ஜஸ்ட்’ ஐம்பது தான்
அவ்வளவும் அற்புதமே..

குருவாக அவர்..
போதனைகள் பலதையும்
சிந்தனைகள் சிலதையும்
கொள்கைகள் கொஞ்சமுமாக
கலந்து கற்பிக்கையில்..

தப்பித்தவறி மலர்கிற துயிலும்
மர்மமாகவே மறைகிறது !

இப்படியே அரங்கேறுகிற
விருந்தான விரிவுரைகள்
எப்போதும்
வரவேற்கத்தக்கது தான்..

**- அஃபீக் காரியப்பர்**

# கல்வி - 100

**நடுவர் : தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்**

1. நெடுமுடி வேந்தன் (நேமிராஜ் கோபால்) சென்னை

கல்வி கற்றோன் உயர்கின்றான்
கல்லா தவனே நெளிகின்றான்
செல்வம் இதுவே செழிக்கின்றான்
சேர்க்கும் பொருளால் வெல்கின்றான்
மல்லன் அவனே வகுக்கின்றான்
மங்காப் புகழும் பெறுகின்றான்
இல்லா தார்க்கும் தருவதனால்
ஈகைப் பண்பில் ஒளிர்கின்றான்!

2. கெங்கை பாலதா

கல்வி கண்ணாய்த் திகழுமெனக்
கருதி நாமும் வாழ்வினிலே
சொல்லித் திரிந்தே வாழ்ந்தோமே
சொன்ன சொல்லோ பிழைத்ததுவே!
கல்வி எங்கும் விற்பனையில்
கண்டோம் இன்று புவிதனிலே!
நல்ல விதிகள் ஆக்கிடுவோம்
நாளும் உலகில் காத்திடவே!

3. சரசுவதி பாசுகரன்

கல்வி வாழ்வின் ஆயுதமாம்
கற்க அறிவும் பெருகிடுமாம்
நல்ல ஆசான் அமைந்தாலோ
நன்றாய் நாமும் கற்றிடலாம்
வெல்லும் உலகை எந்நாளும்
வேள்வித் தீயும் கல்வியன்றோ
மெல்ல மெல்ல எல்லோரும்
மேன்மை யடையக் கற்றிடுவோம்

4. சக்தி மகராஜ்

கல்வி கற்ற மாணவரே
கருத்தில் நிலைத்தே உயர்ந்திடுக
செல்வம் பெருக்க எண்ணாதே
செயலும் சொல்லும் ஒன்றாக்கு!
கல்லா மனமும் மதியிழந்தால்
களவும் கற்க வழியாகும்
பொல்லா வினைகள் பின்தொடர்ந்தால்
புரிதல் இன்றிப் போய்விடுமே

5. தகடூர் தமிழ்முருகன்.

அல்லும் பகலும் அயராமல்
அழகாய் நீயும் படித்தாலே
சொல்லும் செயலும் சிறந்திடுமே
சோகம் நீங்கிச் சென்றிடுமே
செல்லும் வழியில் தடைகளுமே
செல்லாக் காசாய் மாறிடுமே
வெல்லும் வழியை அறிந்திடுவாய்
விரைந்து கல்வி கற்றிடுவாய்.

6. கவிதா சீனிவாசன்

கற்கும் ஆசை வந்தாலே
கல்வி நமக்கு வசமாகும்
கற்றோர் சொல்லைக் கேட்டாலே
காலம் நம்மைத் தேரேற்றும்
பெற்றோர் சொல்லும் அவ்வாறே
பேரும் புகழும் பெறவுதவும்
குற்ற மின்றிக் கற்பவர்க்கே
குவல யத்தார் குடைபிடிப்பர்!

*7. விசு இமானுவேல்*

உள்ளத் துறையும் ஆற்றலினை
உவகை யாக்கி உருப்பெருக்கும்
வெள்ளத் தனைய பாய்ச்சலதாய்
வெளியே தேடும் பொறுப்பளிக்கும்
கள்ளம் கபடு நீக்குதற்குக்
கல்வி யொன்றே பிடிமானம்
அள்ளிச் சிறப்பைக் களிப்பதற்கே
அழகாய் வழங்கும் மகிழ்வோமே

*8. புகழேந்தி*

கொடுக்கக் கொடுக்கக் குறையாது
கொள்ளை அடிக்க முடியாது
எடுக்கும் பிறவி ஏழினிலும்
இதமாய்க் காக்கத் தவறாது
நடுக்க மின்றி கற்றவரோ
நன்றாய் உலகை ஆண்டிடுவார்
கடுமை யான பாறைநிலம்
கல்லா தவரோ விலங்கினமாம்.

*9. சேந்தன்குடிச் செந்தமிழாழன்*
*புதுக்கோட்டை.*

கல்வி உன்றன் வாழ்க்கையிலே
கசடைப் போக்கும் மாமருந்தாம்
கல்வி அறிவால் உயர்நிலைகள்
காலம் கடந்தும் நிலைத்திருக்கும்
கல்லார் முன்னே உன்வார்த்தை
கயமை நீக்கும் ஒருளியாம்
வல்லார் கண்டும் பணியாதே
வாய்மை நெறியை மறவாதே!

*10. குளோரி சக்தி*

வெள்ளம் கொண்டு செல்லாது
வீணே மடிந்து சிதையாது!
உள்ளம் நின்றே ஒளிர்ந்திடுமே
உவகை தந்து பெருகிடுமே!
வெள்ளி மீனாய் விளங்கிநிதம்
விடியல் காணச் செய்திடுமே!
அள்ளித் தருமாம் செல்வத்தை
அமுத சுரபி கல்வியுமே!

*11. வேளா. தமிழுறவன்*

கற்ற கல்வி உன்னுடனே
கடைசி வரைக்கும் வந்திடுமாம்
பெற்ற அறிவைத் தினம்காத்துப்
பேணி உன்னை வளர்த்திடுமாம்
உற்ற துணையாய் உடனிருந்தே
உயர்வைக் கூட்டும் அருமருந்தாம்
கற்றுக் கொள்ளும் கல்வியொன்றே
கலங்க மில்லாப் புகழ்தருமாம்

*12 மா பாலசுந்தரம்*

சிந்தை நிறைக்கும் தேனாகிச்
சிற்பம் செதுக்கும் உளியாகி
விந்தை புரியும் கல்வியுமே
விதியை மாற்றும் இறையாகும்!
சந்தைப் பொருளாய் வாழ்வினிலே
சறுக்கும் நிலையும் தாராது
மந்தை போற்றும் அரசாகி
மகிழ உயர்த்தும் எந்நாளும்

*13. கவிஞர் செகவான் மதுரை.*

வளரும் கல்வி ஒன்றானால்,
வாழ்க்கைப் பயணம் நன்றாகும் !
தளரும் எண்ணம் சென்றோடும்,
தன்னம் பிக்கை உண்டாகும் !
கிளறும் நெஞ்சில் வந்தோடும்,
கேள்விக் கணைகள் பந்தாடும் !
உளறும் உள்ளம் உருப்படுமே,
உயர்வாய்க் கல்நீ விருப்புடனே !

*14. ஆ. முருகேசுவரி*

ஏடெ டுத்து காத்திடவே
ஏற்றம் இங்கே நேர்கிறதே
பாடு பட்டு படித்திடவே
பாழும் மனமும் மாறிடுமே
வீடும் உயர்வு கண்டிடவே
விடியல் தேடும் விழிகளுமே
நாடும் உயர்வு பெற்றிடவே
நாளும் கல்வி கற்போமே

### 15. வீரா பாலச்சந்திரன்

கற்றல் என்னும் அறச்செயலைக்
காலம் முழுதும் உற்றிடுவோம்.
சற்றும் தயக்கம் வேண்டாமே
சாகும் வரைக்கும் கற்றிடுவோம்
பற்றிக் கல்வி பலபயின்றால்
பண்பும் அறமும் பெற்றிடுவோம்
நெற்றிப் பொட்டாய் அதுவன்றோ
நினைவில் நன்றாய் ஒற்றிடுவோம்

### 16. ஜாய் சத்தியா

ஒழுக்கம் பெறுதல் கல்விக்கே
உரியதென்றார் பெரியோர்கள் ,
இழுக்காய் இன்றோ பணம்பண்ணல்
ஏற்ற கல்வி என்கின்றார்,
ஒழுக்கம் உலகில் மதிப்பளிக்கும்;
உயர்ந்த பணமோ மகிழ்வளிக்கும்;
அழுத்த மாக இரண்டையுமே
அடைதல் கல்வி என்பேன்நான்.

### 17. வ. இராமதாசு தென்பசியார்

உள்ளத் தூய்மை உனக்களிக்கும்
உயர்ந்த இடத்தில் சேர்த்துவக்கும்
கள்ள மில்லா வாழ்வளிக்கும்
கல்வி ஒன்றே பெருஞ்செல்வம்
வெள்ளம் எதிலும் உருளாதே
வீணர் களவில் சிக்காதே
எள்ளி நகைக்கும் பகைவிரட்டி
எங்கும் உன்னை உயர்த்திடுமே

### 18. பாலு தியாகராசன்

கல்வி என்னும் அணிகலனே
காக்கும் நம்மைப் படைக்கலனாய்
இல்லார் வாழ்வும் எழிலுறவே
இனிதாய்க் கற்றால் வழிதருமே
நல்லார் உலகில் எவரென்றால்
நயமாய்க் கற்ற பெரியவரே
எல்லாச் சிறப்பும் பெற்றிடவே
என்றும் கற்றல் துணைவருமே

### 19. செண்பக ஜெகதீசன்..

நீரில் நெருப்பில் அழியாதே
நின்றே நிலைக்கும் ஒளியாக,
பாரில் உயர்ந்த படிப்பதுவே
பாரோர் இதயத் துடிப்பிதுவே,
வேரில் உரமாய் வளந்தருமே
வெற்றிக் கெல்லாம் தளமிதுவே,
நேரில் உணர்வாய் உயர்வினையே
நீயும் படிப்பாய் பயன்பெறவே...!

### 20. சு.சிவசுப்ரமணியன்.புதுச்சேரி.

தொட்டுத் தொடரும் முடிவிலியே!
தொடங்கும் வாழ்வின் முகவுரையே!
எட்டுத் திக்கும் வளர்பிறையே!
ஏட்டால் துலக்கும் நன்மறையே!
விட்டே விலகும் மாவிதியே!
வினையால் முந்தும் மாமதியே!
நட்டால் உலகை மாற்றிடுமே!
நலங்கள் நாட்டில் உலவிடுமே!

### 21. பொ.முத்துராக்கு

கல்வி கற்க அறிவோங்கும்
கற்றோர் அவையில் சிறப்போங்கும்
நல்ல குணங்கள் மிகச்சேரும்
நாடும் போற்றிப் பாராட்டும்
வெல்ல முடியாப் பெருஞ்செல்வம்
விடியல் தருநற் கதிரோனே
இல்லம் அறிவால் நிறைகாணும்
என்றும் கற்றல் சிறப்பாமே.

### 22. பிரேமா ரமணி

கல்வி என்றும் துணை நிற்கும்
காலம் அழியா நிலை ஏற்கும்
அல்லும் பகலும் அதை நோக்கி
அறிவு தன்னைச் செறிவூட்டி
நல்லோர் வாழ்வில் நலந்தந்து
நாளும் உயர வழிகாட்டிச்
சொல்லில் வல்லோர் ஆக்கிடுமே
செல்வம் நிறைந்து புகழ்பெறுமே

### 23. அருணாசலம்

பொன்னும் பொருளும் பொய்த்தாலும்
போற்றும் கல்வி பொய்க்காதே!
மின்னும் சுற்றம் தொலைந்தாலும்
மேலோர் வாக்கு வாழ்த்திடுமே!
மண்ணில் மாண்பு மலர்வதெலாம்
மாற்றும் கல்வி ஒன்றாலே!
எண்ணும் எழுத்தும் எந்நாளும்
ஏற்றம் தந்தே உயர்த்திடுமே!

### 24. மஞ்சுளா ரமேஷ் காஞ்சிபுரம்.

கற்றல் வாழ்வில் நன்மைதரும்
கவலை தனையும் மாற்றிவிடும்
சுற்றம் தாரா இன்பமதைச்
சுவைக்கத் தருமே நற்கல்வி
உற்ற துணையாய் வந்துநிதம்
உதவி நிற்கும் ஊன்றுகோலாய்
வெற்றிக் கனியைப் பெறுவதற்கே
வேட்கை யுடனே கற்றிடுவோம்.

### 25. முகிலை பாஸ்ரீ கன்னியாகுமரி

கல்வி கற்றால் யாவருமே
கவலை இன்றி வாழ்ந்திடலாம்
நல்லோர் உறவை நாடிநிதம்
நலமாய் வாழ்வைப் பேணிடலாம்
இல்லை என்னும் சொல்மறந்தே
இரக்க முடனே செயல்படலாம்
கல்லா இருளில் வீழாமல்
கருத்தாய் வாழ்ந்து மகிழ்வீரே!

### 26. திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி.

அல்லல் போக்கும் அறிவியலில்
ஆற்றல் கொண்டால் அழகென்பேன்
வல்ல ஆசான் வரமளித்தால்
வாழ்வில் உச்சம் வருமென்பேன்
நல்ல கல்வி நலமளிக்கும்
நாட்கள் செல்லச் சுகமளிக்கும்
இல்லந் தோறும் இயல்பாகி
இன்பஞ் சூழும் இருளகன்றே!

### 27. முத்தமிழ்ச்செல்வி, நத்தம்

கற்ற கல்வி உன்றனையே
காலம் முழுதும் காப்பாற்றும்
பெற்றத் தாயே விட்டாலும்
பெருமை சேர்க்கும் வாழ்க்கையிலே
உற்றார் உறவின் அருமையினை
உழைப்பின் மூலம் உயர்த்திடுமே
வற்றாச் செல்வம் என்றென்றும்
வாழ்வில் கல்விச் செல்வமதே

### 28. ப. முருகன் யோகீஸ்வரர்

கல்வி ஒன்றேப் பெருஞ்செல்வம்
காலம் முழுதும் கைகொடுக்கும்
அல்லும் பகலும் துணையாகும்
அணையா விளக்காய் ஒளிவீசும்
சொல்லும் பொருளும் தந்துதவும்
சோர்வை நீக்கும் மருந்தாகும்
இல்லை என்ற நிலைமாற்றும்
இன்ப மென்றும் நிலைத்திடுமே.

### 29. அ.கிறிஸ்ரி நெவ்வல்

மண்ணில் மலர்ந்த யாவிலுமே
மறையுங் குணமும் சேர்ந்திருக்கும்
விண்ணில் காணும் காட்சியுமே
விடியல் தோன்ற மறைந்துவிடும்
பண்ணில் சேரும் பாடல்களும்
பழமை என்றே மறைந்திடலாம்
எண்ணந் தன்னில் எழுதிக்கொள்
என்றும் வாழும் கல்வியொன்றே!

### 30. தி. இராஜபிரபா தேனி

எண்ணும் எழுத்தும் கண்ணாகும்
என்றும் நமக்குத் துணையாகும்
மண்ணில் வாழ வழிகூறும்
மாற்றம் பலவும் உருவாக்கும்
உண்ணும் உணவும் உடல்சேரும்
உற்ற துணையாய் உயிர்காக்கும்
வண்ண மயமாய் வாழ்வோமே
வாழும் நாட்கள் முழுமையுமே

### 31. பா.ச.கண்ணன்

உலகில் உயர்ந்து நாமோங்க
உற்ற கல்வி உதவிடுமே
கலகம் அறிந்து செயல்படவும்
கண்ணின் மணியாய் இருந்திடுமே
பலமாய்ப் படிகள் கொண்டதுவே
பண்பில் நம்மை உயர்த்திடுமே
விலகல் ஏனோ வேண்டாமே
விரும்பி நாமும் படிப்போமே

### 32. வாசன் சாவி

கற்ற கல்வி வாழ்விக்கும்
காணும் இன்பம் காலமெல்லாம்
உற்ற பெருமை உலகளாவ
உணர்வு இங்கே உனக்காக
பெற்ற பேரும் பெரிதுவக்க
பேணிக் காத்துச் சிறந்திடவே
வெற்றிக் கனியாய் வாழ்வதனில்
வேண்டிப் பணிய வாழ்த்துவமே

### 33. கவிஞர் சு.பசுங்கிளி.

கல்வி நிலைத்து நின்றுகாக்கும்
காலம் கணிக்கச் செயல்சிறக்கும்
சொல்லும் பொருளில் சுவையூறும்
செல்லும் நாட்டில் மதிப்புமிகும்
அல்லும் பகலும் இனிமைதரும்
அகிலம் வெல்லும் அறிவுதரும்
கல்லும் கரையும் அன்புவரும்
காலம் சொல்லும் பண்புதரும்

### 34. மருத்துவர் தேவி

கற்றல் நன்றாம் உலகினிலே
கற்கும் காலம் குறைவினிலே
விற்றால் தீரும் பொருளிலையே
விண்ணோர் கற்க இடமிலையே
சற்றே யோசி தவறிலையே
செல்வம் சேரும் நிலைவருமே
பற்றே கொள்வோம் படிப்பினிலே
பட்டம் பெற்றுச் சிறப்போமே

### 35. தம்பித்துரை குணத்திலகம்

கல்வி கற்க ஒளிபிறக்கும்
காலம் கடந்தும் வழிபிறக்கும்
நல்ல நூல்கள் தெரிந்தெடுத்து
நாளும் படிக்க வளம்பெருகும்
அல்லல் நீங்கி வாழ்ந்திடவே
ஆற்றும் அறிவைப் பெறவேண்டும்
சொல்லில் அடங்கா நன்மைகளைத்
தொடர்ந்து வழங்கும் இதுவொன்றே

### 36. இரா. வேணுகோபாலகிருஷ்ணன்.

உந்தன் உளத்தில் ஒளியேற்றி
உயர வைக்கும் நற்கல்வி
மந்தி ரங்கள் ஏதுமிலை
மருட்சி இன்றிக் கற்றிடுவாய்!
முந்திச் செல்வாய் பந்தயத்தில்
முதன்மை பெறுவாய் போட்டிகளில்
செந்த மிழ்போல் உயர்ந்திடுவாய்
செழித்து வாழ்வாய் உலகினிலே

### 37. இரா.மதனகோபாலன், தருமபுரி.

கொள்ளைப் போகாச் செல்வமிது
கொடுக்கக் கொடுக்க வளர்ந்திடுமே
எல்லை இல்லை நாம்படிக்க
ஏற்றம் தருமே வாழ்க்கைக்கு
பள்ளம் மேடு யாவிலுமே
பார்த்து நடக்க ஒளிதருமே
கல்வி ஒன்றே நமையுயர்த்தும்
கடவு ளாக இருந்திடுமே.

### 38. திலகவதி பாஸ்கர்

தன்னால் இயலும் நம்பிக்கை
தருமே தயக்கம் இல்லாமல்
அன்பின் மொழியில் மாற்றிநித்தம்
அழகாய் எங்கும் ஒளிவீசும்
என்றும் புகுத்தும் நல்லவையே
ஏற்றம் வீசும் வாழ்வினிலே
இன்னல் களையும் இனிமையினை
ஈந்தும் உயர்வை எட்டிடுமே

### 39. கோசலா ஞானம்

கல்விக் கடலில் நீந்திடுவோம்
காலம் எல்லாம் பயனடைவோம்
செல்வம் பெருக உழைத்திடுவோம்
சிறுகச் சிறுகச் சேமிப்போம்
வல்லச் செய்கை ஓங்கிடவே
வாழ்வில் நல்ல வழிசமைப்போம்
துல்லி யமாக நுண்ணறிவும்
துலங்க நாமும் வாழ்வோமே.

### 40. கவிஞர் முருகுபாண்டியன்

கல்வி வழங்கும் அறிவுடைமை
காலம் இயக்கும் பயனுடைமை
சொல்லும் செயலும் ஒன்றுபடும்
துறக்கம் மண்ணில் வென்றுவிடும்
வெல்லும் நெறியை உருவாக்கும்
வேல்கூர் மதியே கருவாகும்
செல்லும் இடத்தில் திருவாகும்
தேர்ந்த அறிவின் தீர்ப்பாலே

### 41. பவானி ரெகு

கல்வி கண்ணைத் திறந்துவிடும்
காலம் வெல்லத் துணைநிற்கும்,
செல்லும் வழியில் ஒளிபாய்ச்சிச்
சிறந்த தொன்றைத் தெளிவாக்கும்,
தொல்லை துன்பம் நேர்ந்திடாமல்
தொடக்கம் முதலே காத்துவிடும்,
நல்லோர் வளரக் காக்கின்ற
நனிசெய் கற்கை செய்வோமே!

### 42. க.தங்கவேலு.

கற்றல் உன்னைக் காத்திடுமே
காலம் முழுதும் வாழ்த்திடுமே
உற்றார் உயர்வைப் புகழ்ந்திடவே
உந்தன் பெருமை உலகறியும்
குற்றம் விலகி நின்றிடுமே
குடும்ப வாழ்வும் சிறந்திடுமே
கற்றோர் மதிக்க வாழ்ந்திடுவீர்
கடமை பெரிதாய்ப் போற்றிடுவீர்.

### 43. பொன்னணிக்கோ

கற்போர் விழியில் ஒளிதந்து
கனவை வெல்ல வழிகொடுக்கும்!
பற்றிப் பிடித்தால் உயர்வளித்துப்
பாரில் புகழால் நனையவைக்கும்!
தொற்றும் வறுமை வடியவைத்துத்
துணையாய்ச் செல்வம் பெருகவைக்கும்!
சிற்பம் போலே உனைச்செதுக்கிச்
சிறப்பை நல்கும் கல்விபோற்று

### 44. கமலா ஜெயபாலன்

அழிக்க முடியாச் செல்வமிதே
ஆக்கும் அறிவை மாந்தர்க்கே
வல்ல இறைவன் துணையுடனே
வாழ்வில் உயர வழிகாட்டும்
பள்ளம் மேடும் கண்டாலும்
பாதி வழியில் அழியாதே
அள்ள அள்ளக் குறையாத
அமுத சுரபி இதுவன்றோ

### 45. இளையதீபன்

மாந்தர் மடமை போக்கிடுமே
மண்ணிற் சிறப்பு சேர்த்திடுமே
சாந்தம் எங்கும் நிலைத்திடுமே
சகல நலமும் வாய்த்திடுமே
காந்தம் போலக் கவர்ந்திடுமே
கண்ணில் மணியாய்க் காத்திடுமே
வேந்தர் போலு முயர்த்திடுமே
வெற்றிக் களிப்பில் ஆழ்த்திடுமே

### 46. கந்தவனம் கோணேஸ்வரன்.

கல்வி யொன்றே உயர்செல்வம்
காலம் முழுதும் வருஞ்செல்வம்
நல்லோர் உறவை உருவாக்கும்
நலங்கள் பெறவே வழிகாட்டும்
வல்லோன் என்ற புகழ்சேர்க்கும்
வளங்கள் கூட்டித் துயரழிக்கும்
எல்லோர் மனதும் உனைவாழ்த்தும்
என்றும் இன்பம் நிலைபெறுமே.

### 47. மதுரை குமரன்

கண்ணே பாப்பா எழுவாயே
கனிவாய்ப் பாடம் படிப்போமே
விண்ணே கல்விச் சுவரெல்லை
விடியல் நமக்கே அறிவாயே
கண்ணே மணியே கற்பாயே
கற்றே கலைகள் வளர்ப்போமே
மண்ணில் அறிவைப் பெற்றிடலாம்
மக்கள் மனதில் நின்றிடலாம்

### 48. ஓசூர் மணிமேகலை

கல்வி என்றும் நிலைத்திடுமே
கற்ற மனிதர் புகழ்பெறுவார்
செல்வம் யாவும் உலகினிலே
சீராம் கல்விக் கிணையாமோ
சொல்லும் செயலும் வளமாகும்
சோர்ந்தி டாது கற்றாலே
வெல்லும் திறனும் உயர்ந்திடுமே
வேராம் கல்வி உணர்ந்திடுவீர்

### 49. செ நிறைமதி

வற்றாச் செல்வம் பெற்றிடுவோம்
வையம் போற்ற வாழ்ந்திடுவோம்!
கற்கும் அறிவால் உயர்ந்திடவே
கல்வி அறிவைப் பெற்றிடுவோம்!
வெற்றி வாழ்வில் பெற்றிடவே
விண்ணும் போற்றக் கற்றிடுவோம்!
குற்றம் களைந்து கற்றிடுவோம்
குடியின் பிறப்பை உயர்த்திடுவோம்!

### 50. மணிமொழி லிங்கம்

கள்ளம் கபடம் முதலான
கசடு தன்னை நீக்கிடுமே !
உள்ளம் தன்னில் நம்மெண்ணம்
உயர்வாய் நிறைத்துக் காத்திடுமே!
வெள்ளம் அனைய மகிழ்வினையே
வென்று சேர்க்க உதவிடுமே!
துள்ளும் மனமே எந்நாளும்
தூய கல்வி பெற்றிடவே !!

### 51. பிரியங்கா சிறிமோகன் பிரித்தானியா

கற்க அறிவு பெருகிடுமே!
காலம் முழுதும் துணைவருமே!
குற்றம் நீக்கி வளமாக்கும்
குறைகள் தீர்க்க வழிகாட்டும்
வற்றாச் செல்வம் அதுவன்றோ!
வாரி வழங்கும் பயன்களையே!
பற்றாய்க் கற்போம் கல்விதனை
பாரை வெல்வோம் பண்புடனே!

### 52. கண்ணன் நடராஜன்

கல்வி கற்க வயதில்லை
கருத்தால் உணர்ந்து கற்பதுண்டே
சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்
சொத்தாய் நாமும் கருதுவோமே
நல்லக் கருத்தை நாம்கற்றால்
நலமாய் நாளும் வாழலாமே
வெல்லம் போலே சுவைத்திடுமே
விருத்தப் பாடல் உரைக்கையிலே

### 53. இரா.கவிதா, திண்டுக்கல்

வாழ்வின் முழுமை கல்வியாகும்!
வாழ்க்கை முழுதும் துணையாகும்!
ஏழ்மை நிலையை மாற்றிடுமே!
என்றும் இனிமை தந்திடுமே
தாழ்ந்து போகாத் தன்மானம்
தந்தே நமக்குத் துணிவளிக்கும்!
ஆழ்ந்து படிக்கும் அறிவெல்லாம்
அழகாய்த் தந்து வாழ்த்திடுமே!

### 54. .கோவிந்தம்மாள் ரத்தினம்

கற்கும் நூல்கள் கடலளவாம்!
கற்கும் காலம் கையளவாம்!
முற்றா இளமை முதற்காலம்!
மூளும் நோய்கள் சிலகாலம்!
மற்றும் உறக்கம் மறுபாதி;
மறதி மடியும் பெறும்மீதி!
குற்றம் இல்லா நூல்தேர்ந்தே
குருகைப் போலக் கற்போமே!

### 55. இளவல் ஹரிஹரன் மதுரை

கல்விச் செல்வம் ஈட்டிடுக
கற்ற சொல்லில் காட்டிடுக
நல்லொ ழுக்கம் ஊட்டிடுக
நல்லோர் நடையைப் போட்டிடுக
கல்லா தோர்க்கும் தீட்டிடுக
கல்வி ஞானம் மூட்டிடுக
பல்லோர் சபையில் ஏற்றிடுக
பகுத்த றிவாலே போற்றிடுக.

### 56. ரேகா ராஜ்குமார்

கல்வி கற்போர் எல்லோரும்
காட்சிப் பொருளாய்ப் காண்பதுமேன்?
கல்லா தவரை வெற்றாளாய்க்
கண்ணால் காணல் தவிர்த்திடுவோம்!
கல்லாய் மனதைப் படைத்தவர்கள்
கயவர் வாழும் உலகமிதில்
இல்லம் செழித்து வாழ்ந்திடவே
இனிதே கற்போம் பகுத்தறிவை!

### 57. சுப கல்யாணம்

கற்றோர் தானே வாழ்வினிலே
காண்பார் உயர்வை உலகினிலே.
மற்றோர் எல்லாம் மடமையினால்
மகிழ்ச்சி இழந்து தாழ்ந்திடுவார்.
சற்றே உணர்ந்து கற்றிடுவோம்
சரிவை நீக்கி வாழ்ந்திடுவோம்.
நற்றேன் மொழியைப் போற்றிடுவோம்
நல்லோர் மதிக்க வாழ்ந்திடுவோம்.

### 58 மலர்செல்வி

கல்வி என்றும் கற்கண்டாம்
கற்றால் நமக்கும் நலமுண்டாம்
நல்ல வழியின் ஒளிவிளக்காம்
நன்மை பயக்கும் அருமருந்தாம்
செல்வம் சேர்க்க உறுதுணையாம்
செல்லும் வாழ்வின் வழித்துணையாம்
எல்லாம் வளர்க்கும் ஊடகமாம்
என்றும் பயில்தல் சிறப்பாகும்.

### 59 வீ.க.பொன்னையா

கல்வி நமக்கோ ஒளிவிளக்கு
கற்றா(ல்) லென்றுந் துணைநமக்கு
எல்லா(ம்) மிருந்தும் பலனில்லை
என்று(ம்) முணர்ந்தால் பயமில்லை
அல்லல் தீர்க்கும் மறவாதீர்
அறிவை ஊட்டத் தயங்காதீர்
இல்லார் படித்து விழித்தாலே
இல்லம் மகிழ்ந்து செழித்திடுமே*

### 60 ஜெயசக்தி பிரபாகரன்.

செல்லும் இடத்தில் எந்நாளும்
சிறப்பாய் நாமும் வாழ்ந்திடவே
கல்வி ஒன்றே கைகொடுக்கும்
காலம் யாவும் வளமுடனே
அல்லும் பகலும் அயராமல்
ஆற்றல் தனையும் பெருக்கிடவே
சொல்லும் செயலும் மேன்மைபெற
சூடும் வாகை நிலைத்திடுமே!

### 61. த. கி. ஷர்மிதன்

உள்ளத் தொளியே அதுவாகும்
உலகு மதனா லீடேறும்
வெள்ளம் போலே பிரவாகம்
வெற்றிக் கனியை யினிதீயும்
கள்ளங் கபட மகற்றும்நற்
கல்வி யதனைப் பெற்றாலே
பள்ள மென்ப தறியாமற்
பாரிற் சிறந்து வாழ்வோமே

### 62. ஔவை

கல்வி கற்ற மனிதர்கள்
காலம் தன்னில் நிலைப்பார்கள்
நல்ல பண்பை நிலைநாட்டி
நாளும் வாழ்வில் உயர்வார்கள்
இல்லை என்று சொல்லாமல்
இருக்கும் அறிவை விதைப்பார்கள்
எல்லை யில்லாக் கல்வியினை
என்றும் கற்கத் துணிவார்கள்

*63. திருமதி. சரசு செல்வம் மலேசியா*

அண்டம் போற்றும் செல்வமிதே
ஆடை யாகும் மனிதர்க்கே
காலம் முழுவதும் துணையாகும்
காட்சிப் பொருளாய் வழிகாட்டும்
வாழ்வில் இறக்கம் கண்டாலும்
வாழ்க்கைப் பயணம் அழியாதே
உன்னைச் செதுக்கிக் காக்கின்ற
உன்ன தத்தைப் போற்றிடுவாய்!

*64 தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு*

நாமும் கற்கும் பாடங்கள்
நமக்கே யென்றும் வழிகாட்டி
தாமே முயன்று கற்றிடவும்
தருமே உலகம் விழிப்பூட்டி
பாம ரனுமே கற்றிடனும்
பலவும் அறிந்து உயர்ந்திடனும்
பூம ரமாக மணம்பரப்பப்
புவியில் கல்வி கற்றிடுவோம்

*65 ஜெகதீஸ்வரி ரவீந்திரன்*

கற்று நாமும் முன்னேறிக்
கடலா யறிவைப் பெருக்கிடலாம்!
பெற்றுக் கொள்ள மதிப்பினையும்
பேறாய்க் கல்வி இருந்திடலாம்!
பற்றுக் கொண்டே நம்படிப்பால்
பாரில் உள்ளோர்க் குதவிடலாம்!
நன்றே பண்பும் வளர்ந்திடவே
நல்ல வாழ்வைப் பெற்றிடலாம்!

*66. பாரதி கரு. இளஞ்செழியன்*

கற்றுக் கொள்வாய் தவறின்றி
கனவும் வேண்டாம் தமிழின்றி
பெற்ற கல்வி பெரிதுயர்த்தும்
பெறுவாய் அதனை முன்னிறுத்தி
பற்று வேண்டும் நெஞ்சமதில்
படித்தால் உன்னைக் கொஞ்சுமது
சற்றும் படிப்பைத் துறவாதே
சறுக்கல் வேண்டாம் மறவாதே

*67. மாலதி திரு. தஞ்சாவூர்*

கல்வி கற்றால் சிறப்புறலாம்!
காலம் எல்லாம் மகிழ்வுறலாம்!
அல்லல் இன்றி வாழ்ந்திடலாம்!
அறிவை வளர்த்து பயனுறலாம்!
இல்லம் செழிக்கச் செய்திடலாம்!
இன்பம் நிலைக்கப் பெற்றிடலாம்!
நல்ல நிலையை அடைந்திடலாம்!
நல்லோர் அவையில் வென்றிடலாம்!

*68. கவிஞர் கேசவதாஸ்*

கல்வி தருமே நம்பிக்கை
கற்கக் கிட்டும் பெரும்புகழே
செல்வம் தானும் நிலைத்திடுமோ
செல்லும் வழியும் அறிந்திடுமோ
கல்விப் பெருக்கம் நிலைபெருக்கும்
காலம் கடந்தும் நிலைத்திருக்கும்
தொல்லை எல்லாம் தீர்த்திடுமே
துன்பம் தன்னைத் துடைத்திடுமே.

*69 குயில்.மு.இரசியா பேகம்*

பள்ளிப் போகும் பிள்ளைகள்!
பாடிப் பறக்கும் கிள்ளைகள்!
கள்ள மில்லாக் கனிமொழிகள்!
கல்வி கற்க வாருங்கள்!
துள்ளித் திரியும் பருவத்தில்
துடுக்கை அடக்கி கூடுங்கள் !
உள்ளம் உயரப் படியுங்கள்!
உலகம் போற்ற வாழ்ந்திடவே!

*70. இரா இரத்தினகுமார்*

மதியைப் பெறவே நாடோறும்
மகிழ்ந்து கற்பாய் கல்வியையே!
கதியாம் கல்வி கசடறவே
கவனம் பேணிக் கற்பாயே
நிதியும் பெறலாம் வாழ்க்கையிலே
நீயும் பதவி பெறலாமே!
விதியை வென்றே இன்னல்கள்
விலக்கிப் படிப்பில் மிளிர்வாயே/

### 71. ஜெ. வசந்தி இலங்கை

பற்று டன்நீ பள்ளிசென்று
பட்டம் புகழை நீயடைந்து
செற்ற லுடனே வாழ்ந்துவந்தால்
சேற்றில் பூக்கும் பூவாவாய்!
கற்ற கல்விக் கடலுக்குக்
கரையு மில்லை பூமியிலே
பொற்பு டன்வாழ்ந் திடுவாயே
பொறுமை யுடனும் நீகற்றே..

### 72. ம.பழனிச்சாமி

கல்வி நமக்கு வழிகாட்டும்
காலம் எல்லாம் துணையிருக்கும்
நல்லோர் கூறும் அறிவுரைகள்
நாளை வாழ்வில் கைக்கொடுக்கும்
எல்லை இல்லா இவ்வுலகில்
ஏற்றம் தருமே நற்கல்வி
தொல்லை இன்றிக் கற்றிடுவோம்
தொன்மை யான முத்தமிழே

### 73. கோபால்

கல்வி கற்றல் அவசியமே
காலம் தாழ்த்தக் கூடாதே
செல்வம் சேர்க்கும் குறிக்கோளே
செய்யும் தொழிலாய்க் கொள்ளாதே
நல்ல புலமை தோன்றிடுமே
நான்கு மொழியும் கற்றிடவே
சொல்லில் தூய்மை கொண்டாலே
சொர்க்கம் கையில் வந்திடுமே

### 74. நல்லமுத்து

வறுமை யின்றி வாழ்வதற்கும்
வாழ்வில் உயரம் அடைவதற்கும்
சிறுமை யகன்று செழிப்பதற்கும்
சிறந்த மனிதர் நல்லுறவில்
பொறுமை கண்டோர் பாராட்டப்
புவியில் கல்வி ஒன்றேதான்
நறும ணம்வீ சும்மலராம்
நன்மை கொடுக்கும் நல்மருந்தாம்.

### 75. மகேஸ்வரி முருகையா.

கற்றோர் உள்ளம் தெளிவாகும்
கயமை பொய்மை களைந்தேத்தும்
மற்றோர் உலகம் உனக்காகும்
மனிதம் தன்னை வாழ்விக்கும்
பெற்ற கல்வி துணையாகும்
பெருமை தந்தே உயர்வாக்கும்
உற்ற நேரம் உனைக்காக்கும்
உறவும் நட்பும் ஒன்றாகும்

### 76. எல்லம்மாள்கிருஷ்ணமூர்த்தி

கற்க கற்க கற்கண்டாய்க்
காலம் இனிக்கும் வாழ்வினிலே
நிற்கும் புகழும் நிலைபெறவே
நீங்காப் புகழைத் தந்திடுமே
பற்றாய்ப் படித்தால் பாரினிலே
பாங்காய் உயர வழிதருமே;
சுற்றம் சூழ வாழ்த்திடுமே
சுடராய் ஒளிர்ந்து வழிதருமே

### 77. இந்திராணி தங்கவேல்

கல்வி மட்டும் இருந்தாலே
கனவும் நித்தம் கைகூடும்.
சொல்லும் வாக்கும் நாவினிலே
சொர்க்கம் தருமே வாழ்வினிலே
கல்லும் கூடக் கரைந்திடுமே
கலைகள் பலவும் அறிந்திட்டால்
வெல்லும் புவியில் கற்றலுமே
வெற்றி வாகை சூடிடுமே!

### 78. முத்து பரமசிவம்

கல்வி கற்க அறிவூட்டும்
காலம் நம்மைச் செறிவூட்டும்
எல்லா உலகும் நமதாக்கும்
எங்கும் நம்மை வளமாக்கும்
வல்லோ னாக வழிகாட்டும்
வசந்தம் யாவும் செறிவூட்டும்
செல்லு மிடத்தைச் சிறப்பாக்கிச்
செல்வம் சேரச் செழித்திடுமே

## 79. தென்றல்கவி

வெள்ளம் கொண்டு போகாது
        வெந்த ணலிலும் வேகாது
அள்ளி நீயும் கொடுத்தாலும்
        அழகாம் கல்வி குறையாது
தள்ளி நீயும் போகாது
        தனித்தே நிற்கக் கற்றிடுவாய்
பள்ளிப் படிப்பை முடித்தாலும்
        பலவும் கற்றால் பண்டிதனே

## 80. உடுவிலூர் கலா

கல்வி ஒன்றே கவினாகும்
        காலம் முழுதும் சுகம்சேர்க்கும்
நல்லோர் வாழ்வில் நலங்களையே
        நன்றே தந்து மகிழ்வூட்டிப்
பல்லோர் தினமும் பாரினிலே
        பண்புடன் வாழ வழிசெய்து
வல்லோர் என்றே நிறைவாக
        வரமாய் வந்த திகமதிலே

## 81. செல்வராஜா சுதாகரன்- வயலூரான்

கல்விச் செல்வம் கரைசேர்க்கும்
        காலம் முழுதும் புகழ்கூட்டும்
செல்வம் சேர்க்கும் வழிகாட்டும்
        செகத்தில் மகிழ்வை எமக்களிக்கும்
பொல்லா வினைகள் தனையகற்றும்
        புகழும் எமக்குப் பெருகிடுமே
நல்லோர் நட்பை நமைச்சேரும்
        நலங்கள் யாவும் தந்திடுமே.

## 82. ஞால இரவிச்சந்திரன்

கல்விக்(கு) அழகாம் எதுவென்றால்
        கற்ற தொழுகல் அதுவாகும்
கல்விப் பெருமை எதுவென்றால்
        கடலாய் வற்றா ததுவாகும்
கல்வித் தருவ(து) எதுவென்றால்
        கருணைக் கண்கள் அதுவாகும்
கல்விச் சிறப்பாம் எதுவென்றால்
        கற்ப தார்க்கும் பொதுவாகும் !

## 83 மங்களரூபி ஜெகதீஸ்வரன்

அரிய மனிதப் பிறவியிலே
        அழியாச் செல்வம் இதுவன்றோ
உரிய வகையில் கற்றிடவே
        உயர்வோம் வாழ்வில் மலையெனவே
பெரியோர் சிறியோர் யாவர்க்கும்
        பெருமை சேர்க்கும் வழியிதுவே
விரியும் அறிவால் மண்ணுலகில்
        விழிப்பாய்ச் செயல்கள் ஆற்றுவோமே !

## 84. வா.சண்முகம்

கற்ற கல்வி என்றென்றும்
        கடவுள் போலக் காத்திடுமே
உற்ற உயிராய் உள்ளத்தில்
        உண்மை யாக இருந்திடுமே
பெற்ற செல்வம் போனாலும்
        பெரிதாய் இதுவே நிலைத்திடுமே
சற்றும் குறைவே இல்லாமல்
        சரியாய் நாளும் பயின்றிடுவோம்.

## 85. நிறைமதி நீலமேகம் பெண்ணாடம்.

கல்வி தானே கண்ணாகும்
        கற்க அறிவும் ஊற்றாகும்!
நல்ல நூலைக் கற்றிடுவோம்
        நாடும் வீடும் நலமாகும்!
நல்லோர் பண்பு கிடைப்பதற்கும்
        நண்ப னாகத் துணைவருமே!
அல்லல் நீக்கி வாழ்வதற்கே
        ஆசா னாக வழிகாட்டும் !

## 87. நீலயூர் சுதா

கல்வி கற்றால் உனைக்கண்டு
        காதல் செய்வார் பலபேர்கள்
சொல்லி வேலை பெற்றிடலாம்
        சொந்தக் காலில் நின்றிடலாம்
தப்பி வாழ முடிவதற்கும்
        தர்மம் கூடக் கொடுப்பதற்கும்
கற்கும் செயலே காரணமாம்
        காலம் வெல்லும் கதையாமே

### 88. இரா.வெங்கடாசலம்

கல்வி நம்மைக் காத்திடுமே
காலம் முழுதும் உடனிருந்தே
கல்வி எறிந்தே துன்பங்கள்
கடமை நிறைக்க உதவிடுமே
எல்லை இல்லை படிப்பதற்கே
என்றும் கல்வி கற்றிடலாம்
நல்ல வாழ்க்கை அமைத்திடலாம்
நாளை விடியல் நமதெனலாம்.

### 89. ஜெயஸ்ரீ சதானந்தன்

ஏழ்மை விரட்டும் விருட்சமிது
ஏற்றம் எங்கும் வந்திடுமே
வாழ்வில் நீயும் வளம்பெறவே
வாகை நீயும் சூடிடவே
ஆழ்ந்து படிப்பாய் மானிடனே
அள்ளிக் கொடுப்பாள் கலையரசி
தாழ்வும் உனக்கும் வாராது
தரணி உன்னைத் தாங்கிடுமே.

### 90. இரா. செல்வ பாண்டியன் புத்தாம்பூர்.

கல்வி கற்கக் கலங்காதே,
கனவில் கரைந்து களிக்காதே.
அல்லல் அகலும் அதனாலே.
அனைத்தும் அடைவாய் அறிவாயே.
இல்லை இடர்கள் எப்பொழுதும்.
இன்றே ஏற்பாய் இச்செல்வம்.
தொல்லை தொடர்தல் தொலைந்திடுமே,
தொடங்கு தொழிலாய்த் தொய்வின்றி

### 91. படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

பல்லோர் வணங்கும் பாங்காகும்
பாகாம் அமுதம் மேலாகும் !
வல்லார் பணியும் வாழ்வா(க்)கும்
வான்வில் வகைபோல் தானா(க்)கும் !
நல்லோர் நனிதே நட்பா(க்)கும்
நாட்டில் சிறப்பே நன்றா(க்)கும் !
கல்வி கருவின் வித்தாகும்
காலம் வாழும் வையத்தே !

### 92. மு.வா.பாலாஜி

அறிவைக் கொடுக்கும் பெருஞ்செல்வம்
ஆற்றல் நிறைக்கும் களஞ்சியமாம்
குறிக்கோள் அடைய வழிகாட்டும்
குவிக்கும் சிந்தை ஒளியேற்றும்
பொறிக்கும் ஏட்டின் சாதனையாம்
போக்கும் மனத்தின் வேதனையாம்
தெறிக்கும் முயற்சி பலம்கூட்டும்
தெளிவாய் வாழப் பண்பூட்டும்

### 93. கவிநெஞ்சன் இராசகோபால்

அறிவின் ஆற்றல் பெருகிடுமே
அகிலம் வாழ்வும் இனித்திடுமே
அறியாப் பலதும் அறிந்திடலாம்
அள்ளிப் பருகி மகிழ்ந்திடலாம்
அறிவைக் கொண்டு அடுத்தோர்க்கும்
அன்பாய் சொல்லித் தந்திடலாம்
அறிவை வளர்த்து வாழ்ந்தாலே
அறமும் அன்பும் வளர்ந்திடுமே

### 95. கு.கதிரேசன்

கற்ற கல்வி பயன்தருமே
கல்லாப் பொல்லா மனிதரையே
வற்றச் செய்தே ஏங்கிடத்தான்
வருத்தி இருக்க வைத்திடுமே
ஏற்றம் உள்ள வாழ்வினையே
ஏமாற் றாது தந்திடுமே
குற்றம் இல்லா வாழ்க்கையையே
குறையில் லாமல் அதுதருமே...

### 96. க. இரவிச்சந்திரன்

கற்கை நன்றே அறிந்திடுவோம்
காலம் எல்லாம் பயின்றிடுவோம்
பொற்கை வளம்போல் புவிதனிலே
பொலிவாய் நாமும் வலம்வருவோம்
நற்றேன் என்னும் கல்வியினை
நாளும் நாடிச் சுவைத்திடுவோம்
சிற்பம் போலச் சிறப்புருவில்
செகத்தில் செழிப்பாய் ஒளிர்ந்திடவே

97. செபா சவிரிமுத்து

கல்வி மேன்மை தந்திடுமே
கடின முயற்சி செய்திடவே
நல்ல வழியைக் காட்டிடுமே
நாமும் விருப்பு கொண்டிடவே
அல்லல் நீங்கச் செய்திடுமே
அறிவைப் பெருக்கும் செல்வமதே
செல்லும் இடத்தில் மதிப்பாமே
சேரும் புகழும் மிகையாமே

98. கீத்தா பரமானந்தன்

உள்ளம் தன்னைப் புடமிட்டே
உயர்த்தி வைக்கும் கல்வியதே
பள்ளம் இல்லாப் பாதைகளைப்
பாரில் என்றும் நமக்காக்கும்
வள்ளல் ஆகச் சுரந்திடுமே
வனப்பா யாயுள் மாற்றிடுமே
அள்ளக் குறையாச் செல்வமிதை
ஆழ்ந்து நாமும் பெற்றிடுவோம்!

99. நிர்மலா பத்மநாபன்

வெள்ளம் அள்ளிப் போகாது
வேகும் தணலில் மடியாது
கள்ளம் உற்ற நெஞ்சினிலே
கசியச் செய்யும் நல்லுறவை
பள்ளம் மேடு இல்லாமல்
பண்பை வளர்க்கும் வாழ்க்கையிலே
அள்ளித் தருமே நன்மைகளை
ஆக்கம் பெருக்கி உயர்த்திடுமே!

100. இராம வேல்முருகன்

கல்வி ஒன்றே உனைக்காக்கும்
காலம் கடந்தும் புகழ்பூக்கும்
செல்வம் பெருக வழிகாட்டும்
செழிக்கும் உறவின் வகைகூட்டும்
வல்வில் ஓரி கரங்கள்போல்
வழங்கும் குணத்தை உனக்கூட்டும்
நல்லோ னாக உனைமாற்றி
நாட்டோர் மனத்தில் நிறுத்திடுமே!

# இன்று முதல்

செல்லும் வழிகளெல்லாம் பூக்கள்..
தன்னிதழ் விரித்து
சிரித்தப் பூக்கள் இன்றோ
பூஞ்செடிகளிலில்லை..
வீழ்ந்து கிடந்தன...
வாழ்ந்து கெட்ட மனிதர்களாய்!

என் மனம் பூக்களை
ஒதுங்கி நடக்கல்லை...
ஒதுக்கியும் நடக்கவில்லை...
மிதித்தே நடக்கிறது...
துளியும் மதிப்பின்றி!

செல்லும் வழிகளெல்லாம் முட்கள்...
கூர்மை முட்கள்
இன்றோ முட்செடிகளிலில்லை...
உதிரிகளாய் எங்கெங்கும்
விழுந்து கிடந்தன...
வாழ்வை முடித்த மனிதர்களாய்!

என் மனம் முட்களை
ஒதுங்கி நடக்கிறது...
ஒதுக்கியும் நடக்கிறது...
மிதித்து நடக்கவில்லை..
பயத்தில் மதிப்போடு!

வாழ்வில் பூக்களுக்கு
ஒரு நியாயம்...
முட்களுக்கு
ஒரு நியாயம்...
பாகுபாட்டின் உச்சத்தில்
மிச்சத்தில் நான்!

அதனாலோ என்னவோ
என் மீது கோபங்கொண்ட
பூக்களெல்லாம் முட்களாயின...
மாறுமென்ற நம்பிக்கையில்
முட்கள் பூக்களாகும் நாளுக்காக...
இன்றுமுதல்
உங்களைப் போல நானும்!

- ம.சக்திவேலாயுதம்



## பெண்ணுக்குள் கவிதைகள்

பெண்ணவளிள் வதனத்தில்
பெருங்கவிகள் புதைந்திருக்கு!
மயங்கி நின்ற
கவிதை முன்னழகு!
மலைக்கச் செய்த
கவிதை பின்னழகு!
மின்னல் வளைந்த
கவிதை சிற்றிடை!
பின்னல் நெளிந்த
கவிதை சிறுநடை!
பட்டு விரித்த
கவிதை பாதங்கள்!
கம்மல் சிரித்த
கவிதை காதுமடழ்!
வளம் செழித்த
கவிதை பூப்பருவம்!
வில் ஒடித்த
கவிதை கரும்புருவம்!
குங்குமம் சூடியக்
கவிதை சிறுநெற்றி!
நிலவு பூசியக்
கவிதை கன்னம்!
சங்கு நீண்டக்
கவிதை கழுத்து!
சந்தனம் குழைத்த
கவிதை தேகம்!
அஞ்சனம் வரைந்த
கவிதை விழிகள்!
பழரசம் நிறைந்த
கவிதை இதழ்கள்!
சிறகடிக்க நினைக்கும்
கவிதை இமைகள்!
படபடப்பில் துடிக்கும்
கவிதை இதயம்!
மண்ணின் மரபுக்
கவிதை இளமை!
அந்தாதி எழுதிய
கவிதை பெண்மை!
ஆராய்ந்துப் பார்
தெரியுமதன் உண்மை!

**லீ. லியாகத்அலி.**

கும்பகோணம் சீனவாசா நகரில் உள்ள மரங்களெல்லாம் இவர்பெயரைச் சொல்லும். ஒவ்வொரு மரங்களிலும் ஒரு மருத்துவர் பெயர் இருக்கும். அரசு மருத்துவராக இருந்து ஓய்வு பெற்றவர் எனினும் தொடர்ந்து சமூக சேவைகளில் முன்னிற்பவர். ஊரடங்கு காலங்களில் தான் வசிக்கும் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு கேரம் போர்டு செஸ் போன்றவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தியவர். இதற்கெல்லாம் மேலாக பதினைந்து வருடங்களுக்கும் மேலாகத் தாய்ப்பாலின் அவசியத்தைத் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வழியாக வலியுறுத்தி வருபவர். தனது ஆடை யின் பின்புறம் தாய்ப்பாலின் அவசியத்தை வலியுறுத்தும் விளம்பர வாசகத்துடன் செல்பவர். ஆம் இத்தகைய சிறப்புடைய மருத்துவர் சாம்பசிவம் அவர்களைத்தான் இம்மாதம் நேர்காணல் செய்துள்ளோம்.



# தாய்ப்பாலே எல்லாம் தரும்...

## மருத்துவர் சாம்பசிவம்

**நேர்கண்டவர் :**
**தமிழ்ச்செம்மல் பாவலர்மணி**
**இராம வேல்முருகன்**

வணக்கம் ஐயா

? தாய்ப்பால் குறித்த ஒரு அமைப்பு தோன்றக் காரணம் என்ன?

எல்லா குழந்தைகளுக்கும் தாய்ப்பால் கிடைக்க வேண்டும் என்பதே இப்படி ஒரு அமைப்பு தோன்ற காரணம்

? எத்தனை வருடங்களாக இந்த அமைப்பு இருக்கிறது?

18ஆண்டுகளாக இயங்கி வருகிறது

? நீங்கள் இந்த அமைப்பில் என்ன பொறுப்பு வகிக்கிறீர்கள்?

இந்த அமைப்பை நிறுவியவர் என்ற முறையில் இவ்வமைப்பின் நடுவண் ஒருங் கிணைப்பாளராகப் பொறுப்பு வகித்து வருகிறேன்.

? தாய்ப்பால் குறித்த விழிப்புணர்வு அவசியமா?

மிகவும் அவசியம்

? பிறந்த குழந்தைக்கு முதன் முதலாக என்ன கொடுக்க வேண்டும்?

குழந்தையின் முதல் உணவாகவும், முழுமை யான உணவாகவும் சீம்பால் எனப்படும் நோய் எதிர்ப்பு சத்துக்கள் நிறைந்த தாய்ப் பாலையே கொடுக்க வேண்டும்.

? தாய்ப்பால் கொடுக்கவில்லை என்றால் குழந்தைக்கு என்ன விதமான பாதிப்பு கள் ஏற்படும்?

பல்வேறு விதமான நோய்த்தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் நோய் எதிர்ப்பு சக்தி இருக்காது

? தாய்ப்பாலை எவ்வளவு காலத்திற்குக் கொடுக்க வேண்டும்?

தாய்ப்பாலை குறைந்தது 2 வருடம் கொடுக்க வேண்டும். பிறந்த முதல் 6 மாதங்களுக்கு அதாவது 180 நாட்களுக்குத் தாய்ப்பாலைத் தவிர வேறு எதுவும் கொடுக்கக் கூடாது. தண்ணீர் கூடத் தேவையில்லை. கோடைக் காலத்திற்கும், குளிர் காலத்திற்கும் ஏற்ற வகையில் தாய்ப்பால் சுரக்கின்றது. ஆகவே முதல் 6 மாதங்களுக்கு, வேறு எதுவும் தேவையில்லை. 7ஆம் மாதம் முதல் தாய்ப்பாலுடன் வீட்டிலேயே செய்த மசித்த சாதம், இட்லி போன்றவற்றையும் சேர்த்துக் கொடுக்கலாம். இவற்றுடன் தாய்ப்பாலையும் இரண்டு வயது வரை அல்லது அதற்குப் பிறகும் நீடிக்கலாம்.

மேற்கூறிய இணை உணவுகளைக் கொடுக்காமல், வெறும் தாய்ப்பாலை மட்டும் வருடக்கணக்கில் கொடுத்தால் குழந்தை நோஞ்சானாகிவிடும். தாய்ப்பால் போதுமான அளவில் இருந்தால், எடை சீராகக் கூடும் சிறுநீர் ஒரு நாளைக்கு 6 தடவைக்கு மேல் வெளியேறும்.

? நோய் எதிர்ப்பு சக்தியைத் தாய்ப்பால் தரும் என்கிறார்களே? அது உண்மையா?

ஆம் உண்மைதான் தாய்பாலில் உள்ள Macrophages, Complement, Lysozyme, Lactoferin and igA எனப்படும் இம்யுனோகுளோபிலின் ஆகியவை குழந்தையின் குடலில் வியாதியை உண்டாக்கும் பல்வேறு கிருமிகளையும், நச்சுக்களையும் வெளியேற்றிவிடுகின்றன. ஆகவே தாய்ப்பால் பல்வேறு நோய்களிலி ருந்து குழந்தையைக் காப்பாற்றுகிறது. தாய்ப் பாலில் தேவையான சத்துக்கள் சரியான அளவில் கிடைக்கின்றன. எளிதில் ஜீரண மடைகிறது. நோய்களிலிருந்து காப்பாற்று கிறது. பாசத்தை ஊட்டி, உடல், மனம் மற்றும் மூளை வளர்ச்சியை மேம்படுத்து கிறது. அடுத்த கர்ப்பத்தை தாமதப் படுத்துகிறது. தாய்க்குப் புற்று நோய் வருவதைத் தடுக்கிறது. தாயின் உதிரப் போக்கை நிறுத்துகிறது.

? தாய்ப்பால் கொடுத்தால் அழகு குறையுமா கூடுமா?

நிச்சயமாக அழகும் குறையாது; உருவமும் குலைந்து போகாது. மாறாகத் தாயின் உடல் பருமன் குறைந்து, தேவையில்லாத வயிற்றுப்பகுதி கொழுப்பு மடிப்புகள் மறையும்; தாயின் கருப்பை விரைவாக சுருங்கும்; உதிரப்போக்கு குணமடையும்; மாதவிலக்கு சீரடையும்; தாய்ப்பால் கொடுப்பது மார்பகப் புற்றுநோய் மற்றும் ஓவரி என்னும் சினைப்பை புற்றுநோயை தடுக்கவல்லது என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

**? தாய்ப்பாலுக்கும் மார்பகப் புற்றுநோய்க்கும் என்ன தொடர்பு உள்ளது?**

தாய்ப்பால் கொடுக்காதவர்களுக்கு மார்பகப் புற்று நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

**? தாய்ப்பாலை மற்றவர் குழந்தைகளுக்கு வழங்குவது நல்லதா?**

நல்லதே வழங்கலாம் தவறில்லை

**? இரட்டைக் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்குவதில் சிரமம் ஏதும் உள்ளதா?**

சிரமம் எதுவும் இல்லை . ஒரே நேரத்தில் இரண்டு குழந்தைகளுக்கும் தாய்ப்பால் வழங்கலாம்.

**? தாய்ப்பாலை உட்கார்ந்துதான் கொடுக்க வேண்டுமா?**

தேவையில்லை; எந்த நிலை தாய்க்கும், குழந்தைக்கும் ஏதுவாக இருக்கிறதோ அந்த நிலையில் தயக்கமின்றிக் கொடுக்கலாம். ஆனால் குழந்தைக்கு புரையேறுதல், காதில் சீழ் வடிதல் போன்ற வியாதிகள் இருந்தால் படுத்துக்கொண்டு பால் கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

**? பால்கட்டிக் கொள்வது எதனால்? அதனை எவ்வாறு சரிசெய்யலாம்?**

குழந்தையை அடிக்கடி சப்பவைப்பதும், பாலை பீச்சி எடுப்பதுமே அதற்குச் சரியான சிகிச்சை ஆகும். இது வியாதியன்று; பதட்டமில்லாமல், தாய் நம்பிக்கையுடன் தொடர்ந்து பாலூட்டலாம். குழந்தைக்கு எந்த கெடுதலும் வராது.

**? தாய்ப்பால் கொடுப்பதால் குடும்பத்திற்கு என்ன நன்மைகள்?**

குடும்பத்தில் தேவையற்ற செலவுகள் ஏற்படாது. தாய்ப்பால் குடிப்பதால் குழந்தை நோய் எதிர்ப்புச் சக்தியுடன் ஆரோக்கியமாக வளரும். எனவே, வாந்தி; வயிற்றுப்போக்கு, சளி, ஒவ்வாமை போன்ற நோய்கள் தாக்குவது குறைவு. அதனால் வைத்தியச் செலவும் குறைவு. குடும்பத்தில் அமைதியும்; அன்பும் நிலவும். சீம்பால் குடித்த குழந்தைக்குப் பின்னாளில் சர்க்கரை நோய், இருதய நோய் போன்றவை தாக்கும் வாய்ப்பு குறைவு.

**? மருந்துகள் உட்கொள்ளும் தாய், தாய்ப்பால் கொடுக்கலாமா?**

பெரும்பாலான மருந்துகள் பாலூட்டும் சமயத்தில் தீங்குகளை உண்டாக்குவதில்லை. தாய்ப்பாலை தயக்கமின்றித் தரலாம். ஆனால், தைராய்டு சுரப்பியைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் மற்றும் கதிரியக்கம் கொண்ட Isotope மருந்துகளை உட்கொள்ளும் தாய், தாய்ப்பாலை குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. அது போல் டயசிபாம் என்னும் தூக்க மருந்துகள், பார்பிச்சுரேட்ஸ் எனப்படும் வலிப்பு மருந்துகள், டெட்ராசைக்களின், சல்பா மற்றும் குளோரம் பெனிகால் போன்ற ஆன்டிபயாடிக் மருந்துகளை பாலூட்டும் தாய் சாப்பிடக்கூடாது ஈஸ்ட்ரோஜன் என்னும் ஹார்மோன் மருந்து தாய்ப்பாலைக் குறைக்கும் தன்மை கொண்டது. அவைகளையும் சாப்பிடக்கூடாது.

**? மெலிந்த தேகம் கொண்ட ஊட்டச்சத்து சாப்பிட முடியாத தாய் குழந்தைக்குப் பாலூட்டலாமா?**




தாய்ப்பால் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன், மருத்துவர் மலர்விழி ஆகியோருடன் மருத்துவர் சாம்பசிவம்.

தாய்ப்பாலின் அளவும், குணமும் மெலிந்த தாயிடம் நன்றாகவே உள்ளது. ஆகவே தாய்க்கு ஊட்டச்சத்தைச் சாப்பிட ஊக்கப் படுத்தி, தொடர்ந்து பாலூட்டச் செய்யலாம்.

**? தாய்ப்பால் குடித்தவுடன் சில குழந்தைகள் வாந்தி எடுப்பதேன்?**

இது நோயன்று, இதை தவிர்க்க, பால் புகட்டும் போது குழந்தையின் தலைப்பகுதி சற்று உயர்ந்து இருக்குமாறு செய்ய வேண்டும். பாலைக் கொடுத்தவுடன் குழந்தையை பக்குவமாகத் தூக்கித் தோளில் கிடத்தி, முதுகை மெல்ல மெல்ல தட்டிக் கொடுக்க வேண்டும். 10-15 நிமிடங்கள் அவ்வாறு செய்தால், குடிக்கும் போது உணவுக்குழலில் தேங்கியிருந்த பால் வயிற்றுக்குள் முழுவதும் சென்று, அதன் அடையாளமாகக் குழந்தை ஏப்பம் விடும். அதன் பிறகு குழந்தையை படுக்க வைத்தால் வாந்தி எடுக்காது. குழந்தை அடிக்கடி வாந்தி எடுத்து எடை கூடாமல் இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும்.

**? நிறைமாதக் குழந்தைக்குத் தாய்ப்பாலைக் கொடுக்கிறோம். குறைமாதக் குழந்தைக்கு என்ன கொடுப்பது?**

குறைமாதக் குழந்தைக்கும் தாய்ப்பாலைத் தான் கொடுக்க வேண்டும். பிறந்த குழந்தைக்கு ஏற்ப தாய்ப்பால் மாறுபடும் தன்மையும், சிறப்பும் வாய்ந்தது; குறைமாதக் குழந்தையின் செரிக்கும் திறனுக்குத் தக்கவாறும், வளர்ச்சிக்கு ஏற்றவாறும் தாயிடம் பால் சுரக்கிறது. எனவே குறைமாதக் குழந்தைக்கும், தாய்ப்பாலைத் தவிர வேறு எதுவும் கொடுக்கக் கூடாது. மேலும் குறைமாதக் குழந்தையை நோயிலிருந்து காப்பாற்ற தேவையான நோய் எதிர்ப்புச் சத்துக்களும் தாய்ப்பாலில் நிறைந்து உள்ளன.

**? சுகப்பிரசவத்தில், பிரசவித்த எவ்வளவு நேரத்திற்குள் சீம்பாலைக் கொடுக்க வேண்டும்?**

சுகப்பிரசவத்தில், குழந்தை பிறந்த உடனேயே, அதாவது நஞ்சுக்கொடி துண்டிக்கப்பட்டவுடனேயே தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும். கொடுக்கும் முன்பாக மார்பகங்களைச் சுத்தம் செய்ய வேண்டும். பால் ஊட்டும் முன்பும், பாலுட்டிய பின்பும் வெந்நீரில் நனைத்த துணியால் சுத்தமாகத் துடைத்து விட வேண்டும். மார்க்காம்பில்



கசிந்த பால் அப்படியே இருந்தால் பூஞ்சைக் காளான் நோய் உண்டாகும். குழந்தை மார்பில் பால் குடிக்க மறுக்கும்.

**? குழந்தையின் உடலில் ஈரத்தைத் துடைக்காமலேயே தாய்ப்பாலை கொடுக்கலாமா?**

பிறந்த குழந்தைக்கு ஈரம் மற்றும் குளிர் ஆகியவை எதிரி. ஆகவே, பிறந்தவுடன் குழந்தையை உலர்ந்த வெண்மையான, பருத்தித் துணியால், தலையில் ஆரம்பித்து உடல் முழுவதையும் சுத்தமாகத் துடைக்க வேண்டும். பின்னர் மற்றொரு உலர்ந்த சுத்தமான துணியால்,தலை முதல் கால் வரை, முகத்தைத் தவிர்த்து,போர்த்தி, தாயின் அரவணைப்பில் கதகதப்பாக வைத்துக் கொண்டு தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும்.

**? பிரசவித்த தாயை உடனே பாலூட்டச் செய்தால் தாய்க்குக் களைப்பு அதிகரிக் காதா ?**

பிரசவித்து களைப்புடன் இருக்கும் தாய் தனது குழந்தையை அரவணைத்துப் பாலூட்டுவதன் மூலம் மகிழ்ச்சியும், புத்துணர்வும் பெறுகிறாள். மேலும் குழந்தைக்கு சீம்பால் கிடைப்பதுடன், தாய்க்கு ஏற்படும் உதிரப்போக்கு வெகுவாகக் குறைகிறது. ஆகவே. பிறந்தவுடனேயே தாய்ப் பால் கொடுப்பது தாய்-சேய் இருவருக்குமே நல்லது.

**? பிறந்த உடனேயே பாலூட்டுவது எவ்வாறு ரத்தப் போக்கை நிறுத்து கிறது? இந்தச் செய்தி அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

ஆம். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப் பட்ட உண்மை. இதை மருத்துவம் படித்த அனைவரும் அறிவார்கள். குழந்தை மார்பில் சப்பும் போது, நரம்பு நுனிகள் தூண்டப்பட்டு, மூளையில் உள்ள பிட்யூட்டரி சுரப்பியின் பின் பகுதியிலிருந்து ஆக்சிடோசின் எனப் படும், ஹார்மோன் சுரக்கின்றது. இந்த ஹார்மோன் கர்ப்பபையைச் சுருங்கச் செய்து, உதிரப்போக்கை நிறுத்துகிறது. இதே ஹார்மோன் ஆக்சிடோசின் மருந்தைத்தான் மருத்துவர்கள் உதிரப்போக்கை நிறுத்த ஊசி மூலம் செலுத்துகிறார்கள்.

**? குழந்தையை அடிக்கடி மார்பில் சப்ப வைப்பது, அதாவது குழந்தைக்கு அதிக நேரம் பாலூட்டுவது எவ்வாறு தாய்ப் பாலை அதிகப்படுத்துகிறது?**

தாயிடம், தாய்ப்பாலுக்காக இரண்டு ஹார்மோன்கள் சுரக்கின்றன. ஒன்று ஆக்சிடோசின் இரண்டாவது புரோலேக்ட்டின் ஆகும். புரோலேக்ட்டின் ஹார்மோன், மூளையில் உள்ள பிட்யூட்டரி சுரப்பியின் முன் பகுதியிலிருந்து சுரக்கிறது. அதற்கு

தூண்டுகோலாக அமைவது குழந்தை மார்பில் சப்புவது ஆகும். குழந்தை மார்பில் அதிக நேரம் சப்பச் சப்ப அதிகப் புரோலேக்ட்டின் சுரக்கிறது. அதிக புரோலேக்ட்டின் அதிகப் பாலை மார்பில் சுரக்க வைக்கிறது. இந்த ஹார்மோன் சுரந்த பின், தாயின் இரத்தத்தில் சுமார் அரை மணி நேரம் இருக்கும். பகலை விட இரவில் பாலூட்டுவது இந்த ஹார்மோனை அதிகம் சுரக்கச் செய்யும். எனவே, இந்த அறிவியல் பூர்வ உண்மையின்படி அதிக நேரம் பாலூட்டுவது. அதிக பாலைச் சுரக்க வைக்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இரட்டைக் குழந்தை பெற்ற தாய்க்கு கூட இரண்டு குழந்தைகளுக்கும் தேவையான பால் சுரக்கிறது.

ஆக்சிடோசின் எனும் ஹார்மோன், தாயின் மார்பில் ஏற்கனவே சுரந்து தேங்கியிருக்கும் பாலை மார்புக் காம்புகளைத் தளரச் செய்து குழந்தைக்குத் திறந்து விடுகிறது. இந்த ஹார்மோனும் குழந்தை சப்புவதன் மூலமே சுரக்கிறது. சப்புவது மட்டுமல்லாது. குழந்தையின் அழுகை ஒலி, குழந்தையைப் பார்ப்பது, குழந்தை பற்றிய பாசமான நினைவு ஆகியவற்றின் மூலம் சுரக்கிறது. சிலருக்குக் குழந்தையின் அழுகை ஒலி கேட்ட மறுவினாடியே. மார்பில் பால் வடிய ஆரம்பிப்பதை நாம் பலரிடம் பார்க்கலாம்.

அதே சமயம், சப்புவது குறையக் குறைய புரோலேக்ட்டின் ஹார்மோன் சுரப்பதும் குறைகிறது. அதனால் தாய்ப்பால் சுரப்பதும் குறைந்து இறுதியில் வற்றி விடுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**? பிரசவித்த சில நாட்களுக்குச் சிலருக்கு சீம்பால் அளவில் குறைவாகவே சுரக்கிறது. இது குழந்தைக்குப் போதுமா?**

குறைவாகவே இருந்தாலும், சீம்பால் அளவில் அடர்த்தியானது. சத்துக்களும், நோய் எதிர்ப்பு புரதங்களும் நிறைந்தது. சிறிதளவே இருந்தாலும், அதுவே குழந்தையின் தேவைக்குப் போதுமானது. அதைத் தவிர, வேறு எதுவும் கொடுக்கத் தேவையில்லை.

**? பிரசவித்தத் தாய்க்கு என்னென்ன கொடுக்கலாம்? பத்தியம் என்னும் உணவுக் கட்டுப்பாடு தேவையா?**

பிரசவித்து களைப்புடன் இருக்கும் தாய்க்கு, திரவ உணவுகளையும், எளிதில் ஜீரணமாகக்கூடிய கஞ்சி, ரசம் சாதம் இவற்றுடன் காய்ச்சிய நீரையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும். பிறகு வழக்கம் போல் அனைத்து உணவுகளையும் கொடுக்கலாம். வேகவைத்த பச்சைக் காய்கறிகள், வெல்லம் போட்ட பால், கீரைகள், பானகம், வெள்ளைப்பூண்டு சேர்ந்த குழம்பு, புரதச்சத்து நிறைந்த பயறு, மொச்சை,

தாய்ப்பால் குறித்த விழிப்புணர்வில் மருத்துவர் சாம்பசிவம்






தாய்ப்பால் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் மருத்துவர் மலர்விழி ஆகியோருடன் மருத்துவர் சாம்பசிவம்

கொண்டக்கடலை ஆகியவற்றையும், அத்துடன் அசைவ உணவுகளையும் தாராளமாகக் கொடுக்கலாம். பத்தியம் தேவையில்லை. தாய் தாராளமாகக் காய்ச்சிய நீரையும் பருக வேண்டும். நீரும் முக்கியமான உணவாகும். தாய்க்கு அடிக்கடி*சிறுநீர் பிரிவது, தாயை நீர்த்தாரைச் சம்பந்தமான வியாதிகளிலிருந்து காப்பாற்றும்.

**? தாய்ப்பால் சிலருக்குச் குறைவாக இருப்பதாகக் கூறுகிறார்களே. அதற்குக் தாய்ப்பாலை அதிகரிக்க வழிகள் என்ன?**

எந்த ஒரு குழந்தைக்கும், அதற்குக் தேவையான பால் அதன் தாயிடம் நிச்சயமாகச் சுரக்கும். பசுவிடம் அதன் கன்றிற்கும், நமக்கும் தேவையான பால் லிட்டர் கணக்கில் சுரக்கவில்லையா? அதைப் போலவே தாயிடமும் பால் சுரக்கும். தாய்ப்பால் தேவையான அளவில் சுரக்கத் தேவையானவை. தாயின் முழுமையான ஈடுபாடும், குழந்தை மார்பில் அடிக்கடி சப்புவதும் ஆகும்.

**? தாய்ப்பாலை அதிகப்படுத்த மருந்துகள் இருக்கின்றதா?**

தாய்க்கு சத்து நிறைந்த உணவுகள், பசுமையும் கருமையும் நிறைந்த பச்சைக் காய்கறிகள், கீரைகள், புரதச்சத்து நிறைந்த பயிறு வகைகள் அதாவது மொச்சை, உளுந்து, பாசிப்பயிறு, பட்டாணி, கொண்டகடலை சுண்டல், வெல்லம் போட்டு காய்ச்சிய பால், வெள்ளைப்பூண்டு சேர்ந்த குழம்பு. காய்ச்சிய நீர் மற்றும் அசைவ உணவுகள் ஆகியவற்றைத் தாராளமாக அளிப்பதன் மூலம் தாய்ப்பால் அதிக அளவில் சுரக்கும். பருத்திப் பாலும் பலம் கொடுக்கும். இவை போதாத நிலையில் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் அதற்கான மருந்து, மாத்திரைகளைச் சாப்பிடலாம், நிச்சயம் தேவையான பால் சுரக்கும். குடும்பத்தினரின் ஊக்கப்படுத்துதலும்,

ஒத்துழைப்பும், ஆதரவும் ஒரு தாய்க்கு மிக மிக அவசியம். பாலூட்டும் வேலை மட்டுமே தாய்க்கு அளிக்கப்பட வேண்டும், மற்ற வேலைகளைக் குறைந்தது முதல் ஆறு மாதத்திற்காவது குடும்பத்தினர் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தாய்ப்பாலை அதிகப்படுத்தும் மருந்துகள் Lactare Capsule/Lactare Granules, Lacto gaurd / Granules, Relact Capsule, Lactone Capsule,Metaclopromide Tablets, சௌபாக்ய சுண்டி லேகியம்.

போதிய தாய்ப்பால் இல்லாததற்கு முக்கிய காரணங்கள் :

பிறந்த குழந்தைக்குப் பாலூட்டுவதைத் தாமதப்படுத்துதல் அடிக்கடி பாலூட்டாமல் இருப்பது

இரவில் பாலூட்டாமல் இருப்பது பால் குடிக்கும் போது குறுக்கிடுவது

குழந்தையை மார்பில் சரியான முறையில் பொருத்தாமல் இருப்பது. குடும்பத்தின் ஆதரவு இல்லாமல் இருப்பது.

பாட்டில் மற்றும் சூப்பான்களைப் பயன் படுத்துவது விலங்கினப் பாலையும் / செயற்கையான டப்பா உணவுகளையும் கொடுப்பது.

தாயின் தன்னம்பிக்கையே குறைக்கும் வகையில் பேசுவது. கவலைகள், மன உளைச்சல் மற்றும் சோர்வு. பாலூட்ட, தாய்க்கு விருப்பம் இல்லாமல் இருப்பது.

**?** மாறிவரும் அவசர உலகில், இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு தாய்ப் பாலைக் கொடுக்க வேண்டுமா? மாட்டுப் பாலையோ, டின் பாலையோ கொடுக்கக் கூடாதா?

கூடவே கூடாது; விலங்குகளின் பால் அதன் குட்டிகளுக்கே! எமது குழந்தைகளுக்கு அல்ல, விலங்கின் குணாதிசயங்கள் பாலின் மூலம் அதன் குட்டிக ளுக்குச் சென்றடைகிறது.



குழந்தைகளுக்குப் பிடித்த மருத்துவர் சாம்பசிவம்

நமது குழந்தைகளுக்கு விலங்கின் பாலைக் கொடுத்தால், விலங்கின் குணங்கள் தாம் நமது குழந்தைகளுக்கும் வரும். மனிதனுக்கு தேவையான அறிவும், புத்திசாலித்தனமும் விலங்கின் பாலில் கிடைக்காது; நமது குழந்தைகள் அறிவும் ஆரோக்கியமும், அன்பும், பண்பும் பாசமும் நிறைந்தவர்களாக வளரத் தாய்ப்பால் அவசியம்.

விலங்கின் பால் அதன் குட்டிகளின் உடம்பு வளரவே பயன்படுகின்றன. மூளையை வளரச் செய்யாது. அவைகளுக்கு மூளை வளர்ச்சி அவசியமில்லை. பள்ளிக்கும் போவதில்லை. ஆகவே தாய்ப்பாலுக்கு இணையான பால் வேறு கிடையாது. IQ எனப்படும் அறிவுத்திறன் தாய்ப்பால் குடிப்பதன் மூலமே குழந்தைக்குக் கிடைக்கிறது என்பது ஆராய்ச்சிகளின் முடிவு. டின்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் மாவுகள் குழந்தைகளுக்கு முற்றிலும் ஒவ்வாதவை; மேலும் நச்சுத் தன்மை கொண்டவை.

# அழகு

**— கனகா பாலன்**



முதல் தடவையா விருந்தாடியாப் போறோம், குழந்தைகளும், வயசானவுங்களும் இருக்கக்கூடிய வீடு ஏதாவது வாங்கிட்டு வந்திருக்கலாம், மனதைத் துளைத்தெடுத்த குழப்பங்களையும் மீறி “இப்படியா அடிக்கப்போற மாதிரி வெறுங்கையோட போக’’ மெல்லிய குரலில் தன் கணவனிடம் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள் ரம்யா.

‘‘ம்ம், இப்பத்தான் உனக்கு ஞானோதயம் வந்துச்சாக்கும், அங்கேயே சொல்லியிருக்கலாம்ல’’ முறைத்தபடி கேட்டான் கணவன் இளங்கோ..

‘‘நீங்க வாங்கிட்டு வந்திருப்பீங்கன்னு நினைச்சேன். அதையும் நான் தான் சொல்லனுமா, உங்களுக்குத் தெரியாதாக்கும்’’

“சரி வாயை மூடு நீ , உள்ள போ, அஞ்சு நிமிஷத்துல வந்துர்ரேன்’’ என்று வந்த பாதை வழியாகவேத் திரும்பி கொஞ்ச தூரம் போனவனின் கண்களுக்கு ஒரு ஸ்வீட் கடை கூட தட்டுப்படவில்லை.

திருவேற்காடு மிகப் பிரபலமான ஊரென்றாலும், நண்பனின் வீடு ஊர்க் கடைசியில் தான் இருந்தது. குறைந்த விலைக்கு முன்னம் வாங்கிப் போட்டிருந்த இடங்களில் இப்போதுதான், பரவலாக எழுந்து நிற்கிறது சில வீடுகள். பெயர் பெற்ற இஞ்சினியரிங் காலேஜ் வந்த பின்தான் மிகக் குறுகிய காலத்தில் இத்தனை முன்னேற்றம்.

சுதந்திரமாகமேய்ந்துகொண்டிருந்த ஒரு மாட்டின் முதுகில், தான் கூடுகட்ட எடுத்துவந்த ஈக்கிக் குச்சியை அலகில் கொத்தியபடி காகமொன்று நின்றிருந்த காட்சி, சொகுசான இளைப்பாறலுக்கு ஒப்பானதைப் போல் இருக்க, வேடிக்கை பார்த்தபடியே நடந்ததில் கல்லொன்று கால் பெருவிரலில் இடறி விழப்போன வேகத்தில் சுதாரித்துத் தொடர்ந்து நடந்தான் இளங்கோ..

காலியான செம்மண் நிலத்தில், சில இடங்களில் வெள்ளையடிக்கப்பட்ட குத்துக்கற்கள் அடையாளத்திற்காகவும், அளவிற்காகவும் நட்டு வைக்கப்பட்டிருந்தது. பச்சையும் நீலமும் கலந்த கட்டம் போட்டத் துண்டால் தலைப்பாகையைக் கட்டியபடி வேப்பமரத்தின் கீழ் கண்ணசந்து அமர்ந்திருப்பவனின் முன் அரைவண்டிக்கும் குறைவான இளநீர்க் காய்கள். வியாபாரியென புரியச் செய்தது. அவனருகில் சென்று

“எழுப்பலாமா? வேண்டாமா?” என்ற யோசனையோடு நெருங்கினான் இளங்கோ...

அந்த நேரம் பார்த்து தோள் பட்டையிலிருந்து கழுத்து வழியாகக் கன்னத்துக்கு ஊர்ந்து கொண்டிருந்த கட்டெறும்பினால் திடுக்கிட்டு எழுந்து, தன் வலதுகையால் வேகமாக உதறிவிட்ட இளநீர்க்காரனிடம் ‘‘தம்பி, தின்பண்டக் கடை, இங்க ஏதாவது பக்கத்தில இருக்குதா? ” இளங்கோ விசாரித்த போது ஏற இறங்கப் பார்த்தவன் ...

‘‘அசலூரா நீங்க? அந்தா! அந்த ரோடு பிரியுதுல அங்கேயிருந்து வலது பக்கமா போனீங்கன்ன அஞ்சு நிமிஷ நடையில ஒரு கடை இருக்கு சார்’’

‘‘அடடா, கொஞ்சம் தூரமாத்தான் இருக்கும் போலயே’’

‘‘ஒரு இளநி வெட்டித் தர்ரேன் குடிச்சிட்டுப் போங்க’’ வியாபார நோக்கத் தோடு அவன் கேட்க...

‘‘அட, வேணாம்ப்பா, போயிட்டு வந்துர்ரேன்’’

‘‘வழி சொன்னதுக்காக ஒரு போணி பண்ணலாம்ல’’ தனக்குள்ளே முணங்கிக் கொண்டான் இளநீர்க்காரன்.

அவன் சொன்ன இடத்தில் இருந்த ஸ்வீட் ஸ்டால் கண்ணில் தட்டுப்பட, அருகில் சென்று அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஸ்வீட் மற்றும் கார வகைகளில் எதை வாங்க லாமென்று கடை முழுவதும் பார்வையை ஓடவிட்டான். அடுக்கி வைத்திருந்த கண்ணாடிப் பெட்டிகளின், உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அழுக்கடைந்து, சரியாக மூடப்படாமல் ஈ மொய்த்துக் கிடந்ததைப் பார்க்கையில், இளங்கோவிற்கு வாங்கிச் செல்ல மனம் ஒப்பவில்லை.

‘‘இதை வாங்கிக் கொடுத்து, வீட்ல இருக்குறவங்களுக்கு ஒன்னு கெடக்க ஒன்னு ஆகிப்போச்சின்னா, இதுக்கு பதிலா அந்தக் குழந்தைங்க கையில இருநூறு, ஐநூறு னு பணமா திணிச்சி வந்துடலாம், ஏதாவது அவங்களுக்குப் பிடிச்சதை வாங்கிக்குவாங்க’’ என்று சமாளித்துக் கொண்டது இளங்கோவின் மனம்.

‘‘இவ்வளவு நேரமாகியும் ஒன்னும் வாங்காமப் போனால் மொறைப்பாளே, இப்போ என்ன பண்ணலாம்’’ யோசித்தபடி மீண்டும் நண்பனின் வீடு நோக்கி நடந்தபோது, அந்த இளநீர்க் காரன்



அங்கேயே நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான்.

“என்ன சார்? பண்டம் எதுவும் இல்லையா, சும்மா வர்ரீங்களே” நெடுநாள் பழகியவன் போல் உரிமையாகக் கேட்டான்.

“‘அதென்னப்பா, எல்லாம் பழசா வச்சிருக்கான், சுத்தமும், சுகாதாரமும் இல்லாத இடத்துல என்னத்த வாங்குறது. அதான் திரும்பிட்டேன’’ பதிலளித்த இளங்கோ.



## குழந்தைபோல

நானை- கத்தரித்த
அம்மாவோடு இருந்த
நாட்களின் நினைவு கனத்தது...
அது நம் கூடவே இருக்கிறது...
நுண்ணுணர்வுள்ள யாருக்கும்
தன் அம்மாவுடன் வாழ்ந்த
வாழ்வு மிக முக்கியமான தடயம்
அது முடிவதேயில்லை...
அம்மா மாதிரி மனதை
குழந்தைபோல
வைத்துக்கொள்வது
எளிதானதா என்ன?

**- தஞ்சைதவசி**

பட்டென்று உற்சாகமாய் ‘‘சரி சரி, வண்டியை எனக்குப் பின்னாலேயே எடுத்துட்டு வா வேற வழியில்லை, ம்ம்... திருப்பு, திருப்பு...’’ இளங்கோவின் குரலில் உற்சாகம் தெரிந்தது.

“ஆளுக்கொரு இளநி வெட்டிக் கொடுத்து, மனசைக் குளுகுளுனு மாத்திர லாம்னு யோசனை பண்ணீட்டீகளோ, இந்தா வாரேன்...” நின்றிருந்த இடத்தி லிருந்து வலப்பக்கமா வளைத்து அவரோடு பேசிக்கொண்டே குஷியாக வண்டியைத் தள்ளிக்கொண்டு சென்றான்.

“ஆமா, நீ எதுக்கு, விற்காத ஏரியாவுல வேஸ்ட்டா இளநிகளை வச்சிக் கிட்டு நேரத்தைக் கடத்துற’’

“இது எனக்கு ரெஸ்ட் டைம் சார், காலையில ஆறு மணியிலிருந்து மெயின் ஏரியாவுக்குள்ள சுத்தி வியாபாரம் பண்ணிருவேன்’’

“அட, அப்படியா, வெவரமான ஆளுதான்யா நீ’’

“மதியம் சாப்பாட்டு நேரத்திற்கு இந்த மாதிரி இடந்தான் தோதாயிருக்கும், பம்ப் செட்டு ஒன்னு அங்க இருக்கு பார்த்தீகளா?’’

“நான் கவனிக்கலையே...’’

‘‘வீட்லயிருந்து வரும்போதே சாப்பாடு கொண்டுவந்துருவேன்’’

“ஓ, அதுசரி’’

இப்படியாக கதை பேசிக் கொண்டு வந்தவனை “இங்க நிறுத்தப்பா’’ என்றுச் சொல்லிவிட்டு, நண்பனின் வீட்டு காலிங் பெல்லை அழுத்தினான் இளங்கோ.

முதலில் எட்டிப்பார்த்த நண்பன்

''டேய் என்னடா எங்க போயிட்டு வர்ர, தங்கச்சி அப்பவே வந்துருச்சே, தம் அடிக்கப் போயிட்டியோ'' என்று குறும்பாகச் சிரிக்க...

"ஹாஹா... நண்பேன்டா! "

"காரணம் கேட்காம, ஒரு சின்ன கட்டைப் பை எடுத்துட்டு வா" பையில் பத்து இளநிகளைப் போடச் சொல்லி, "எவ்வளவுப்பா ஆகுது" னு பேண்ட்டிலிருந்துப் பர்ஸை எடுத்தான்..

''முந்நூறு ரூபாய் தாங்க சார்...'' என்றவனிடம் ஐநூறு ரூபாய் தாளை நீட்டினான் இளங்கோ. பெற்றுக் கொண்டவன் மிச்சச் சில்லறையோடு, ஒரு தொன்னையில் சிறுசிறு பொட்டலங்களையும் இணைத்துக் கொடுத்தான்.

"என்னடா இது, எல்லாமே ஒரு மாதிரியா இருக்கு, நீ வாங்குறதும், அவர் கொடுக்கிறதும், இது என்னது, கோவில் பிரசாதமாயென்ன?" தொன்னையிலிருந்த பொட்டலத்தின் ஒன்றைத் தூக்கிக் காட்டினான் நண்பன்.

"என்ன சார், இப்படிக் கேட்டுட்டேங்க, மொதல்ல பிரிச்சிப் பாருங்க, அதுக்கு மேல மதிப்பானதாச்சே இது'' என்றான் இளநீர்க்காரன்.

"அட..."

"ஆமா, அதெல்லாம் விதவிதமான செடி விதைகள் சார்"

ஆச்சர்யப்பட்டு மொத்தக் குடும்பமும் அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை ஆவலுடன் எதிர் பார்த்திருக்க...

"ஒரு இளநிக்கு ஒரு விதைப்பொட்டலம்னு இனாமாத் தருவோம் சார். பொதுவா இளநி குடிக்க வர்ரவங்க முக்கால்வாசி பேர் இயற்கை மேல அக்கறைப் பட்டவங்களாத்தான் இருப்பாங்க... அவங்க கிட்ட இந்த விதைகள் போய்ச் சேரும் போது நிச்சயமா அதை வளர்க்கனும்னு ஆசைப்படுவாங்க தானே?"

''நிச்சயமா, எனக்குக் கூட, வீட்டைச் சுற்றி, செடி வளர்க்கப் பிடிக்கும், ஆனால் இந்த மனுஷன்தான் சுவர் வீணாயிப் போயிடும்னு வைக்க விடமாட்டேங்கிறாரு'' ஆதங்கமாக பதிலளித்தாள் நண்பரின் மனைவி.

அப்படியா? என்ற பார்வையை நண்பரின் மீது வீசிவிட்டு ''நல்ல வேளை நானெல்லாம் அப்படி இல்லப்பா'' என்று தனக்குத்தானே சபாஷ் போட்டுக் கொண்டு இன்னும் அவன் என்ன சொல்லப் போகிறான் என்று இளைஞனைப் பார்த்தான் இளங்கோ.

"கடையில வாங்குற கருவேப்பில்லை கொத்தமல்லி மாதிரி, எங்களுக்கு இந்த விதைப் பொட்டல ஐடியா'' பெருமையாகப் பார்த்தான் அனைவரையும்.

"நல்லாருக்கே இந்த யோசனை, எத்தனை வருஷமா இந்த நல்ல காரியத்தைச் செஞ்சிட்டு இருக்கீங்க?'' கேட்டது நண்பன்.

''எங்க அப்பா காலத்துலயிருந்து சார். இது ஒரு வகையில சுயநலம் தான், இந்தச் சாக்குல எங்களுக்கு கூடக் கொஞ்சம் இளநி விக்கும், அதுக்கும்தான்''

''ஆனாலும் உன் செய்கையில மக்களுக்கு உணர்த்தக் கூடிய நல்ல கடமையும் இருக்கே நல்ல விசயம் தான்"

''ஆனா, ஒரு சிலதுங்க, எனக்கு இந்தப் செடி விதையெல்லாம் வேண்டாம் , அதுக்கு பதிலா அஞ்சு ரூபாய் கொறைச்சிக் கொடுக்கியானு, வாய் கூசாம கேட்குங்க

சார், அப்பவெல்லாம் பல்லைக் கடிச்சிட்டு கோபத்தை அடக்கிக்கிடுவேன்''

''இந்த யோசனை எப்படி வந்துச்சி உனக்கு'' இளங்கோவின் மனைவி கேட்க...

"அதான் சொன்னேனே எங்க அப்பா ஆரம்பிச்சாருன்னு, முன்னமெல்லாம் இந்த வண்டி கிடையாது, ஏதாவது ஒரு இடத்துல மொத்தமா குவிச்சி வச்சி வியாபாரம் பண்ற பழக்கம், எங்க அப்பா வழக்கமா கடை போடுற இடத்துக்குப் பக்கத்துல, தினமும் ஒருத்தர் மஞ்சப் பை நிறைய நாட்டு விதைகளை கொண்டு வந்து, எல்லாருக்குமே இனாமாக் கொடுப்பாராம்"

''ஓ, அப்பவே அப்படியா'' என்றான் இளங்கோ

''ஆமா சார், ஆனா அதை சேவையா செஞ்சிட்டு இருந்தவருக்கு தொடர்ந்து ஏற்பட்ட உடல்நலக் குறைபாடு காரணமாக பாதியிலயே நிறுத்த வேண்டியதாப் போச்சு, அப்பா அவர்கிட்ட ஒரு நண்பனைப் போல பழகினதுனால, அந்தப் பொறுப்பைத் தானே ஏத்துக்கிட்டாரு.."

''கிரேட் ல..'' நண்பனும் இளங்கோ வும் பார்வையால் பேசிக்கொண்டார்கள்.

''நீங்க இதுக்கு இப்போ காசு கேட்பீங்களா அங்கிள்?'' விழிகளை உயர்த்தி பவ்வயமான கேட்டது அந்த வீட்டு குட்டி வாண்டு...

''இல்லை தங்கமே, இளநியோட இணைச்சித் தர்ரோம் அவ்வளவுதான்...''

''ஐ! சூப்பர்'' குதூகலித்தது குழந்தை மனம்

"எங்களைப் பார்த்து இன்னும் நிறைய பேரு, அவங்க பார்க்கிற வியாபாரத்தோட, விதைப் பொட்ட லங்களைப் பரிசாக் கொடுக் குறதுக்கும் பழகிட்டாங்க"

''எப்பேர்ப்பட்ட நல்ல காரியம் நீங்க செய்றது, நல்லாயிருக்கனும் ப்பா" அவர்கள் குடும்பத்து பாட்டியின் ஆசிர்வாதக் குரல் இளநீர்க்காரனை வாழ்த்தியது.

''அங்கிள் உங்க பேரென்ன?'' என்றது குழந்தை

"அழகு ராசு. எதுக்குக் கேட்குற?" குழந்தையின் உயரத்திற்குத் தலை குனிந்து சொன்னான் இளநீர்க்காரன்.

''நீங்க கொடுத்துருக்குற இந்த விதைகளெல்லாம் வீணாக்காம, குட்டியா தோட்டம் மாதிரி, அம்மாவை அமைக்கச் சொல்வேன், அதுக்குப் பேரு என்ன தெரியுமா...?''

"என்னவாம்...?" இளங்கோ கேட்க...

''அழகு தோட்டம். உங்க ஞாப கார்த்தமா, உங்க பேருதான் எங்க தோட்டத்திற்கும்'' கன்னத்தில் குழி விழச் சிரித்தாள் அந்தச் சிறு குழந்தை..

''சபாஷ்...''

''உங்களை மறக்கக் மாட்டோம். எவ்வளவுநல்லவிசயம், எங்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்க...'' நன்பணின் மனைவி புன்னகைத்துச் சொன்ன போது மிகவும் மகிழ்ச்சியடைந்தான் இளநீர்க்காரன்

''அழகு தோட்டம், அழகு தோட்டம்'' தனக்குள்ளே இருமுறை வாய்விட்டு சொல்லிக் கொண்டவன் வண்டியைத் திருப்பும் போது வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்து தோள்மீது தழுவிக் கிடந்தது அவனது பச்சையும், நீலமுமான கட்டம்போட்ட துண்டு.

# அன்பெனும் கடவுள் அன்னையே!

அன்பைப் பொழியும் அருளின் வடிவமே!
அன்னையே என்றும் அகிலத்தில் முதன்மையே!
கண்களில் தெரியும் கருணைக் கடவுளே!
பண்பை வளர்க்கும் பாசத்தின் உருவமே!
அன்னம் ஊட்டி அனைத்தும் செய்திடும்!
நன்மையே நினைக்கும் நடமாடும் தெய்வமே!
குருதியைப் பாலாக்கி குழந்தைக்குத் தருவாளே!
அருவியென நாளும் அன்பைப் பொழிவாளே!
காய்ப்புக் கரங்கள் கதைகள் கூறுமே!
சேய்க்கு வலிக்காமல் சேவைகள் செய்யுமே!
பசியைத் தான்துறந்து புசிக்க விடுவாளே!
கசியும் முன்பே கண்ணீரைத் துடைப்பாளே!
பிச்சையும் எடுப்பாள் பிள்ளைகள் படிப்பிற்கு!
இச்சைகள் துறப்பாள் இனிய வாழ்வுக்கு!
வெடிப்புக் கால்கள் வேதனை அளித்தாலும்!
படிக்கும் பிள்ளைக்காய் பாரங்கள் சுமப்பாள்!
எஞ்சிய உணவே என்றும் நிரந்தரம்!
பஞ்சமே வந்தாலும் பசியோடு விடமாட்டாள்!
அஞ்சும் நேரத்தில் அடைக்கலம் அவளே!
நெஞ்சின் பாரத்தை நீவியே குறைத்திடுவாள்!
பையில் உள்ளதைப் பகிர்ந்து கொடுத்திடுவாள்!
கையில் பணத்தைக் காணாமல் திணித்திடுவாள்!
பூடகமாய்த் தவறுகளைப் பொறுப்புடன் திருத்திடுவாள்!
கேடயமாய் இருந்து கேடுகளைத் தடுத்திடுவாள்!
ஊடல்கள் கொண்டு உரிமையாய் திட்டிடுவாள்!
ஊடகமாய் இருந்து உறவுகளை இணைத்திடுவாள்!



இரா. கவிதா - திண்டுக்கல்

# கழுதைக் காத(ல்)லி



மனத் தெரு
புரண்டு படுத்திருக்க
கனவுகளை விம்பத்தில்
கட்டி வைத்து,
சிறு புல்லாங்
குழலுக்குள்
புகுந்து -
பெரும் புயல் ஒன்றைத்
தையலிடுகிறேன்!

அமேசன் காடுகளைப் போல்
உன் நினைவுகள்
பற்றியெரிய....

காலச் சுவர்களை
இடித்துடைத்து
என் காதல் மிருகங்களை,
சொற் கட்டிடங்களைக் கொண்ட
ஒரு துயர நகருக்குள்
அனாதையாகவே
இழுத்து வருகின்றேன் !

உண்மையென்பது
அழகான ஒரு மான்...
நேர்மையென்பது
நேர்த்தியான ஒரு ஒட்டகம்...
பாசமென்பது
உயரமான ஒரு யானை...
காதலென்பது
உனக்காகவே உருகிய
ஒரு வரிக் குதிரை !

எல்லா மிருகங்களும்
இயல்பாகவே இருந்தன...
நீ பிரியும் வரை
அவை உனக்காவே வாழ்ந்தன !

நீ பிரிந்த பின்
எல்லாமே தவித்தன...
நீயில்லாத உலகில்
அவைகள் தம்மையே வெறுத்தன!

என்னைப் பிரிந்த இத்தனை
நூற்றாண்டுகளில்
ஒன்று மட்டுமே உடனே
பரிணாமம் அடைந்தது !

ஆம் !
வரிக் குதிரை
வழி தெரியாமல் மாறிவிட்டது...
அது கழுதையாகத் தன்னை
உரு மாற்றிவிட்டது !

ஒவ்வொரு இரவிலும்
இந்தக் கழுதை
இடைவிடாமல்
அலறித் திரிகிறது !

உன் நினைவுகளைத்
தேடித் தேடி
துயர நகரையே
தூங்க விடாமல்
தடுக்கிறது !

நகரத்தின் துயரைத்
துடைப்பதில்
வரும் நூற்றாண்டிலாவது
அக்கறை கொள் !

தயவு செய்து
அடுத்து நடக்கப் போகும்
பரிணாமங்களைத்
தடுத்து நிறுத்து !

நரகமாக மாறியிருக்கும்
இந்தக் கழுதையின்
பரிணாமத்தை
அன்பே விடுதலை செய்!

**- ஜே.ஜம்ஷீத்**
புத்தளம், இலங்கை

# தன்முனைக் கவிதைகள்

**கவிஞர் கார்கவி சேகா**

●

ஒவ்வொரு செயலிலும்
முயற்சி பிறக்கிறது
பிறந்த குழந்தைக்காக
எத்தனை முயற்சி

●

நிரப்பப்பட்ட பலூன்களில்
அப்பனின் மூச்சுக்காற்று
மெல்ல மெல்ல இறங்குகிறது
காலன் கையில் குண்டூசி

●

நீரும் சேறும்
கலங்கினால் பலனில்லை
மனதும் கண்களும்
கலங்கி நிற்கிறது மனிதம்

●

ஒரு பிடி சோற்றுக்கு
பல ஏக்கர் அவா
பருக்கையில் எழுதப்படுகிறது
பசியுடன் கடனும்

●

இரவுக்கு விடை கொடுத்து
கனவு பிறக்கிறது
அம்மையும் அப்பனும்
அழாத விடியல் போதும்

●

நீ அழாமல் செல்
தாயின் நம்பிக்கை
நீ விழாமல் வா
தகப்பனின் நம்பிக்கை

●

தன்னை நிமிர்ந்து பார்த்து
வியந்து கொள்பவன்
குனியும் பொழுது
தனது நிழலை மிதிக்கிறான்

●

கட்டில் ஆடியதும்
காமம் கதவோடு வெளியேறியது
கைக்கட்டி வேடிக்கை பார்க்கிறது
தோட்டத்து ஆலமரம்

●

ஆசை பலூன் வேண்டி
காத்திருக்கிறது வீட்டில் குழந்தை
நீண்ட சம்பள வரிசையில்
மகளின் ஆசையுடன் அப்பன்

●

வேகத்தின் வலிமையாய்க் கல்
தூரத்தில் எறியப்படுகிறது.
விழுந்த அடியை பரப்புகிறது
கரைகளுக்கு அலையலையாய்

# நாட்படு தேறல்

விண்மீன் விதையாய்
மனமென்னும் மண்ணில்
விழுந்த நொடியில்
ஆலமரமாய் வேர் விட்டாய்
அளவில்லா நினைவுகளோடு
ஆரவாரமாய் உள்சென்றாய்
நிதானிக்க துணிவில்லை
நடந்ததென்ன நினைவில்லை
அங்கும் இங்கும் அசையுதடி
ஆழியில் முக்குளித்த
உன் உருவம் அடங்காமல்
அப்படியொரு பெண் உருவம்
என் வாழ்வில் கண்டதில்லை
யாரோ அழைக்கும் குரல்
அவ்வப்போது நீயாய்
திரும்புமுன் தீர்ந்து போனது
திக்கெட்டா திசையில்
தீராத காதல் தாகம்
தீர்க்குமோ உன் மனம்
தீர்த்துவிடு தீந்தமிழ்ச் சுவையே
ஒவ்வொரு துளி காதலும்
நீ ஊட்டி வளர்த்த
*நாட்படு தேறல்*

**- காரைக் கவிஞர் எழிலி**

# முரண்

சர்க்கரை இல்லாத
கரும்பு  சாறு கேட்டான்
சர்க்கரை நோயாளி

மலை ஏறி சென்றான்
தேன் எடுக்க
கை இழந்தவன்

ஆற்றில் குதித்து
கரை சேர நினைத்தான்
நீச்சல் தெரியாதவன்

மீனே சிக்கவில்லையென
வருந்தி நின்றான்
வலை விரிக்கத் தெரியாதவன்

மனை நிலமாக்கிடு
நிலம் விளைச்சலுக்கு
ஆகாதென்றான்
உழவோட்டத் தெரியாதவன்

சமத்துவ சமுதாயம்
அமைப்போம் என்றான்
சாதி சங்கத் தலைவன்

பெற்றோரைப் போற்றிப் பேசினான்
முதியோர் இல்லத்தில்
சேர்த்துவிட்டு வந்த மகன்

நடிகனின் புகைபடத்திற்கு
பாலாபிஷேகம் செய்தவனின்
வீட்டுக் குழந்தை
பாலுக்கு அழுதது

தலைவன் பிறந்த நாளுக்கு
அன்னதானம் கொடுத்தவனின்
வீட்டில் எல்லோரும்
வயிற்றுப் பசியோடு...

**- செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# இவை போதும் எனக்கு

காரிருளுக்குள் உலாவரும்
கல்நெஞ்சம் வேண்டாம்
கரிசனையோடு உதவுகின்ற
கனதியான நல்லுள்ளம்போதும்
குறையாத அன்போடும்
கூடிய நட்போடும் பழகும்
இணையில்லா உறவுகள்
இவைபோதும் எனக்கு

நிறைவில்லா மனதோடு
நிம்மதியின்றி வாழவேண்டாம்.
வரவுக்கண்டு சிக்கனமாய்.
வாழ்வதே போதுமெனக்கு

உள்ளதைக்கொண்டு
உளம்பூரித்து பிறருக்கு
ஈந்து வாழ்வது மகிழ்வு
இதுபோதும் எனக்கு

கற்போர் கல்விக்குதவவும்
கற்காதார் வாழ்வுசிறக்கவும்
விரிந்த எண்ணமே
வரமாகவேண்டுமெனக்கு.
விரும்பாத உறவுகள்
வலிந்து வரவேண்டாம்
தட்டிக்கொடுக்கும் உறவே.
தரணிவாழ போதுமெனக்கு

தீதுசெய்யும் சிறுமைக்குணம்.
தெரிந்து நடந்திடவே
தோற்றுப்போகாத நல்லறிவும்
நித்தம் கிடைத்தால்போதும்

இறையைவணங்கி நிதம்.
ஈருலகிலும் ஜெயம் பெற்றிடவே
வாழ்ந்தால் போதும்
இவை எனக்கு

**- எஸ்.யூ.கமர்ஜான்பீபீ**
வத்தளை

# ஹைக்கூ



1.
விமானத்தின் தரையிறக்கம்
மனதுக்கு இதமாக இருக்கும்
தாயகக்காற்று

2.
அதிகாலை நேரம்
என் தூக்கத்தைக் கலைக்கும்
பூனைக்குட்டி

3.
விளையாட்டுத் திடல்
ஊஞ்சலை ஆட்டி விளையாடும்
நாய்க்குட்டி

4.
மேலெழும்பும் விமானம்
பாரமாக இருக்கும்
தாயகத்தைப் பிரியும் என் மனம்

5.
மீளாத்துயிலில் பூனை
மடியில் இருத்தி வருடுகிறேன்
அடக்கம் செய்ய மனமின்றி..

6.
இறந்த தாய்ப்பூனை
குட்டிகளுக்குப் பாலூட்டும்
என் கைகள்

7.
இன்று பள்ளிக்கு விடுமுறை
இறுதி அஞ்சலி செலுத்தவேண்டும்
இறையடி சேர்ந்த என் பூனைக்கு..

8.
தெருவோர நாய்
தாகம் தீர்க்கும்
யாசகன் கை

9.
முழுநிலவு
முத்தமிட்டு உரசிச்செல்லும்
குழந்தையைப் பூனை

10.
ஆழமான பனிப்படிவு
பாதையமைத்து நடந்து செல்லும்
வெள்ளை நாய்

11.
பனிபடர்ந்த காட்டில்
மான்களின் ஒன்றுகூடல்
அடடா ! பேசிக்கொள்கின்றனவா?

12.
ஒற்றையடிப்பாதை
துள்ளி ஓடிவரும்
கறுப்பு நாய்க்குட்டி

13.
மலைப்பாம்பு
குட்டியை அணைத்திருக்கும்
தாய்க்குரங்கு

14.
பனிபடிந்த நிலம்
ஓடிவரும் கரடிகளைப் பின்தொடரும்
காலடித்தடங்கள்

15.
பசியில் புலி
கொப்புக் கொப்பாய்த் தாவும்
மந்திக்குரங்கு

**- சுபாஜினி மனோகரன்**
(வன்னியூராள்)

# Dr ஜலீலா முஸம்மில், MBBS

**(ஏறாவூர்) அவசர சிகிச்சைப் பிரிவு போதனா வைத்தியசாலை**

**மட்டக்களப்பு**

# கலை இலக்கியப் பயணமும் அறிமுகமும்








இலங்கை நாட்டின் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

கடந்த 14 வருடங்களாக வைத்திய அதிகாரியாக கடமை புரிந்து வருகிறார். மர்ஹூம் U.H. முகம்மது, பௌசியா தம்பதியின் மூன்றாவது பிள்ளை. சிறு வயதிலிருந்தே நூல்கள் படிப்பதில் ஆர்வம் கொண்டவர். எப்போதும் வாசிப்பு எதிலும் வாசிப்பு என்று தணியாத தாகமாய் தமிழிலே பற்றுக் கொண்டவர்.

மருத்துவக் கல்வியை கொழும்பு களனிப் பல்கலைக் கழகத்தின் றாகமை மருத்துவ பீடத்தில் கற்று முடித்தார். தற்போது மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமை புரிந்து வருகிறார். தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்கள் கடமை புரிந்தவர். கல்வியிலே கண்ணாக இருந்து திறமையைக் காட்டினாலும் எழுத்துலகம் அவரது இன்னொரு கண் என்றே சொல்லலாம்.

எழுத்தும் வாசிப்பும் அவர் நேசிக்கும் துறைகள். கற்றலின் ஊடே கவிதை எழுதுவதை விட்டு விடவே முடியவில்லை. முக நூலிலும், வாட்ஸ்அப் குழுமங்களிலும் கவிதைகள், கட்டுரைகள், மருத்துவக் குறிப்புகள், மருத்துவ கட்டுரைகள், ஊக்கப்பதிவுகள் எழுதி வருகிறார். தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழன், வேட்டை, அக்கினிச்சிறகுகள், முத்தமிழ் கலசம், படிகள், விடிவெள்ளி, மெட்ரோ நியூஸ் போன்ற

உள்நாட்டு சஞ்சிகைகளிலும் பத்திரிகை களிலும் தமிழ்நெஞ்சம், துணிந்தெழு, வளரி, காற்றுவெளி, ஹைக்கூத் திண்ணை போன்ற வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. முகநூல் குழுமங்களில் இடம்பெற்ற கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்று சான்றிதழ்களை அதிகம் பெற்றுள்ளார். இவரது தன்முனைக் கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் முகநூல் குழுமங்களில் கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

பிறை எஃப் எம் எனப்படும் உள்நாட்டு வானொலியில் இவரது கவிதைகள் சந்தனக் காற்று பகுதியில் ஒலிபரப்புச் செய்யப் பட்டிருக்கின்றன. ஊக்கப் பதிவுகள் எழுதுவதிலும் ஆர்வமுள்ளவர். இவரது ஊக்கப் பதிவுகளும் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள. ஊக்கப் பதிவுகளுக்கான வெற்றிச் சான்றிதழ்களும் கிடைத்துள்ளன. இணையவழிக் கவியரங்கங்கள் மற்றும் தொடர் ரெங்கா சென்றியு போட்டி போன்ற நிகழ்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்ற அனுபவமும் இவருக்கு உண்டு. ஹைக்கூ, தன்முனைக் கவிதைகளின் தொகுப்பு நூல்களிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா பென் கிளப் எனும் இலங்கை நாட்டின் பெண் எழுத்தாளர்கள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கிறார். அத்தோடு அதிலே கணக்காய்வாளராகக் கடந்த ஆண்டு பணியாற்றியதோடு மட்டு மல்லாமல் தற்போது நிர்வாகக் குழு உறுப்பினராகவும் கடமை யாற்றுகிறார். ஸ்ரீலங்கா பென் கிளப் முகநூல், வட்சப் பக்கத்தில் மருத்துவப்பகுதிக்கும் பொறுப் பாளராக இருக்கிறார். ஸ்ரீலங்கா பென் கிளப் அண்மையில் வெளியிட்ட "சுட்டுவிரல்" கவிதைத்தொகுப்பு நூலிலும் இவரது கவிதை இடம்பெற்றிருக்கிறது. ஸ்ரீலங்கா பென்கிளப் நடாத்திய பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில் இலக்கியப் பணிக்காக விருதும் சான்றிதழ்களும் பெற்றமையிட்டு அகம் மகிழ்கிறார். பல்வேறு கலை இலக்கிய மன்றங்களால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் பங்குபெற்று சான்றி தழ்களை பெற்றிருக்கிறார்.




மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன் அவர்கள் எழுதிய ''மண்ணில் தவழும் விண்மீன்கள்'' மற்றும் ''புத்தொளிக் கவிதைகள்'' போன்ற நூல்களில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

சமீபத்தில் இந்தியாவில் நடந்தேறிய மதுரமொழி கவிச்சங்கம் ஆண்டுவிழா மலரில் கவிதை எழுதிய இவரின் தமிழ்ச்சேவையை பாராட்டும் வகையில் தமிழ்வேள் விருதினைப் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது

ஏறாவூர் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கலாசார இலக்கிய விழாவில் வெளியிடப்பட்ட இனசமதி நூலில் இவரது ஆக்கமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பிரதேச கலாசார மத்திய நிலையத்தின் அங்கத்தினராகவும் இருந்து வருகிறார். அண்மையில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஏறாவூர் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார மத்திய நிலையம் இணைந்து நடத்திய மகளிர் தின நிகழ்வில் கவியரங்கத்தில் பங்கேற்றுள்ளார். கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகம் அண்மையில் நடாத்திய மகளிர் தின விழாவில் வெளியிடப்பட்ட "முக்காடு" எனும் சிறப்பிதழ் நூலிலும் இவரது கவிதை இடம்பெற்றிருக்கிறது. கட்டார் நாட்டிலிருந்து வெளிவரும் துணிந்தெழு சஞ்சிகையின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் கடமை புரிகிறார். ஏறாவூரின் தமிழ்ச் சாரல் கலை இலக்கிய









வட்டத்தின் அங்கத்தினர் ஆகவும் பொருளாளராகவும் இருக்கிறார். இவ்விலக்கிய குழுவானது அண்மையில் வெளியிட்ட ''தமிழ்ச்சாரல்'' நூலிலே இவரது 15 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவில் வெளியிடப்பட்ட தன்முனைக் கவிதைகளின் தொகுப்பான அரும்புகளின் ஊர்வலம் எனும் சிறுவர் நூலிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஏறாவூர் தேனி கலை இலக்கிய வட்டத்தில் அங்கத்தினராகவும் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்து செயலாற்றுகிறார். மேலும், தேனி கலை இலக்கிய வட்டத்தினால் நடாத்தப்பட்ட கலை இலக்கிய விழாவில் வெளியிடப்பட்ட கவிதை நூல் தொகுப்பிலும் இவரது கவிதைதடம் பதித்துள்ளது, இலக்கியப் பணிக்கான விருதும் சான்றிதழும் கிடைக்கப் பெற்றுள்ளார்.

இவரது ''சிறகு முளைத்த மீன்'' எனும் முதற்கவிதை நூலானது கடந்த 27/02/2022 அன்று மாலை 5.00 மணிக்கு சென்னைப் புத்தகக் கண்காட்சியில் (YMCA, NANDANAM) எழிலினிப் பதிப்பகத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

கன்னி வெளியீடான இந்நூலினை தமிழ்நாடு அரசு மாநில திட்டக் குழு உறுப்பினர், தமிழிசை நடனக் கலைஞர், முனைவர் பத்மஸ்ரீ கலைமாமணி நர்த்தகி நடராஜ் வெளியிட்டு வைத்ததுடன் நூலின் முதல் பிரதியை முனைவர் கவிஞர் கூடல் தாரிக் பெற்றுக்கொண்டார் அத்துடன் பேராசிரியரும் பிரபல பேச்சாளருமான முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும் விழாவினை அலங்கரித்தார்.

எழுத்துலகில் இன்னும் வளர வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற அவாவில் இருக்கும் ஜலீலா முஸம்மில் அவர்களின் தமிழ்ச்சேவை தொடர நாமும் பாராட்டி வாழ்த்துவோம்.

# கண்ணாடிக் கனவுகள்

மானிடராய்ப் பிறந்தவரின் மனதுக்குள் தேங்குமே
ஆசைகள் ஆயிரங்கள் ஆட்டிடுமே தோரணங்கள்
மாலையாகித் தோள்களிலே விழுந்திடவே வேட்கைதான்
நியாயமான ஆர்வங்கள் நிச்சயமாய் வென்றிடுமே

நேர்த்தியாக நீயும் உழைத்திடுவாய் உண்மையாக
வேர்த்து விரைவாய் வெற்றி நோக்கியே
பாதங்கள் பதிக்கையிலே பாதையிலே முள்ளிருக்கும்
தடைகளும் தானிருக்கும் தரணியிலே பகையிருக்கும்

தடங்கலினால் உடையாது தைரியமாய் எதிர்கொள்ள
கண்ணாடிக் கனவுகளும் கச்சிதமாய் அரங்கேறும்
கலைந்தே உடைந்தாலும் சுயம்பாய் ஒன்றாகிக்
காலத்தின் சூழ்ச்சிகளைக் கவனமுடன் வென்றிடவே

ஏணியிலே ஏறிடுவாய் வெண்ணிலவைத் தொட்டிடுவாய்
பாரும் நன்றாய்ப் போற்றிடவே உன்னைப்
பழகும் உறவுகள் தொடர்ந்து வாழ்த்திடவே
கனவுகளும் நனவாகும் காத்திருப்புகள் வெற்றி பெறும்




**- ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர் - இலங்கை

# எல்லாம் அப்படித்தான் இருக்கிறது

இன்னுமொரு காலம் வரும்
அதில் உன்னை நானும்
என்னை நீயும்
பிய்த்துத் தின்று
பசி தீர்ப்போம்....

விஷம் என்பது நீங்கும்
குடலுக்கு உடல் தீங்காகாது
என்று ஏங்கும்!

குண்டுச் சட்டிகளில்
சிவப்பு நீர் சேமிப்போம்
கடலில் கட்டுண்டவன்
பருகும் ஆமை இரத்தம் போல்
அதையும் பருகி
உயிர் வாழ்வோம்!

இன்னும் மோட்டெலிகளை
புற்றுக் கறையான்களை
இறந்த ஈசல்களை
வறுத்துத் தின்போம்...

இருக்கும் வரை
தின்று தின்று தீர்ப்போம்

இறுதியில் செத்துப் போவோம்
இங்கு அப்படித்தான்
எல்லாம் இருக்கிறது!

**- க.ஷியா**
இலங்கை

# ஔவையைப் போற்றிடுவோம்



ஔவையை நாளுமே போற்றிடு வோம் - அவர்
அன்னையாம் நமக்குப் போற்றிடு வோம்
செவ்விய நூல்களைக் கற்றிடு வோம் - அவர்
செந்தமிழ் நேர்த்தியைப் பற்றிடு வோம்!

ஆத்திச்சூ டிதன்னைத் தந்தவராம் - அவர்
அதிய மான்நட்பைப் பெற்றவராம்!
மாத்தமிழ்த் தாயென்று காசினி யில் - அவர்
மங்காதப் பேர்புகழ் பெற்றவராம்!

சாதிகள் இல்லையென் றோதிய வர் - அவர்
சன்மார்க்கம் யாவையும் காட்டிய வர்!
சேதியெ லாமிங்கு செப்பிய வர் - அவர்
செந்தமிழ் அன்னையென் றாகிய வர்!

வள்ளுவர்த் திறத்தைப் போற்றியவர் அவர்
வண்டமிழ்த் தொண்டினை ஆற்றியவர்
துள்ளியோர் திமிரைத் தூற்றியவர் அவர்
தூயநல் லுள்ளத்தை ஏற்றியவர்!

வேண்டிய காலத்தில் தோன்றியவர் அவர்
வெற்றியை நாட்டினில் ஊன்றியவர்
மாண்டவர் போலிங்குத் தோன்றுபவர் அவர்
மன்னருக் குமிறை யாகியவர் !

அவ்வையென் றால்மூத்த அன்னையென் பார் - நாட்டில்
ஆதியில் தோன்றிய சாமியென்பார்
அவ்வையின் புகழைப் பாடிடுவோம் அந்த
அன்னைக்கும் ஆரங்கள் சூடிடுவோம் !

இராம வேல்முருகன் வலங்கைமான்



# ஆத்துமேட்டு ஆலமரம்

ஆத்துமேட்டு ஆலமரம்
அடியினிலே களுங்கடியான்
ஊருமக்கள காத்திடவே
ஒத்தயாக காவலிருப்பான்
பள்ளிக்கால பருவத்திலே
துள்ளி நாங்க வந்ததுமே
வாதுல தொங்கி ஆடிடவே
வசதியாக எமக்கு இருந்ததுவே...

ஆடிப்பாடி முடிஞ்சதுமே
அடிவயிற பசி கிள்ளியதும்
காய்ச்சிருந்த ஆலம்பழம்
கனிவா பசி போக்கியதே
எங்க ஊரு ஆலமரம்
எல்லோர் மனசிலும் வாழும்மரம்
எல்லையில்லா இன்பம் தந்து
எப்போதும் நிழல் பரப்பும் மரம்

ஒத்தயா நாங்க போனாலும்
ஒட்டுமொத்தமா ஆடிப் பாடினாலும்
பெத்த புள்ளகள போல எம்மை
பேதமின்றி ஆதரிக்கும் தினம்
நெஞ்சமெல்லாம் நிழல் தந்து
நெடுநாளாய் தவமிருந்து
காவத்தையூருக்கு கர்ணன் போல
காலமெல்லாம் வாழுதிங்கே...

**- பழனியாண்டி கனகராஜா**

# இருபத்திநாலு மணிநேர பகல்

வாகை மரத்தடியில் தூக்கம்
சோகமாய் அமர்ந்திருந்தது!

தூரத்தில் இரவு
செத்துக் கிடந்தது!

தாகம் தேடிய தண்ணீர்
அழுது சோர்ந்த நிலவுக்கு
ஆதரவு கரம் நீட்டியது!

மல்லிகை மணமும்
ஜல் ஜல் ஒலியும்
சுதந்திரம் போனதாய் அரற்றின!

அரவான்களும் கோட்டான்களும்
பசியைத் தின்று கொண்டிருந்தன!

சோகம் நிரந்தரமாய்
இரவு காவலாளியிடம்
ஒட்டிக்கொண்டது!

மோகமும் விரக தாபமும்
இச்சையிடம்
கால நீட்டிப்பு கேட்டன!

இருபத்திநாலு மணிநேரமும்
வேலைசெய்ய மறுத்து
கடவுளிடம் முறையிட்டது பகல்!

கடவுள் என்னைப் பார்த்தார்!
கைகளை பிசைந்து
கொண்டிருக்கிறேன் நான்!

**- ஜேசு ஞானராஜ், ஜெர்மனி**



# அ(ம்)ன்புகள்



ஃபாத்திமா,
ஷார்ஜா

பூ, பழங்கள், தேங்காய், ஸ்வீட் பாக்ஸ்… எல்லாவற்றையும் சரிபார்த்துக் கொண்டு, பையில் வைத்துக் கொண்டாள் கலா. மகன் குமாரும், மகள் ரமாவும் காரில் அமர்ந்து கொண்டு அம்மாவுக்காகக் காத்திருந்தார்கள்.

பையைக் கவனமாக எடுத்துக் கொண்டு முன்வாசலைப் பூட்ட சாவியை எடுத்த கலாவிற்கு, எதிர்வீட்டு வாசலில் காயத்ரி நின்றிருப்பதைப் பார்த்தவள், உடனே செல்போனை எடுத்து "அருணா, எம்பையனுக்கு ஒரு நல்ல வரண் வந்திருக்கு, இதையே பேசி முடிச்சிருலாம்னு கிளம்பிட்ருக்கோம். இந்த நேரம் பார்த்து உம்பொண்ணு வாசல்ல வந்து நிக்கிறா, கொஞ்சம் உள்ளே கூப்பிடு, கல்யாணமான ரெண்டு மாசத்திலேயே புருசன ஆக்சிடென்ட்ல பறிகொடுத்துட்டு வந்தவ மொகத்துல முழுச்சிட்டுப் போனா, போற வேலை நல்லாவா இருக்கும்? நீங்களாத்தான் புரிஞ்சிக்கணும்" கலா பேசி முடித்ததும்,

இல்ல கலா, அவ ஃப்ரன்டு வர்றாளாம், லொகேசன் அனுப்பியும் கண்டுபிடிக்க முடியல, கொஞ்சம் வெளில வா, பக்கத்தில வந்துட்டேன்னு சொன்னாளாம், அதான் நிக்கிறா… நீங்க கிளம்புங்க நான் காயத்ரியை உள்ளே கூப்பிட்டுக்கறேன்" கனத்த மனதுடன் கலங்கிய கண்களுடன் பேசி முடித்தாள் அருணா.

காயத்ரி உள்ளே போனதும் காரில் ஏறிக்கொண்டு பெண்வீட்டிற்குச் சென்றார்கள். வெளிவாசல்வரை வந்து வரவேற்றார்கள் பெண்ணின் தாத்தா, அப்பா, தம்பிகள் இன்னும் இரண்டு உறவினர்கள். உள்ளே நுழைந்ததும் முகம்மலர முதலில் வரவேற்றது பெண்ணின் பாட்டி. பிறகு அம்மா சில உறவினப் பெண்கள்.

பெண்ணை அழைத்துவந்தார்கள். மிகவும் பிடித்துப்போனது. "எங்களுக்குப் பொண்ணை ரொம்பப்பிடிச்சிருக்கு. உங்களுக்கு எம்பையன பிடிச்சிருந்தா பேசிமுடிச்சி நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறிச்சிடாலம்" என்றாள் கலா.

"உங்களுக்கு ரெண்டு பிள்ளை காளாம்மா?"என்று பெண்ணின் பாட்டி பேச ஆரம்பித்ததும், ஆமாங்கம்மா என்றாள் கலா. உங்க வீட்டுக்காரர் எங்கே? என்று பாட்டி கேட்டதும்,"ரொம்ப வருசத்துக்கு முன்னாடி ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டார்மா" என்ற கலாவிடம்"ஓ, அப்படியா? உங்க பொண்ணுக்கு கல்யாணமாயிடுச்சா? என்ற பாட்டியின் கேள்வி தொடர்ந்தது. "ஆய்ருச்சுமா, மாப்பிள்ளையோட சென்னைல தான் சந்தோசமா இருந்தா. பாழாப் போன கொரோனாவுல போன வருசம் மாப்பிள்ளை இறந்துட்டார். அப்புறம் நான் என்கூட இவள கூட்டிட்டு வந்துட்டேன்.

"அப்போ உங்க ரெண்டு பேருக்கும் வீட்டுக்காரங்க இல்லை…? அப்படியிருக்கற இடத்துல எம்பேத்தி அவ வீட்டுக்காரரோட எப்படி சந்தோசமா இருப்பா?நான் என்ன சொல்லவர்றேன்னா… என்று தொடர்ந்த பாட்டியை "இல்லம்மா, நீங்க ஒன்னும் சொல்ல வேணாம், பொண்ணைக் கொடுக்கிற உங்களுக்கு நாலையும் யோசிக்கிறதுக்கு உரிமை இருக்கு, நாங்க கிளம்பறோம்" என்ற கலா கொண்டுபோன பையை மீண்டும் கையில் எடுத்துக் கொண்டு பிள்ளைகளோடு காரில் ஏறினாள்.

காலையில் எதிர்வீட்டு அருணாவிற்கு தான் எறிந்த அம்புகள், தன்னை நோக்கி பெண் வீட்டார் மூலம் திரும்பியுள்ளதே! அதன் வலி மிகவும் கொடூரமாக உள்ளதே, திரும்பத் திரும்ப ஒலித்து என்னைக் கொல்கிறதே! கலாவால் கண்ணீரைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. நம் வீட்டில் இவ்வளவு குறைகளை வைத்துக் கொண்டு அருணாவை நோகடித்தது எந்த விதத்தில் நியாயம்? இன்னும் பல கேள்விகளுடன், ஒரு தீர்க்கமான முடிவுடன் கார் ஓட்டிக் கொண்டிருந்த மகனிடம் திரும்பினாள் கலா.

“குமாரு, நான் என்ன சொன்னாலும் கேட்பியா?” என்றாள், “நீங்க சொல்றதத் தானேம்மா இவ்வளவு நாளும் கேட்டுட் ருக்கேன். என்ன செய்யணும் சொல்லுங்க” என்ற மகனிடம் நேரே “காரை நம்ம எதிர்த்த விட்டுல நிப்பாட்டிட்டு நீயும் ரமாவும் என்கூட அருணா வீட்டுக்குள்ல வாங்க” என்றாள். “சரிம்மா” என்ற குமார் சொன்னபடியே செய்தான்.

திடீரென வந்த கலாவையும், பிள்ளைகளையும் பார்த்த அருணா பயம் கலந்த உணர்வுடன் வரவேற்றாள். போன காரியம் நடக்கலையோ, காயத்ரி வாசலில் நின்றதுதான் காரணமென்று சண்டைபோட வந்திருக்காங்களோ என்ற பல குழப்பங்களுடன் நின்றிருந்த அருணா விடம், “அருணா, ஒரு தாம்பளம் குடு” என்று கேட்டாள் கலா. ஒன்றும் புரியாமல் எடுத்துக் கொடுத்தாள் அருணா. தாம்பளத்தில், தாம்பூலங்களான பூ, பழங்கள் இத்யாதிகளை எடுத்து வைத்து, “இந்தா அருணா, காயத்ரியை எனக்கு மருமகளாக்கணும், புடிச்சிருந்தா தாம்பளத்தை வாங்கிக்க” என்று கொடுத்தாள்.

“உங்களுக்கெல்லாம் சம்மதம்தானே?” என்ற கலாவிடம், “நீங்க சொன்னா சரிதான்ம்மா என்றார்கள் மகனும், மகளும். காயத்ரியின் மௌனமே சம்மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நன்றி நிறைந்த மனதுடன் தட்டை வாங்கினாள் அருணா. “முகூர்த்த தேதியைக் குறிச்சிட்டு சொல்றேன்” என்ற கலாவிடம், “என்னாச்சு கலா? திடீர்னு இப்படியொரு மாற்றம்? என்ற அருணாவிடம். “நம்ம ரெண்டு பேருமே கணவர் இல்லாத விதவைகள். நிறைய அவமானங்களைத் தாங்கி வாழ்ந்துட்டோம். அதைப் புரிஞ்சுக்காம உன் மகளை நான் வேதனப்படுத்திட்டேன். எனக்கும் ஒரு விதவை மகள் இருக்கறத மறந்துட்டேன். அதுதான் காயத்ரிக்கு நல்ல வாழ்க்கயை அமைச்சுக் கொடுக்லாம்னு முடிவெடுத்துட்டேன்” என்றாள்.

கிளம்ப இருந்த கலாவிடம்,”நானும் ஒரு விசயம் சொல்லணும் கலா. குமார்க்கு நீ வெளில பொண்ணு பார்த்துகிட்டு இருந்தே, கல்யாணம் முடிஞ்சபிறகு சொல்லுவோம்னு இருந்தேன். போனமாசம் என் அக்கா இங்கே வந்திருந்தா, நம்ம ரமாவப் பார்த்துட்டு விவரம் கேட்டா, நான் நடந்தத சொன்னேன். அக்கா மகன் திருச்சியில ஆடிட்டரா இருக்கான். ஒரே பையன். அக்கா தங்கச்சிகளுக்கெல்லாம் கல்யாணம் பண்ணிட்டுத்தான் நான் பண்ணிக்குவேன்னு இருந்தான். இப்போ முப்பத்தஞ்சு வயசாகுது. அதனால வர்ற வரனெல்லாம் தள்ளிப்போகுது. நம்ம ரமா விவரம் தெரிஞ்சும் அக்காவீட்ல எல்லாரும் ரமாவைப் பெண் கேட்டு உன்னிடம் பேச சொன்னாங்க. உனக்கு சம்மதமா? அந்தக் காலத்துல கணவன் இல்லாம நாம இருந்திட்டோம். அப்படி ரமா இருக்க வேணாம். ரமாவிடம் எடுத்துச் சொல்லு. சின்னப்பிள்ளைகள் சிறப்பா வாழட்டும்” என்று எல்லாவற்றையும் ஒரேயடியாக பேசி முடித்தாள் அருணா.

தான் எறிந்த அம்புகள் மட்டுமல்ல, நாம் கொடுத்த அன்புகளும் திரும்பக் கிடைக்கின்றனவே. இன்ப அதிர்ச்சியில் ஒன்றும் பேசாமல் நின்றிருந்த கலா ”நீ சொன்னா சரிதான் அருணா, அவங்களுக்கே விருப்பம்னா நான் என்ன சொல்ல முடியும்? எல்லாம் நல்லபடியாக நடக்கட்டும்” என்ற கலா, பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கை அமைந்ததில் கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். காயத்ரியை வாசல் வரை அழைத்துவந்து கன்னத்தில் முத்தமிட்டு, “சீக்கிரமா கல்யாணங்களை முடிச்சிரு வோம்”என்றுகூறி மகிழ்ச்சியாக வீடு திரும்பினாள் கலா. ■

# நிஜங்கள்...!

**மரீனா இல்யாஸ் ஷாபி**
நியூ ஸிலாந்து

சஹானா வேலை விட்டு வீட்டுக்கு வந்ததும் பரபரவென்று சமையலை முடித்து விட்டுத் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் சுடச்சுட உணவைப் பரிமாறினாள். அவளது கணவன் இம்ரான் தன் கைத் தொலைபேசியைத் தட்டிக்கொண்டே சாப்பிட்டான். தனது சமையலைப் பற்றி ஒரு வார்த்தையாவது அவன் சொல்ல மாட்டானா என்று சஹானா தன் கணவனை ஏக்கத்தோடு பார்த்தபடி அவன் அருகிலேயே அமர்ந்திருந்தாள். ஆனால் அவன் கவனம் எல்லாம் முகநூலில் இருந்தது...

"வாப்பா... அடுத்த கிழமை 'கிளாஸ் ட்ரிப்' போறதுக்கு எனக்கு ஒரு புதிய 'ஷூ' வேணும்..." சஹானா - இம்ரான் தம்பதிகளின் இளைய மகள் சித்தி தந்தையோடு பேச முற்பட்டாள். இம்ரான் வேறு ஒரு உலகத்தில் இருந்தான். அவனின் கவனத்தை கலைக்க முயன்றதற்காக சித்தி மீது எரிந்து விழுவானோ என்று சஹானாவுக்குப் பயமாக இருந்தது. "பேசாம சாப்பிடுங்க மகள்... வாப்பா 'பிசி'யா இருக்காரு... பிறகு பேசலாம்..." என்ற தாயின் வார்த்தைகளில் சித்திக்கு திருப்தி இல்லை. «வாப்பா என்கிட்ட பேசுறதே இல்லை...» என்று சிணுங்கிக் கொண்டே சாப்பிட்டு முடித்தாள்...

சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவி வைத்துவிட்டு குழந்தைகளைப் படுக்கைக்குத் தயார் படுத்தும் போது அவளது மூத்த மகன் முனீர் 'கேம்' விளையாட வேண்டும் என்று 'ஐபேட்' கேட்டு என்று அடம் பிடித்தான். சஹானா கண்டிப்புடன் மறுத்தாள். «நேரத்துக்கு தூங்கினால் தானே காலையில் 'ஸ்கூல்'போக எழும்ப ஏழும்...«என்று காரணம் சொன்னாள் . "வாப்பா மட்டும் எப்பவுமே 'மொபைல் 'பார்த்துட்டே இருக்காரு...எனக்கு மட்டும் ஏன் தர மாட்டீங்க...?" என்று முனீர் துடுக்குத்தனமாகக் கேள்வி கேட்ட போது அவனை சமாதானப்படுத்தி படுக்கைக்கு அனுப்புவதற்குள் சஹானாவுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது.

சஹானா - இம்ரான் தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள். மூத்த மகன் முனீருக்கு பதினொரு வயது. அதற்கடுத்து இரண்டு பெண் குழந்தைகள். இபாமாவுக்கு 9 வயது. சித்திக்கு 8 வயது. இந்த மூன்று குழந்தைகளும் தந்தையின் அன்புக்காக ஏங்குவதை இம்ரான் கண்டு கொள்வதாக



இல்லை. வேலைக்குப் போவதையும் வருவதையும் தவிர அவனது நேரம் முழுவதும் அவன் கைபேசியுடன் செலவாகிறது. அவனது முகநூலில் அவனுக்கு மூவாயிரத் துக்கும் மேற்பட்ட நண்பர்கள். அதைத் தவிர எத்தனையோ 'வாட்ஸ்அப்' குழுமங்களில் சேர்ந்திருக்கிறான். அவனது கவனம்

கொஞ்சமாவது தன் பக்கம் திரும்ப மாட்டாதா என்று ஏங்குவது குழந்தைகள் மட்டுமல்ல, மனைவி சஹானாவும் தான்...

குழந்தைகளைத் தூங்க வைத்து விட்டு தன் கணவனிடம் வந்தாள் சஹானா. அவன் தனது முகநூல் தோழியின் புகைப் படத்தை வர்ணித்து பின்னூட்டம் எழுதிக் கொண்டிருந்தான். ‘‘என்னங்க... மணி 11 ஆகுது... தூங்கலையா...?’’ என்று நாசுக்காக அவள் கேட்டாள். இம்ரானுக்கு சுர்ரென்று கோபம் வந்தது. ‘ஆபீஸி’லிருந்து களைச்சுப் போய் வீட்டுக்கு வந்து ‘ஃப்ரெண்ட்ஸோ’ட கொஞ்ச நேரம் ‘ஜாலி’யா பேசலாம்னு பார்த்தா... உங்களுக்கு பொறுக்காதே. உங்களுக்குதூக்கம்வந்தாநீங்கதூங்குங்க... ஏன் என்ன ‘டிஸ்டர்ப்’ பண்றீங்க...?’’ என்று எரிந்து விழுந்தான். அமைதியாக படுக்கைக்குச் சென்று தலையணையைக் கட்டிக்கொண்டு சத்த மின்றி அழுதாள் சஹானா. பின்பு அப்படியே தூங்கிப் போனாள்.

நடுநிசியில் ஏதோ கெட்ட கனவு கண்டு திடுக்கிட்டு விழித்தாள் சஹானா. அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. தண்ணீர் குடிக்கலாம் என்று எழுந்த போது கூடத்தில் வெளிச்சம் தெரிந்தது. மெதுவாக எட்டிப்பார்த்தாள். நேரம் ஒரு மணியைத் தாண்டியிருந்தது. இம்ரான் ‘வாட்ஸ்அப்’ ‘குரூப்’பில் ஏதோ ஒரு ‘ரிகோடிங்’ கேட்டுக்கொண்டிருந்தான். தூங்க வருமாறு அழைத்தால் கோபித்துக் கொள்வாரோ என்ற பயத்தில் அவள் பேசாமலேயே மீண்டும் தூங்கச் சென்றாள்.

காலை ஐந்து மணிக்கு அலாரம் அடித்த கையோடு எழுந்த சஹானா காலைக் கடன்களை முடித்துவிட்டு, பின்னர் ‘சுபஹ்’ தொழுகையை நிறை வேற்றி, சமையலையும் முடித்துவிட்டு, தன் கணவனையும் குழந்தை களையும் எழுப்பினாள். பின்னர் தேனீர் ஊற்றிக் குழந்தைகளுக்கு பரிமாறும்போது “வாப்பா மட்டும் எப்படி ‘சுபஹு’ தொழாம தூங்குற...?” என்ற முனீரின் கேள்வியில் சற்று தடுமாறினாள் சஹானா. “அவரை அப்போவே



●

தொடரும் பெருமழை
குழந்தைகளின் மனதில்
நின்றுபோன விளையாட்டின் ஞாபகம்.

●

வானில் மிதக்கும் மேகங்கள்
மண்ணில் நகரும் நிழலில்
இளைப்பாறுகின்றன மரங்கள்.

●

ஆலமர விழுதுகளில்
ஊஞ்சலாடும் குழந்தைகள்
காற்றில் கலக்கிறது குதூகலம்.

●

வேலிக்குள் அடைபட்டிருக்கும்
மலர்ந்த ரோஜா
சுதந்திரமாய் வருகிறது வாசம்.

●

இடிபாடுகளுக்கிடையே
துளிர்க்கும் மரக்கன்று
நீர் தெளிக்கிறது வானம்.

**ச. கோபிநாத்**
சேலம்

சுற்றுகின்ற ராட்டினத்தில்
சுழலுகின்ற வாழ்க்கை முறை
நித்தமும் படிப்பினை

**சா. நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

எழுப்பி விட்டேனே...” என்று தனக்குத்தானே பதில் சொல்லிக்கொண்டு அறையை எட்டிப் பார்த்தாள் சஹானா. இம்ரான் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். சஹானா அவனை மீண்டும் தட்டி எழுப்பி போர்வையை விலக்கி விட்டாள். «சே... ‘ஆபீசுக்’கு ‘லேட்’ ஆச்சு என்று அவன் அலுத்துக் கொண்டே எழுந்து குளியலறையில் நுழைந்தான் .

சஹானா அவசர அவசரமாக காலை / பகல் உணவுகளைத் தயார் செய்துவிட்டு, பிள்ளைகளுக்கு தேவை யான சிற்றுண்டிகளையும் செய்து முடித்து அவர்களுக்குப் பொதி செய்து கொடுத்தாள். அவளது பிள்ளைகள் மூவரும் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து பாடசாலைக்கு நடந்தே போய் விடுவார்கள். அவர்களை வழி அனுப்பிவிட்டு தானும் வேலைக்குப் போகத் தயாரானாள் சஹானா. அவள் உடை மாற்றிக் கொண்டு வெளியே வருவதற்குள் இம்ரான் தன் மோட்டார் சைக்கிளில் ஏறி உதைக்கும் சத்தம் கேட்டது. தான் கட்டி வைத்த சாப்பாட்டை எடுத்து இருக்கிறானா என்று ஓடி வந்து பார்த்தாள் சஹானா. அவன் அதை எடுத்து சென்று விட்டான் என்று உறுதியானதும் தானும் வேலைக்குப் போவதற்காக பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள்.

சஹானா வேலைக்குப் போய் சில மணிநேரங்களில் தொலை பேசியில் அவளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. பதறியடித்துக்கொண்டு வைத்திய சாலைக்கு ஓடினாள். அங்கே பலத்த காயங்களுடன் பாதி மயக்கத்தில் முனகிக் கொண்டிருந்தான் இம்ரான்.

அவன் தூக்கக்கலக்கத்தில் வாகனம் ஓட்டியதால்விபத்துக்குள்ளாகிசுயநினைவு இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள அவளுக்கு அதிக நேரம் தேவைப்படவில்லை. கண்ணில் பட்ட ஒரு தாதியிடம் விபரம் கேட்கிறாள். அவனது காலில் ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டி இருப்பதாக சொன்னார்.

சஹானா நொறுங்கிப் போய் அவனது காலடியில் உட்கார்ந்து விசும்பினாள்.

இம்ரான் கண்விழித்துப் பார்த்த போது அவனது காலடியில் தன்னை அறியாமல் கண்ணயர்ந்து போயிருந்தாள் சஹானா. அவன் மெதுவாக தன் கைத் தொலைபேசியை எடுத்து ஒரு ‘செல்பி ‘ எடுத்து முகநூலிலும் ‘வாட்ஸ்அப் குரூப்’பிலும் பதிவிட்டான்.

தன் விபத்தைப் பற்றித் தெரிந்தால் விழுந்தடித்துக் கொண்டு நண்பர்கள் நலம் விசாரிக்க வருவார்கள் என்பது அவனது எதிர்பார்ப்பாக இருந்தது... ஆனால், சில விருப்புக் குறிகளும், நலம்பெற வேண்டுகிறேன் என்ற பிரார்த்தனைகளும் ஒரே ஒரு நாள் படம்போல் முகநூலில் ஓடி மறைந்து விட்டது. இம்ரானுக்கு கோபம் கோபமாக வந்தது. சில நாட்களுக்கு முகநூல் பக்கம் தலை காட்டுவதில்லை என்று தனக்குத் தானே சபதம் எடுத்துக் கொண்டான். ஒரு வாரம் கடந்தும் தன்னை யாருமே தேடவில்லை என்பதை உணர்ந்தபோது இம்ரான் ஏமாற்றத்தில் துவண்டு போனான்.

ஒருவார சிகிச்சையின் பின்னர் இம்ரான் வீடு செல்வதற்கு டாக்டர் அனுமதி அளித்தார். அவனைக் கூட்டிப் போக வந்த சஹானா கைத்தாங்கலாக அவனை பிடித்து கட்டிலை விட்டு எழுந்து இருக்க உதவி செய்தபோது இம்ரான் அவளைப் புதிதாகப் பார்ப்பது போல் கரிசனையோடு பார்த்தான்.

‘பாவம் இவள்... எனக்காக எவ்வளவு சுமைகள் சுமக்கிறாள்... வீட்டு வேலை, சமையல், குழந்தை வளர்ப்பு... என்று மட்டும் இல்லாமல் வெளியே சென்று தொழில் செய்து வீட்டுச் செலவுக்கும் பங்களிப்பு செய்கிறாள். கடைசியாக நித்திரைக்குச் சென்று முதல் ஆளாக எழுந்திருக்கிறாள். ஆனால் நான் அவளுக்கு என்ன செய்து இருக்கிறேன்? அவளுடன் கனிவாகப் பேசி பல வாரங்கள் ஆகிவிட்டன.

அவளையும் குழந்தைகளை வெளியில் கூட்டிச் சென்று பல மாதங்கள் ஆகிவிட்டன. முகம் தெரியாத நண்பர்களுடன் சல்லாபிப்பதற்காக முகத்திற்கு எதிரே நிற்கும் உறவுகளை மூட்டை கட்டி வைத்திருந்த தன் முட்டாள்தனத்தை நினைக்க அவனுக்கு வருத்தமாக இருந்தது.

இம்ரானின் கண்ணோரம் நீர் கசிந்ததைக் கவனித்த சஹானா, "வலிக்குதா...?" என்று அக்கறையோடு கேட்டாள். அந்த அன்பில் அவன் இதயம் உதிர்ந்து அவளது காலடியில் விழுந்து விடும் போல் இருந்தது.

இம்ரான், அவள் கரிசனையை முழுமையாக உணர்ந்து அதில் தொலைந்து போனான். அந்த விபத்தில் கிடைத்த அனுபவம் அவனை ஒரு புது மனிதனாக மாற்றி இருந்ததது. ஆனால், முகநூலில் தன்னிடம் உருகி உருகிப் பேசி பணம் பறித்த பெண்ணைப் பற்றிய விபரங்களை மனைவியிடம் சொல்வதா வேண்டாமா என்று தடுமாறினான். குற்ற உணர்ச்சி அவனைச் சொல்லத் தூண்டியது ..

வீடு திரும்பிய போது குழந்தைகள் யாருமே வீட்டில் இல்லை. இம்ரான் வைத்திய சாலையில் இருந்த போது குழந்தைகள் உம்மம்மா வீட்டில் போயிருந்தனர். சந்தர்ப்பம் சரியாக இருந்த தால், இம்ரான் தயங்கிய தயங்கி விஷயத்தை ஆரம்பித்து, தலையைக் குனிந்து கொண்டே விபரத்தை சஹானாவிடம் சொல்லி முடித்தான். முடிவில் பயமும் பதட்டமும் அவனைத் தொற்றிக்கொண்டது. ஆனால், அவன் எதிர்பார்த்ததுபோல எரிமலை வெடிக்கவில்லை...

"என் பிரார்த்தனை வீண் போக வில்லை..." என்று அமைதியாகச் சொல்லி விட்டு நகர்ந்த மனைவியின் வார்த்தை களில் அவன் அதிர்ந்து போனான். 'அவளுக்கு ஏற்கனவே எல்லாம் தெரியுமா...?' கேள்வி கேட்கும் தைரியம் அவனுக்கு இருக்கவில்லை... முகநூல் கணக்கை அவசர அவசரமாக முடக்கி விட்டு குழப்பத்தோடு கட்டிலில் சாய்ந்தான் ...!

## விடுகதை
## தன்முனைக் கவிதைகள்

1
சூரியனைச் சுற்றி வரும்
தங்க வண்ணக்காரி
சமைக்க எண்ணெய் தருவாள்
சிறுபூ கூட்டுக்காரி

2
கோடி கொடுத்தாலும்
கிட்டாத முத்து
உழைப்பால் உயிர்க்கும்
உன்னத முத்து

3
நீலநாக்கு நெட்டையனுக்கு
உடம்பெல்லாம் புள்ளியாம்
நீண்ட கழுத்தாலே
உச்சி மரத்தை உரசுவானாம்

4
உயரமான இடத்தில்
ஒய்யார அரண்மனை
மதுரமான நீருக்கு
ஓராயிரம் காவல்

5
பிரிந்தவரை ஓடியோடி
இணைத்து வைத்தான்
வாலின் நீளம் குறைய
வாட்டமாக நின்றான்

அன்புச்செல்வி சுப்புராஜூ

**விடைகள்**

1. சூரியகாந்திப் பூ
2. வியர்வை
3. ஒட்டகச்சிவிங்கி
4. தேன்கூடு
5. ஊசி, நூல்

# வேதாளம் பதில்கள்

## தொடரும் கேள்விகளை கேட்கலாம்.

1. கண்ணதாசன் என்ற கவிஞரைப் பற்றி
பாமரன், இளையாளூர்

கண்ணதாசன் இந்த நூற்றாண்டின் இணையற்ற கவிஞன். இலக்கியங்களைப் படித்து அவற்றின் சாற்றைத் திரைப்படப் பாடல்களில் ஊற்றிக் கொடுத்தவன்.

2. தமிழின் வயது என்னவென்று வேதாளத்திற்குத் தெரியுமா?
நிலவன், நிரவி

நாம் நினைப்பது போல் 2000 , 5000 ஆண்டுகள் வயது கொண்டவள் அல்ல தமிழ். வேதாளம் தமிழின் வயது சுமார் 50000 இருக்கலாம் என நம்புகிறது.

3. இப்போது மரபுக் கவிதை எழுதுவோரின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறதே?
கோவிந்தராசு, ஆக்கூர்

உண்மைதான் . நிறைய கவிஞர்கள் மரபின் பக்கம் வருகிறார்கள் . வருவதோடு மட்டுமின்றி நன்றாகவே எழுதுகிறார்கள்.

4. கவிஞர்களுக்குள் ஒற்றுமை அதிகமாகியுள்ளதா?
அஞ்சலி குமார், வியாசர்பாடி

ஆமாம் இரண்டு மூன்று கவிஞர்கள் ஒன்று சேர்ந்து நூல் எழுதுவதும் ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கானோர் கூடிக் கவிதை பாடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது

5. உலகின் அழகான இடம் எது?
ரேவதி, புதுச்சேரி

தாயின் கருவறைதான் ; பாதுகாப்பான இடமும் அதுதான்.

6. ஒற்றுப் பிழையுடன் எழுதும் கவிஞர்களைப் பற்றி.
மகேந்திரன், நாகை

சற்று மன வருத்தம் தருவதாகத்தான் உள்ளது. பிரபலமான கவிஞர்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை பிழையுடன் எழுதுவதைப் பார்த்தால் அவர்கள் மேலுள்ள மதிப்பும் மரியாதையும் குறைகிறது.

7. கவிஞர்களுக்குள் சிண்டிகேட் வைத்து ஒருவருக்கொருவர் புகழ்ந்து கொள்வது பற்றி.
கவி பெருமாள், கோவை

அதனால் என்ன இருந்துவிட்டுப் போகட்டுமே மற்றவர்கள் புகழவில்லை என்பதால் தங்களுக்குள்ளேயே புகழ்ந்துகொள்கிறார்கள்.

8. வசதி படைத்தவர் கவிதையை ஆகா ஓகோ என்று பாராட்டுகிறார்களே ஏன்?
பூங்கொடி, காரைக்கால்

தனக்கும் ஏதும் கிடைக்காதா என்பதால்தான்

9. ஒரு கவிதை எழுதிவிட்டுப் பாவலர் ஆகி விடுகிறார்களே?
பாவெழில், மதுராந்தகம்

பாவலர் ஆவதற்கு ஒரு பா போதும் என்று நினைத்திருப்பார்கள்

10. வைரக்கற்களுடன் உப்புக்கற்களும் கூத்தாடுகின்றனவே?
பழங்குடி கண்ணன், மேல்மருவத்தூர்

மழை பெய்யும் வரைக் காத்திருப்போம்

## உன்னோடு என் பயணம்

கையோடு கைகோர்த்து
மருதாணி வாசம்
பரிமாறிக் கொள்வோமா ?
மண்ணோடு மரமாய்
வேர்விட்டுக் காதல்
உயிர் வளர்ப்போமா ?
பாய்மரக் கப்பலெனக்
காற்றின் திசையாவும்
கடலாடிக் களிப்போமா
கூடியாடி மகிழ்வோமா?

முன்னாலே நடந்தாலே
பின்னாடி நான்
வருவேனே ! - கொஞ்சும்
கொலுசொலி வழித்
துணையாய் வருமோடி
பஞ்சு மென்பாதம்
நோகாமல் மனதைப்
படரவிட்டேன் ! - என்

பவள மல்லிப்
பூச்சரமே உறவாடு !
நானழுதக் கண்ணீரே
உப்புக் கடலானதடி ..
உன்னோடு உரையாடி
நீண்ட. காலமானதடி....

நண்பகல் நிழலாய்
ஒன்றாய்க் கலப்போமா
மாலை நிழலாக
பிரிவு நீளுதடி ...
உன்னோடு வருவதாயின்
நரகத்துக்கும் வருவேன்டி !

**- செல்வம் பெரியசாமி.**



# அப்பா

காலங்கள் மாறிடினும் எந்தக்
காலத்தும் வாழ்வாரே அப்பா
ஞாலத்தில் எல்லோரும் போற்றும்
ஞானத்தைத் தந்ததுயெம் அப்பா
ஆலத்தின் உறுதியினை எந்தன்
ஆழ்மனதில் விதைத்ததுயெம் அப்பா
சேலத்து மாம்பழத்தைத் தந்து
சேட்டைகளை ரசித்ததுயெம் அப்பா

பார்த்திருக்கேன் பார்த்திருக்கேன் சாமி
பலபேரும் கும்பிடுமெம் சாமி
மார்த்தட்டிச் சொல்லிடுவேன் அப்பா
மாமன்னன் எனக்கெனது அப்பா
நார்போல தமையுரித்துக் கொடுத்து
நலமாக வாழவைத்த பித்து
கார்கால மழையெனது அப்பா
காலனுக்கும் பிடித்ததுவோ தப்பாய்

மார்மீதில் உறங்கவைத்த அப்பா...
மறுபடியும் வருவாரா சொல்வீர்
ஊர்ஊராய்ப் பேருந்து ஓட்டி
ஊரெல்லாம் எனைச்சுற்றிக் காட்டி
யார்யாரோ அவர்ப்புகழைப் பாட
ஆளுமையில் சிறந்தவரெம் அப்பா
வேறென்ன ஆணிவேரெம் அப்பா
வேண்டுமெனக் கென்றென்றும் அப்பா

- மருத்துவர் தேவி

# இறைவன்

## மலர்விழி மணியம்

“மானுடா… மானுடா…” என்று யாரோ அழைக்கும் குரல் கேட்க,

“யாருப்பா அது இந்த நடுராத்திரியல??” என்று புரண்டு படுத்த மானுடன் சற்று கண் முழித்துப் பார்த்து அதிர்ச்சியானார்.

உடல் இடது புறமாக அசையாமல் இருக்க, தன் ஆன்மா மட்டும் வலது பக்கம் திரும்பி இருப்பதைக் கண்டு பயந்து எழுந்தார்.

‘‘ஹலோ மானுடா..’’ என்ற குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிய மானுடன் முன் ஷார்ட்ஸ் டி.சர்ட் மற்றும் தலையில் ‘எமன்’ என்று பொறிக்கப்பட்ட தொப்பியும் அணிந்து ஒருவர் அமர்ந்திருந்தார்.

“நீ… நீ… நீங்க யாரு?’’

“ஏம்ப்பா, கொட்ட எழுத்துல என் தொப்பில எமன்-னு எழுதியிருக்கு? அப்புறமும் யாருன்னு கேக்குறியே பா?”

‘‘எமனா??!!!... எமன்னா பெரிய கஜை , பெரிய மீசை, தலையில் கிரீடம் எல்லாம் இருக்குமே?”

“ம்… ஐ அம் அப்கிரேடட்… வெர்ஷன் 15.0” என்ற எமனின் பதிலைக் கேட்டு,

“ஆ” என ஒரு கணம் வாய் பிளந்த மானுடன்,

“சரி. என்ன விஷயமா, இந்த ந.. நடு ராத்திரியில் வந்தீங்க?” என்று கேட்டுக் கொண்டே கனவாக இருக்குமோ என்ற ஐயத்தில் தன்னையே கிள்ள முயன்றார். ஆனால் உடல் பிடிபடவில்லை.

‘‘உங்களக் கூட்டிட்டுப் போலாமுனு தான் வந்தேன்.”

“எ… எ… எங்க?”

“பூமியில உங்க வேலை முடிந்தது. சோ சொர்கத்துக்குக் கூட்டிட்டுப் போலாம்னு வந்தேன். போலாமா?’’

சற்று யோசித்து விட்டு கட்டிலில் இருந்து கீழே இறங்கிய மானுடன், தன் குடும்பத்தாரின் புகைப்படம் தாங்கிய போட்டோ ப்ரேமை ஒரு கணம் பார்த்துவிட்டு,

‘‘அப்போ நான் செத்துட்டனா?’’ என கேட்டார்.

‘‘ஹோ கம் ஆன் மானுடா. உங்க உடலுக்குத் தான் முடிவு, உங்க ஆன்மாவுக்கு இல்ல. சீக்கிரம் வாங்க, வெளியில குதிமான் வெயிட்டிங்”.

மானுடன் வாய் திறக்கும் முன்,

“வெளிய வந்தா குதிமான் யாருன்னு தெரியும்.” என்றார் எமன்.

"ம்." என்று எமனோடு கிளம்பினார் மானுடன்.

வெளியே குதிரையும், மானும் கலந்த உருவமாக ஒரு விலங்கு நின்று கொண்டிருந்தது. உருவமே சொன்னது அதற்கு ஏன் குதிமான் என்ற பெயர் என்று.

யாரையோ தேடுவது போல மானுடன் சுற்றும் முற்றும் பார்க்க,

"யாரத் தேடுறீங்க?" என எமன் கேட்டார்.

"சித்ரகுப்தரக் காணோமேன்னு..."

"சித்குப்தனுக்கு, கொரோனா, குவாரண்டைன்ல இருக்காரு." என பரிகசித்தார் எமன்.

மிகவும் பாவமாக மானுடன் பார்க்க,

"சும்மா வெளையாட்டுக்கு சொன்னேன். இந்தக் கதையில நான் தனியாத் தான் வரேன். குதிமான் ரெண்டு பேர் வெயிட்ட தான் தாங்கும். வாங்க போலாம்" என்று கட்டளையிட குதிமான் மேல் ஏறிக்கொண்டார் மானுடன்.

செல்லும் வழியில் மிகவும் அமைதி யாக வந்தார் மானுடன். மனதில் ஒரே வலி. தான் நடத்தும் அனாதை இல்லத்தில் வசிக்கும் பிள்ளைகளை நினைத்து வருந்தினார், தன் குடும்ப உறுப்பினர்களையும் நினைத்துப் பார்த்தார், தன் குடியிருப்பின் வாசலில் எப்போதும் ஓடி ஆடிக் கொண்டிருக்கும் நாய் குட்டியை எண்ணி வாடினார், இனி யார் அதற்கு உணவு கொடுப்பார்கள் என்று, தன் வீட்டு மரத்தடிக்கு வரும் சிட்டுக் குருவியை நினைக்க முற்படும் பொழுது,

"அய்யய்யே..... போதும் மானுடா.. சும்மா தேவையில்லாம கவலைப் படாதீங்க. அவங்க அவங்க பார்த்துப் பாங்க அவங்க லைஃப்ப. ரொம்ப புலம்பாதீங்க" என்று எமன் தடுத்தார்.



1.
குளத்து நீரில்
கும்மாளம் போடுகிறது
வானத்து நிலா

2.
நெடுஞ்சாலை பயணம்
திசை மாறிப் பாய்கிறது
அருவி

3.
கொக்கின் வாயில்
குற்றுயிராய்க் கிடக்கிறது
மீனின் உயிர்

4.
பரீட்சை நேரம்
பாதியில் வந்து போகும்
வகுப்பறை நினைவு

5.
உழைப்பாளர் சிலை
ஒதுங்கியே இருக்கிறது
ஊதிய பேச்சுவார்த்தை

6.
கடற்கரை அருகே
வலைப்பின்னிக் கொண்டிருக்கிறது
சிலந்தி

7.
தோகைமயில் ஆட
துணைக்கு வருகிறது
ஆண்மயிலின் காதல்

8.
பழைய வானொலி
இன்னும் அப்படியே இருக்கிறது
அந்தநாள் ஞாபகம்

9.
பசுமை வயல்
பார்த்ததும் மனதை கவர்கிறது
சோளக்காட்டு பொம்மை

10.
குளத்து நீரில்
பாய்ந்து சத்தம் எழுப்புகிறது
சிறுவன் எறிந்த கல்

**கலைச்சுடர் காவத்தையூர்**
**பழனியாண்டி கனகராஜா**

“எப்படி நான் என் மனசுல நெனச்சது உங்களுக்கு....?” என்று கேட்டுவிட்டு, எமனின் பதிலை எதிர்பாராமல்,

“ஓகே ஓகே. நீங்க தான் எமன் ஆச்சே” என்று அவரே கூறிக்கொண்டார்.

“ஹி ஹி” சிரித்தார் எமன்.

சொர்க்கம் வந்ததும் குதிமான் நின்றது. எமனும் மானுடனும் கீழே இறங்கினர். சொர்க்க வாசலை நோக்கி நடக்க முற்படும் பொழுது,

‘‘மானுடா எனக்கு ஒரு ஹக் குடுத்துட்டுப் போங்க” என்று ஒரு குரல் கேட்க திரும்பிப் பார்த்து அதிர்ச்சியான மானுடன்,

“வி.. விலங்கு.. பே... பே... பேசுது...” என்று பிதற்றினார்.

“ஆமா இங்க எல்லோருமே பேசு வோம்” என்ற குதிமானிற்கு ஒரு ஹக் கொடுத்து விட்டு சொர்க்கத்திற்குள் சென்றார்.

உள்ளே சென்றவர் வாய்பிளந்து நின்றார். உலகில் உள்ள அத்தனை நறுமணப் பூக்களின் ஒன்று கூடிய வாசனை. இடப்புறமும் வலப்புறமும் நீண்ட வரிசையில் நிறைய அறைகள். நடுவே சிவப்புக் கம்பளம், ஆரம்பம் தெரிகிறது ஆனால் அந்த கம்பளத்தின் முடிவு கண்களுக்கு எட்டவில்லை. மிகவும் பரபரப்பாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தனர் ஆண் தேவதைகளும் பெண் தேவதைகளும்.

“மானுடா..” என்று தோளைத் தொட்டார் எமன் .

“சொர்க்கம் இவ்வளவு பெரியதா??’’ என்று மானுடன் கேட்டார்.

“ம். ம் ஆமாமா. சரி வாங்க, உங்க வேலை என்னன்னு நான் விளக்குறேன்.” என்று அங்கேயிருந்த பல்லாயிரக்கணக்கான அறைகளில் ஒரு அறையின் முன்பு அழைத்துச் சென்றார்.

அந்த அறையின் முன்பு இரு பெட்டிகள் இருந்தன. ஒன்றின் மேல் “நன்மை” என்றும் மற்றொன்றின் மேல் “தீமை” என்றும் ஒட்டப்பட்டிருந்தது.

‘என்ன?’, என்பது போல் பார்த்த மானுடனிடம்,

“இதெல்லாம் பூலோக மக்களோட வேண்டுதல்கள். நன்மை, தீமை, ரெண்டுல ஒன்னு தான கடவுள்கிட்ட வேண்டுவாங்க” என்றார் எமன்.

“சரி அத ஏன் பிரிச்சு வச்சிருக் காங்க?”

“நீங்க இந்த நன்மை விண்ணப் பங்கள எல்லாம் கடவுள் கிட்ட கொண்டு சேர்க்கனும்’’ எமன் கூற,

“அப்போ தீமை?” என்று அவசர மாக மானுடன் கேட்க,

“கேட்டவனுக்கே போய் சேரும். பூமராங் மாதிரி’’ என்றார் எமன்.

“ஓ... இந்த நன்மை விண்ணப்பங்கள நான் எப்போ கொண்டு போகனும் கடவுள் கிட்ட?»

“இப்பயே போங்க. எப்போ எல்லாம் இந்த பெட்டி நெறையுதோ எடுத்துட்டுப் போங்க»

“கடவுள் எங்கே?”

“அதோ அந்த என்டுல. இந்த சிவப்புக் கம்பளத்தோட முடிவுல ஒரு பெரிய அறை இருக்கு. அதான் கடவுளோட அறை”

எமன் கைநீட்டிய திசையில் சிவப்புக் கம்பளத்தின் முடிவே தெரியவில்லை.

“ரொம்ப தூரமா இருக்கும் போலயே. குதிமான் கூட்டிட்டுப் போகுமா என்னய?”

“ம்…??” என்று மானுடனை ஏற இறங்கப் பார்த்த எமன் , «உங்களுக்கு இறக்கை முளைக்குற வரைக்கும் நீங்க நடந்து தான் போகணும்.” என்றார்.

“எப்போ எனக்கு இறக்கை முளைக்கும்?”

“நீங்க கடவுளக் கண்டவுடனே” என்று கூறிய எமன் , “சரி சரி.. நான் உங்கள அப்புறம் பாக்குறேன், எனக்கு நிறைய வேலை இருக்கு” என்று விடைபெற்றார்.

எமன் சென்றதும் நன்மை பெட்டியைத்தூக்கிக் கொண்டு நடைபோட ஆரம்பித்த மானுடன், ‘இன்னைக்கு இந்த ஒரு தடவை தான் நடக்கணும். இந்தப் பெட்டியக் கொடுத்துட்டு கடவுளப் பார்த்துட்டா, றெக்கை முளச்சிடும், அப்புறம் பறந்து வரவேண்டியது தான்’. என்று தனக்குத் தானே சமாதானாம் சொல்லிக் கொண்டு நடை போட்டார்.

நம் மணி கணக்கின்படி ஒரு பத்து மணி நேரம் ஆகியிருக்கும், கடவுளின் அறையை அடைந்தார் மானுடன்.

கதவைத் தட்ட முயற்சித்தார், ஆனால் கதவு தானாகவே திறந்தது. உள்ளே சென்றவுடன் பளீர் என்ற மஞ்சள் நிற ஒளி நிறைந்து இருந்தது. கண்கள் இரண்டும் கூச இரு கண்களையும் மூடிக் கொண்டு பெட்டியை நின்ற இடத்திலேயே வைத்துவிட்டு வெளியே ஓடி வந்தார்..

தன் முதுகைத் தடவிப் பார்த்தார் இறக்கை முளைத்ததா என்று. அப்படி ஒரு உணர்வும் இல்லை. ”ஹூம்ம்..” என்ற பெருமூச்சுடன் தனக்குக் கொடுக்கப்பட்ட அறையை நோக்கி நடைபோட்டார். பல மணி நேரங்கள் கழித்து வந்தடையும் போது அடுத்த பெட்டி நிறைந்திருந்தது.

## அழகியல் ஹைக்கூ

வானவில் வர்ணம்
வரைந்து செல்கிறது
ஆகாய ஊர்தி

எந்திரக் கோளாறு
எரியும் நெருப்பில் சிக்கியது
இயற்கை வனம்

அந்திப் பொழுது
எரியூட்டப் பிறையானது
சூரியக் கதிர்

அந்தரத்தில் சாகசம்
விரைந்து செல்கிறது
ஏவு கணை

அக்னி மழை
தேகத்தை சுட்டெரிக்கிறது
வன்முறைச் செயல்

**கவித்தேனீ**
**மகராசிசக்திராஜ்**
*தமிழ் இமயம் கவிக்களஞ்சியம் நிறுவுநர்*

பெட்டியை எடுத்துக் கொண்டு கடவுளின் அறையை நோக்கி நடை போட்டார். இம்முறையும் கடவுளைக்காண முயற்சிக்கும் பொழுது, மஞ்சள் ஒளி கண்களைக் கூச வெளியே ஓடி வந்தார். தன் முதுகைத் தடவிப் பார்த்தார் இறக்கை முளைத்ததா என்று..
முளைக்கவில்லை...

திரும்பி அறையை நோக்கி நடக்கும் தூரத்தை நினைக்கும் பொழுது சலிப்பாக இருந்தது. கால்கள் கடுக்க ஆரம்பித்தது. சற்று நிதானித்து விட்டு, இன்று கடவுளைக் காணாமல் போவதில்லை என்ற முடிவோடு மீண்டும் கடவுளின் அறைக்குள் நுழைந்தார். இம்முறை நுழையும் முன்னமே, கண்களை மூடிக் கொண்டே சென்றவர்,

தாம் வணங்கும் தெய்வத்தின் பெயரை அழைத்தார்... பதில் இல்லை.

தம் நண்பன் வணங்கும் தெய்வத் தின் பெயரை அழைத்தார்... பதில் இல்லை.

தம் அண்டை வீட்டார் வணங்கும் தெய்வத்தின் பெயரை அழைத்தார்... பதில் இல்லை.

‘‘அடக் கடவுளே!” என்று சலித்துக் கொண்டார்.

‘‘என்னமானுடா??!!!”என்றுகடவுள் குரல் கேட்க, “சாமி” என்று அழைத்து கண்களைக் திறக்க முயன்றார் மானுடன். மீண்டும் மஞ்கள் ஒளி கண்களைக் கூச விழிகளை மூடிக்கொண்டார்.

“சாமி.. ஏன் என்னால உங்களப் பார்க்க முடியல?” என்று ஏக்கத்தோடு மானுடன் கேட்க,

“எனக்கு உருவமே இல்லையப்பா. எனக்கு உருவமும் பெயரும் மக்கள் நீங்கள் கொடுத்ததுதானே. என்னை என்னவாக உனக்குக் காண வேண்டும் என்று நினைக்கிறாயோ உன் அகக்கண்களால் உன்னுள் கடந்து சென்று பார். கட - உள். நான் அங்கு தெரிவேன்.”என்றார்.

இறுக மூடிய கண்களோடு, தான் விரும்பும் உருவத்தில் அகக் கண்களால் தன்னுள் கடவுளைக் கண்டு, விழிகளில் நீர் வழிந்தது மானுடனிற்கு. தன் முதுகில் ஏதோ வித்தியாசமான ஒரு வலி உண்டாயிற்று..

கண்கள் மூடிய வண்ணம், “நீங்கள் எந்த மதத்தின் கடவுள்?». என்று மானுடன் கேட்க,

“ஹ..ஹ..ஹ.. நான் அனைவருக்கும் பொதுவான கடவுள். நான் உங்கள் எல்லோரின் உள்ளும் இருக்கிறேன். அதை உணராமல் என்னை வெளியே தேடி அலைகிறீர்கள்.எந்த மதம் சார்ந்தும் நான் இல்லை. என்னை சார்ந்து நீங்கள் வாழ்ந்து மனிதம் வளர்க்கச் சொன்னேனே அன்றி என்னை பிரித்து வகுக்கச் சொல்லவில்லை.” என்றார்.

மேலும் கண்ணீர் கசிந்தது மானுடனிற்கு. கால்கள் தரையிலிருந்து ஒரு அடி மேலே செல்ல, காற்றில் மிதப்பது போல உணர்ந்தார் மானுடன். ஆனால் கண்களைத் திறக்க முயற்சிக்கவில்லை..

கடவுள் தொடர்ந்தார், “உங்களுக் குள் கடந்து சென்று நன்மைக்கு மட்டும் தீனி போட்டு நற்குணங்களை விதையுங்கள், உங்களை சுற்றி இருக்கும் பிற உயிர்களுக்கும் நன்மைகளையே செய்யுங்கள் உங்களுக்குள் கடவுளாக நான் வாழ்வேன் என்றென்றும்.” என்றார்.

உன்னதமான இந்த விளக்கத்தை கேட்டு கடவுளை உணரும் பொழுது மிதந்து கொண்டிருந்த மானுடனுக்கு, இறக்கைகள் இரண்டும் முழுவதுமாக வளர்ந்து தேவதை ஆனான்..

# பாலியல் கொடுமை!

கல்ஹின்னை பஹ்மி ஹலீம்தீன்



பார்க்கும் இடமெல்லாம்
பச்சையாய் இச்சை தீர்க்கும்
பாலியல் கொடுமை!

பாவிகளைக் கொன்று
பழி தீர்த்து ஆறுதல் கொள்வதா?
பலியாகும் அப்பாவிகளை எண்ணிப்
பரிதாபப் படுவதா...?

படைத்தவனே தண்டிக்கட்டும் என
பார்த்தும் பார்க்காமல் வாழ்வதா?

பாலிகைகளும்
பாலியம் தாண்டா சிறுமிகளும்
பாவக் கொடூரர்களின்
பாலியல் பசிக்கு இரையாவதும்
பலவந்தம் செய்யப் படுவதும்
பயங்கரத்தின் கேடுகெட்ட பக்கம்.

பக்குவமாய் வாழ வேண்டிய
பருவ மங்கைகள்
பள்ளியறை தேடியலையும்
பாலியல் கலாச்சாரம்
பயங்கரத்தின் கேடுகெட்ட மறுபக்கம்.

பசிக் கொடுமைக்கு
பரிகாரம் தேடி
பள்ளி செல்லும் வயதிலும்
பணத்துக்காகப்
பாய் விரிக்கிறது
பாலியல் வியாபாரம் .

பாலியல் கொடுமைகளால்
பாதி பூமி நரகமானதா
பாலியல் தொழில் புரிவோரின்
பாவக்கறைகளால் – மீதியும்
பாதகம் நிறைந்த பூமியானதா...?

பத்திரமாய் பொத்தி வளர்த்த
பாசக் குழந்தைகளை
பாவிகள் சிதைக்கும் போது
பாதி உயிரை மாய்த்து
பதறித் தவிக்கும் உறவுகளே...!

பத்திரப் படுத்த வேண்டிய
பாவைப் பொக்கிஷங்களை
பார்வைப் பொருளாக்காதீர்.

பருவமெய்து முன்னரே
பாலியல் கல்வியை
பாசக் குழந்தைகளுக்கு
படித்துக் கொடுங்கள்.

பார்வையால் கூட
பாதகர் தீண்டிடா
பாதுகாப்பு முறைகளை
பாலசிட்சைப் பாடத்திலேயே
பக்குவமாய் கற்றுக் கொடுங்கள்.

பாக்கியவதிக ளவர்களை
பாழும் கிணற்றில் தள்ளிய
பாவத்துக்கு நீங்களும்
பங்காளி ஆகிவிடாதீர்.

பாவையரே! உம் உடை நடையில்
பாலியலைத் தூண்டிவிடும்
பாவச் செயலைத் தவிர்த்து
பாதுகாப்பைப் பேணிடுவீர்.

பார்வையில் விஷம் கலந்த
பண்பற்ற மனிதர்களை
பகுத்தறியப் பழகிடுவீர்.

பாரெங்கும் பரவி விட்டது
பாலியல் கொடுமை.
பாவமென்று தெரிந்தும்
பகிரங்கமாகவே நடக்கிறது
பாழாய்ப் போன கொடுமை.

பாலியல் குற்றங்கள் மலிந்து
பாதகர் வாழும் பூமியாகிடுமா...?

பாவச் செயல்கள் ஒழிந்து
பாருலகு தூய்மை பெறுமா...?

பாழாகிச் சீரழிந்து – நரகின்
படுகுழியாய் தான் மாறிடுமா...?

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

நெஞ்சம் தனில்
நித்தம் இருப்பார்...
கஞ்சம் என காயா நதி
போலே நடப்பார்...

கொஞ்சும் தமிழ் ஊக்கம் பெற
கொள்கை வகுப்பார்...
கொட்டும் மழை தூரல் என
அன்பை விதைப்பார்...

நண்பா என நாவால் அழை
கைகள் கொடுப்பார்...
பண்போ டவர் பாசம் தனை
மெய்யாய்த் தொடுப்பார் ...

நூலில் பல நுட்பங் களை
நூர்த்தே அளிப்பார்...
பாலின் நிறம் என்றே மனப்
பாசம் விளிப்பார்...

நோன்பில் தரும் தெய்வம் இவர்
நோக்கம் அறிக...
நூறாண் டுகள் மேலும் இவர்
ஆக்கம் தருக...

.

**ஏடி வரதராசன்**



## பைந்தமிழ் அமினார் வாழ்க

இதுவரைப் பார்த்த தில்லை
யெனினுமோர் தூர மில்லை
இருவரும் தொலை விருந்தும்
எமதுளம் இணைந்து நிற்கும்
அதன்பொருள் யாது கண்டீர்
யாதெனில் ஒன்று மட்டும்
அதுதமிழ் நெஞ்சம் ஆங்கே
அன்புக்கோர் பஞ்சம் இல்லை

புதுமைகள் பூக்கச் செய்யும்
புத்தகம் தன்னில் கொண்டார்
எதுவொரு செயல்செய் தாலும்
அதன்பலன் தமிழுக் காகும்
மதுவரும் கவிதை அள்ளி
மலர்த்திடும் பான்மை மிக்கார்
புதுமலர் நெஞ்சத் தன்பர்
பூந்தமிழ் அமினார் வாழ்க



- சித்தார்த் பாண்டியன்

## பிறந்தநாள் மங்கலப் பெருவாழ்த்து

சோர்வேதும் வாராமல்
துன்பங்கள் சூழாமல்
ஆர்வம் குறையாமல்
அன்பெனும் - ஆரமுதம்
தண்டமிழோடு உண்டு
தழைத்தினிது வாழியரோ
அண்டமெலாம் போற்றும்
அமின்.

என்றும் தமிழ்ச்சுற்றம்
ஏத்திப் புகழ்பாட
மன்றமெலாம் அன்பே
மணம்பொழிய - நன்றமைந்த
நன்னாளின் மங்கலங்கள்
ஞாலம் உவந்துரைக்க
அன்புடனே வாழி
அமின்

- அன்புவல்லி தங்கவேலனார்

# ஆசிரியர் அமின் அவர்களுக்கு அகவைத் திருநாள் வாழ்த்து!

நாவிலே தேனூறும் படியாக
　　நற்றமிழில் எழுதிடுவார்! அமினவர்தம்
பாவிலே சொற்சுவையும் பொருட்சுவையும்
　　படிப்போரைப் பரவசத்தில் ஆழ்த்திடுமே
கோவிலே கட்டித்தான் கும்பிடலாம்
　　கொஞ்சமல்ல அவர்செய்யும் தமிழ்ப்பணிகள்?
காவியமாய் அவர்படைக்கும் மின்னூல்கள்
　　கவிஞரவர் திறமைதனைப் பறைசாற்றும்!

ஓவியம்போல் விளங்கட்டும் அவர்வாழ்வு
　　ஒருநூறு அகவைகள் வாழட்டும்
தேவியவள் தமிழுக்குச் சேவைசெய்து
　　தேன்தமிழில் பலநூல்கள் படைக்கட்டும்
ஆவினமும் கன்றினைக் காப்பதுபோல்
　　அரியதமிழ்க் குழுமங்களைக் காத்திடுவார்
சாவினைத் தொலைதூரம் தள்ளிவைத்து
　　சமரசமே செய்திடாத பணிதொடர்க!

நாடுவிட்டு நாடுமாறிப் போனபோதும்
　　நம்தமிழை என்றுமவர் மறக்கவில்லை!
கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தர்போல்
　　குறைவின்றி அவதாரம் பலஎடுப்பார்!
கவினுறு மின்னிதழ் வடிவமைப்பார்
　　கலைஞராகப் பரிமளிப்பா(ர்) அக்கலையில்
கவித்துவம் குன்றிடாத மரபெழுதி
　　கவிஞரில் சிறந்தாராய் முன்னிற்பார்!

**- செல்லமுத்து பெரியசாமி**



# சித்தமே தமிழாய் வாழும் செல்வராம் அமினார் வாழ்க !

நல்லதோர் தொண்டே என்றால்
நற்றமிழ்த் தொண்டே ஆகும்
எல்லையைத் தாண்டிச் சென்றே
இன்னொரு நாட்டில் வாழ்ந்தும்
வல்லமை யோடே அங்கும்
வல்லவர் தமிழின் நெஞ்சர்
சொல்லிடும் வண்ணம் தமிழ்க்குச்
சூட்டினார் மகுடம் நன்றே !

இங்குளக் கவிஞர்க் கெல்லாம்
இனியதோர் நண்பர் ஆவார்
வங்கமாக் கடலை யொத்த
வண்மனப் பண்பர் ஆவார்
தங்கமாம் அமினார் ஐயா !
தாழ்மையும் பணிவும் மிக்கார்
எங்கிலும் உள்ளத் தமிழர்
ஏத்தவே வாழ்க வாழ்க !

நித்தமும் எழுதும் கவியை
நிறைவுடன் எழிலாய் வண்ணப்
புத்தகம் ஆக்கப் பலரும்
புதுப்பதுக் கனவே காண
அத்தனை பேர்க்கும் தம்மால்
ஆனதைச் செய்யும் நல்லார்
சித்தமே தமிழாய் வாழும்
செல்வராம் அமினார் வாழ்க !

*ஏத்தவே – புகழவே ..*



கோ . சிவப்பிரகாசம் ,
கோர்க்காடு , புதுச்சேரி ..



# சித்தனாய் வாழ்கவே

காற்றாய் மேவி, கவிதையாய்த் தாவி
நற்சுவை கூட்டி நறுந்தமிழ் சிறக்க
நளினமாய் பிறப்பெடுத்தீரே!

ஆதி இறை அருளொடு ஆள வந்தீர் அன்பாலே
சாதி சனம் யாவரையும் சங்கை செய்தீர் பண்பாலே

நற்றமிழுக்கு வாய்த்த பொற்கவிதை நீரே
நாற்றிசையும் இலங்கும் கதிரொளியும் நீரே!

அருந்தமிழுக்கு வரமாய் வந்தீர்
நறுந்தேனின் சுவையாய் பாக்களும் தந்தீர்

கற்றவர்க்கு சென்ற இடமெலாம் சிறப்பாகும்.
கற்றுத் தரும் ஆசான் உம்மால்
சுற்றும் பூமியே சுவனபுரியாகும்

சீரிளமை குன்றா உம் சிந்தனைகள் யாவும்
சீர்வரிசையென மனதை யௌவனமாய் ஆளும்

பழமுதிர் சோலையெனப் பரந்திடும் உம் அன்பினிலே
பழகிடும் கிள்ளைகளும் பவனிவரும் தெம்பினிலே

இன்னும் சில நூற்றாண்டுகள்
இப்பூவுலகம் உமைக் கொண்டாடி மகிழ
கன்னல் மொழியொடு காவியம் பாடி
கவிச்சித்தனாய் காலமெலாம் வாழ்கவே!

இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

- வஃபீரா வஃபி

## இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்

இலக்கிய உலகின் ஆற்றல்!
இதமுடன் பழகும் அன்பர்!
உலகினில் தமிழர் மேன்மை
உணர்வுடன் உரைக்கும் சீலர்!
புலர்ந்திடும் விடியல் போலே
புதுமைகள் படைப்பில் தந்து
துலங்கிடும் தமிழின் நெஞ்சம்
துடிப்புடன் புகழில் விஞ்சும்!

அயலகம் சென்ற போதும்
அருந்தமிழ்ப் பணியே வேதம்!
இயன்றிடும் உதவி செய்வார்!
இனிமையைப் பேச்சில் கொள்வார்!
முயற்சியை இலக்காய்க் கொண்டு
முடித்திடும் திறனில் வல்லார்!
அயர்ச்சியே இல்லா தீரர்!
அமினெனும் நல்லார் வாழ்க!



பாவலர் ஓசூர் மணிமேகலை

## வாழ்த்துகள் அண்ணா

கடல்கடந்து வாழ்ந்தாலும் கன்னித் தமிழின்
மடலுக்குள் பூத்த மகனே - திடமான
நெஞ்சுரம் கொண்டநல் நெஞ்சன் பிறந்தநாளில்
கொஞ்சுதமிழ் பாவடித்து வாழ்த்து...

நெஞ்சமென்னும் மின்னிதழை நேயர்கள் கொண்டாட
தஞ்மாக்கித் தொண்டாற்றும் தோழரே - விஞ்சும்
புகழுடைய தீரா புதுமை படைக்க
அகமகிழ்ந்து வாழ்த்துகிறே னே.

சேந்தன்குடிச் செந்தமிழாழன்
புதுக்கோட்டை.

# தமிழ்நெஞ்சம் வாழ்க!வாழ்க!!



பொன்மணிதாசன்

வற்றாத சிரிப்போடை வாயில் கண்டேன்
வறுமையிலா பணிசெய்யும் வலிமைக் கண்டேன்
உற்றாராய் உறவாராய் உரிமை கண்டேன்
உள்ளத்தில் அன்புஒளி ஒளிரக் கண்டேன்
நற்றமிழின் நலம்நாடி எழுதக் கண்டேன்
நலிந்தோர்க்கு நடந்தோடி உதவக் கண்டேன்
சற்றேனும் தளராத சகிப்புக் கண்டேன்
சந்தித்த பலபேரில் முதன்மை கண்டேன்!

தமிழ்நெஞ்சம் இவருக்குள் இருக்கக் கண்டேன்
தன்னலமே இல்லாதத் தன்மை கண்டேன்
அமிழ்தொக்க படைப்பாற்றல் அனைத்தும் கண்டேன்
அறிந்தார்ந்த அன்னாளில் மலைத்து நின்றேன்
அறிந்து வந்தேன் அமினின் பெருமையாவும்
அவருக்கு அகவைநாள் அதனைப் போற்ற
சிறிதெந்தென் செந்தமிழில் கவிதை நெய்தேன்
சீதனத்தைப் பெற்றவரும் சிறந்து வாழ்க!

## தமிழை வளர்க்கின்ற அமினார் வாழ்க!

நெஞ்சத்தைத் தமிழில் வைத்தார்
நினைவெல்லாம் தமிழுக் கிட்டார்
கொஞ்சுந்தேன் கவிதை செய்வார்
குளிர்நட்பை மழையாய்ப் பெய்வார்
பஞ்சத்தில் எழுத்தில் லாமல்
படைக்கின்ற படைப்பை எல்லாம்
வஞ்சிக்கா தச்சி லேற்றி
வளர்க்கின்ற அமினார் வாழ்க!



- பொற்கைப் பாண்டியன்

# தமிழ்நெஞ்சம் அமினே வாழ்க வாழ்க

பாவலர் கருமலைத்தமிழாழன்



புரையோடிப் போகாமல் வாழ்க்கை தன்னைப்
புதுபித்து நல்வழியில் நடத்திச் செல்ல
வரையின்றிக் குவிந்திருக்கும் இலக்கி யங்கள்
வரையறுத்துக் கூறுகின்ற இலக்க ணங்கள்
தரையினிலே கொண்டிருக்கும் மூத்த தான
தமிழ்மொழியைத் தன்னுயிராய்க் கொண்டி ருக்கும்
நிறைகுடத்துத் தமிழ்நெஞ்சன் அமினே என்றும்
நிற்கின்ற இமயமென வாழ்க வாழ்க !

காலைமாலை எப்பொழுதும் ஓய்வே யின்றிக்
கடல்கடந்து தமிழ்வளர்க்கும் தூய தொண்டா
சோலையிலே பூத்திருக்கும் வாசப் பூக்கள்
சொக்கவைத்து மனம்மகிழச் செய்தல் போல
சேலையிலே வரும்பெண்ணின் அழகைப் போல
செப்புகின்ற தமிழ்நெஞ்சம் இதழைத் தந்து
நாளைக்கு வரலாறாய் நிற்கும் செம்மை
நல்அமினே திருக்குறளின் புகழாய் வாழ்க !

மின்னிதழில் உலகத்துத் தமிழர் தம்மை
மிளிரவைக்கும் கணியன்தன் நெஞ்சம் கொண்டோய்
பன்னூறு கவிஞர்தம் பாக்கள் தம்மைப்
படிப்பதற்கு நூல்வடிவில் தொகுத்த ளித்தோய் !
முன்னூறு நாள்சுமந்த தாயின் மேலாய்
முத்தமிழை நாள்முழுதும் சுமக்கும் தோழா
மன்னுபுகழ் பொலிந்திடவே வாழ்க வென்று
மணித்தமிழன் அமினுன்னை வாழ்த்து கின்றேன் !

# தமிழ் போல் வாழ்க

தாய் மனப்பந்தலோ தமிழ்
நெஞ்சத் தோரணமோ,
வாய் மணக்கும் தமிழுக்குள்
வந்துதித்த நற்பூவோ,

அகவை நாள் இதுவென்று
அன்னைத் தமிழ் மகிழ்விங்கோ,
அகம் நிறை வடிவாக
ஆனந்த சுகத் தாலாட்டோ..

முத்தான தமிழுக்கு முன்னெடுப்பு
நீர் தானோ,
வித்தொன்று விளைந்திங்கு
விருட்சமாய் நிற்கிறதோ?

எல்லையிலா ஆனந்த
எழில்மகவாய் தமிழிங்கோ..
எல்லை கடந்து நிற்கிறதோ..
ஏறி நிற்கும் நல் முகமோ.

இல்லையொரு குறையென்று
இனிதாய் மனம் மகிழ,
திங்கள் தோறும் தமிழ் விருந்தோ..
தெவிட்டா இன்பப் பலாச் சுளையோ..

பொங்கு தமிழ் பூத்து நிற்க
பூமிப்பந்தின் வரவேற்பாய்
மங்கல வேந்தன் அமின் இங்கு
மாவேள்வி நாயகரோ.

அழகானப் பார்வையிங்கோ...
அதற்குள்ளே அன்பு மலரோ
அடுக்கடுக்காய் அகம் நிறைக்கும்
அரியதோர் நேர் முகமோ.

வெல்லும் வழி கண்டவராய்
வீரத்தமிழர் நிற்கின்றார்
அல்லும் தமிழ்நெஞ்சத் தடாகத்தை
தரமுயர்த்தி சிறக்கின்றார்.

ஆழ்கடல் உள் நுழைந்து
அரும் பொருள் எடுப்பது போல்
தமிழமுதம் தேடி நீரும்
தரணியெங்கும் சுற்றுவீரோ..

தேடியருளும் தேவனாகி
தேவைகளைத் தருபவரே
நீர் வாழ தமிழ் வாழும்
நிறைவான மனம் வாழ்த்தும்.

அமின் என்ற உச்சரிப்பில்
அன்னைத் தமிழ் புன்னகைக்க,
அமுதமொழி  தமிழ் வாழ்த்து
அகம் நிறைந்து வருகிறதே.

எமதான என்னுயிரே
என்னுள்ளே நிலைத்தவரே
உம்மை நான் வாழ்த்துகின்றேன்.
தமிழ் போல் நீர் வாழ்க.



- பரணி சுப சேகர்




முனைவர் ப. கற்பகராமன்
M.A.,M.A.,M.A.,M.Phil.,Ph.D.,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம் - 636 003


# ஏழாம் அறிவை எட்டிப் பிடிப்போம்

பல்வேறு பிறவிகளிலிருந்தும் வளர்ச்சி யடைந்து ஆறறிவு கொண்ட மானுடப் பிறவியாகப் பிறந்துள்ள நாம், நமக்குக்கிடைத்துள்ள இந்த ஆறறிவினைக் கொண்டு, ஏழாவது அறிவினை எட்டிப் பிடிக்க வேண்டும்.

வளர்ச்சியை நோக்கி நகர்வதில் தான் வெற்றி அமைந்திருக்கின்றது. ஏழாம் அறிவை எட்டிப் பிடிப்பது என்பது பெரிய செயல் அல்ல. நம்மிடமுள்ள ஆறு அறிவுகளையும் ஆழமாக, முறையாகப் பயன்படுத்தினாலே ஏழாவது அறிவினை எட்டிவிடலாம்.

மனம் என்பது ஆசைகளைத் தூண்டி, அறிவின் ஆழத்தை ஆராய விடாமல் அடக்கும். அறிவோ, மனதை அலைபாய விடாமல் அடக்கி, நம்மை அமைதியாக்கும். எனவே மனம் சொல்லும் வழியைத் தேர்ந்தெடுக்காமல், அறிவு அமைத்துத் தரும் வழியில் பயணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு மனதை அறிவின் மூலம் அடக்கிவிட்டாலே ஆறறிவுடன் ஏழாவது அறிவு எளிதாக சேர்ந்துவிடும்.

நம்முடைய கண்கள்தான் உலகத்தை நமக்கு அடையாளம் காட்டி நம்மை வழிநடத்தும். இக்கண்கள் சாதாரணமானவை அல்ல. எது ஒன்றுமே தனக்கான பணியைச் சிறப்பாக செய்யும்போதுதான் வெற்றியடையும் என்ற சான்றோரின் கூற்றினைக்கொண்டு ஆராயந்தோமானால்... கற்றவர் முகத்தில் இருப்பவை மட்டுமே கண்கள் என்றும் கல்லாதவர் முகத்தில் கண்கள் இருப்பினும் அவை புண்கள்தான் என்பதையும் நம்மால் உணர முடியும். இதைத்தான் திருவள்ளுவரும்...

“கண்ணுடையார் என்பவர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்”

(திருக்குறள் - 393)

என்ற குறளைக் கொண்டு குறிப்பிடுகின்றார்.

இந்தக் குறள் இரண்டு செய்திகளை நமக்குத் தருகின்றது. ஒன்று, கல்லாதவர் முகத்தில் இருப்பவை புண்கள் என்பது. புண்ணின் குணம் என்னவென்றால்...

ஆறும்வரை துன்பம் தந்துகொண்டே இருப்பது. அதைப் போலவே... கல்லாதவர் கண்களும் இறுதிவரை அவருக்குத் துன்பத்தைத் தந்துகொண்டே இருக்கும்.

இரண்டாவது கல்லாதவர் என்று வள்ளுவர் குறிப்பிடுவது, வெறும் ஏட்டுக் கல்வியைக் கல்லாதவர்களைக் குறிக்காது. எந்தச் சூழலை எவ்வாறு கையாள வேண்டும் என்ற அனுபவக் கல்வியைக் கல்லாதவர்கயையே ஆசிரியர் கல்லாதவர் என்று குறிப்பிடுகின்றார்.

முகத்தில் இருக்கக்கூடிய இத்தகைய கண்கள், நாம் பார்க்கக் கூடிய காட்சிகளின் மூலம், ஏழாம் அறிவை நோக்கி, நம்மை முண்னேறவும் வைக்கும். ஐந்தறிவுகளை உள்ள விலங்குகளைப்போல் கீழ்நோக்கி பயணிக்கவும் வைக்கும். எனவே முதலாவது அறிவான இந்த உற்று அறியும் அறிவினால் நமக்கான காட்சிகளைச் செம்மையாக்கிக்கொண்டோமானால் ஏழாம் அறிவினை எளிதில் எட்டிப் பிடிக்கலாம்.

கண்களால் படிக்க இயலாதவர்களும் தங்களுடைய வாழ்வைச் செம்மை படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக நமக்குக்கிடைத்துள்ளஇரண்டாம்அறிவுதான் செவியுணர்வு. இதனை நன்கு அறிந்ததன் காரணத்தால்தான் திருவள்ளுவரும்...

“கற்றிலன் ஆயினும் கேட்க”

(திருக்குறள் - 414)

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

“செவிக்குணவு இல்லாத
போழ்து சிறிது
வயிற்றிற்கும் ஈயப் படும்”

(திருக்குறள் - 412)

என்றும் குறிப்பிடுகின்றார். வயிற்றிக்கு ஈயப்படும் உணவு தீயதாக இருந்தால் உடனே உடம்பு கெட்டுவிடுவது போல், செவிக்கு இடப்படும் உணவும் தீயதாக அமைந்துவிட்டால் ஆன்மா கெட்டுவிடும் என்பதை இக்குறள் மூலம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே இரண்டாம் அறிவான செவியறிவினைச் செம்மையாக்குவதன் மூலமும் நாம் ஏழாம் அறிவை எட்டிப் பிடிக்கலாம்.

மூக்கின் மூலம் நுகர்ந்துகொள்ளும் அறிவே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்றாவது அறிவு. மூக்கின் வழியே நாம் நுகரும் இந்த நுகர்ச்சி மிகவும் சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்த திருவள்ளுவரும்...

“மோப்பக் குழையும்
அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து”

(திருக்குறள் - 90)

என்று குறிப்பிடுகின்றார்.

மூக்கிலிருந்து வெளிவருகின்ற வெப்பமான மூச்சுக்காற்று பட்டவுடனே அணிச்சமலர் எரிந்து சாம்பலாகிவிடும். மலரையே எரிக்கும் அளவிலான வெப்பம், அறிவுக்கு மாறாக நாம் சிந்திக்கும்போது மட்டுமே மூக்கிலிருந்து வெளிப்படும். எனவே நம்முடைய சிந்தையில் தெளிவு நிச்சயம் தேவை. இத்தகைய தெளிவு சிந்தையில் இருந்தால் மூச்சுக் காற்றாகிய மூன்றாம் அறிவின் மூலமாகவும் ஏழாம் அறிவை எட்டிப் பிடிக்கலாம்.

நாக்கினைக் கொண்டு உணர்ந்து கொள்ளும் சுவையே நான்காவது அறிவு. சுவை என்பது நாம் உண்ணும் உணவில் மட்டும் இருக்கக்கூடியது என்று எண்ணுவது தவறு. நம்முடைய நாவினைக் கொண்டு பேசுகின்ற சொற்களுக்கும் சுவை உண்டு. நாவிலிருந்து வரக்கூடிய பேச்சாகிய இந்தச் சுவை மற்றவர்களைச் சுட்டுவிட்டால் அது என்றுமே ஆறாத வடுவாகி இறுதிவரை அழியாது என்பதை

உணர்ந்த வள்ளுவர்...

"தீயினாற் சுட்டபுண்
உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

(திருக்குறள் - 121)

என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு நாக்கினைக் கொண்டு நாம் பேசுகின்ற சொற்களின் மூலமும் ஏழாவது அறிவை எட்டிப்பிடிக்கலாம்.

பல்வேறு எலும்புகளைக் கொண்டு, நரம்புகளால் கட்டப்பட்டு, ரத்தத்தால் கலந்த தோலினால் பூசப்பட்ட இந்த உடம்பினைத் தொடுவதால் ஏற்படும் ஸ்பரிச உணர்வே ஐந்தாவது அறிவு. இந்த உடலுக்கான ஸ்பரிசத்துக்கு முழுமையான உரிமை வாழ்க்கைத் துணைக்கு மட்டுமே உண்டு. இதே கருத்தைத்தான்; திருவள்ளுவரும்...

"உடம்பொடு உயிரிடை
என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு"

(திருக்குறள் - 1122)

என்ற குறளைக் கொண்டு குறிப்பிடுகின்றார்.

உடலுக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பைப் போன்றதுதான் வாழ்க்கைத் துணை இருவருக்கும் உள்ள தொடர்பு என்று இக்குறளில் குறிப்பிடுகின்றார். வாழ்க்கைத் துணைக்கான இந்த ஸ்பரிசத்தினைப் பரிசுத்தமானதாக அமைத்துக் கொண்டால், இல்வாழ்க்கையும் ஓர் வழிபாடாக மாறும். அந்த வழிபாட்டில் நிச்சயம் இறைமையை உணர முடியும்.

கண்கள் மூலம் உணரக்கூடிய முதலாவது அறிவு, காதுகள் கொண்டு அறியக்கூடிய இரண்டாவது அறிவு, மூக்கின் மூலம் நுகரக்கூடிய மூன்றாவது அறிவு, நாக்கின் மூலம் வெளிப்படும் நான்காம் அறிவு, ஸ்பரிசத்தில் மகிழும் ஐந்தாமறிவு என்ற இந்த ஐந்து அறிவுகளையும் ஆராய்ந்து, அதில் தீயதை நீக்கி, நல்லதை மட்டுமே எடுத்துக்கொண்டு அதையே அனைத்திலும் வெளிப்படுத்தும் சிந்தனை என்ற அறிவே நம்முடைய ஆறாவது அறிவு. இந்த சிந்தையின் மூலம் நம்முடைய ஐம்புலன்களிலிருந்து வெளிவருபவையே நாம் மறைந்த பின்னும் நம்மை இனம் காட்டும் எச்சங்கள். இந்த எச்சங்களைத் திருவள்ளுவர்...

"தக்கார் தகவிலார்
என்பது அவரவர்
எச்சத் தாற் காணப்படும்"

(திருக்குறள் - 114)

என்று குறிப்பிடுகின்றார்.

தீயதிலிருந்து தூயதைத் தேர்ந் தெடுக்கும் ஆறாவது அறிவின் மூலம் மனிதர்களாக வாழும் நாம், நம்முடைய இந்த ஆறாவது அறிவைக் கொண்டு இறைநிலையை இனம் காண்பதே ஏழாம் அறிவு.

இந்த ஏழாம் அறிவை நாம் நம்முடைய அகத்தை நோக்கி ஆழமாகப் பயன்படுத்த வேண்டும். அகத்தை ஆராய ஆராய உடம்பே கோயிலாகும். உள்ளமே கருவறையாகும். இவ்வாறு உள்ளத்தைக் கருவறையாகப் பரிசுத்தமாக்கிவிட்டால், அக்கருவறைக்குள் குடிகொண்டிருக்கும் கற்ப கிரகம் நம்முடைய கண்களுக்குத் தெரியும்.

இவ்வாறு நமக்குள் இருக்கும் இறைமையை உணர்ந்துகொள்ளக் கூடிய அகம் நோக்கி ஆராயும் ஏழாம் அறிவை எட்டிப் பிடித்தோமானால், இறைமையோடு இன்புற்றிருக்கலாம்.

# முற்றுப் புள்ளி...

முற்றுப் புள்ளியென்பது
முடிவல்ல
மற்றொன்றின் தொடக்கம் ...

காலம்
ஒவ்வொரு நாளும்
தன்னைப்
புதுப்பித்துக் கொண்டே
இருக்கிறது ...

ஆதிக்காலந் தொட்டு
அத்தனையும் மாறிய போதும்
அன்னை வழிப் பிறப்பு
மட்டும்
அப்படியே தொடர்கிறது ...

நானும் அப்படித்தான்
ஒவ்வொரு முற்றுப் புள்ளியிலும்
மறுபடி மறுபடி பிறக்கிறேன் ...

மரமாய் வளர்கிறேன்
மண்ணில் வீழ்கிறேன்
உரமாய் கிடக்கிறேன்
மீண்டும் துளிர்க்கிறேன் ...

காலச் சக்கரத்தின்
சுழற்சியில்
கீழிருப்பது மேலும்
மேலிருப்பது கீழும்
மாறிக் கொண்டே இருக்கிறது ...

இடறி விழுந்தவன்
எழ மறுத்திடில்
நீர்த்துப் போகிறான் ,
தடைகளைத் தாண்டி
தாவி எழுந்தவன்
சரித்திரம் படைக்கிறான் ...

நம்
சரித்திரம் படிப்போம்
புதுச்
சரித்திரம் படைப்போம் ...

காலச் சுழற்சி யதனில்
கட்டைகளாயல்ல
அச்சுக் கோலாய்
ஆட்டுவிப்போம் ...

எழுகிற உதயம்
விழுவது மீண்டும்
எழுவதற்காகவே ...

எழுவோம்
எதிர் வரும் இன்னல்
களைவோம்
எழுஞாயிறு
நம் கண்களில் ...

**கி. தாமரைச்செல்வன்**

## நானே என்னை வெறுத்தேன் என் அன்பே!

நாளும் என்னைத் தேடினேன் ஏன்?
அன்பே!
உன் ஒற்றைச் சொல்லில் நான்
வாழ்ந்தேன்
உனக்காய் நாளும் உயிர் சுமந்தேன்
பிரியம் பிரிந்து சென்றாலும்
நேசம்  குறைந்து வந்தாலும்
அனுதினம் யுத்தம் செய்தாலும்
அமிலத்தில் சித்தம் வெந்தாலும்
நெருடும் நினைவுச் சொல்லுமே
நெஞ்சம் முழுதும் உன்னுள்ளமே
நீயின்றி நடைப்பிணமானேன்
நீ வருவாயா ?
எனக்கு வாழ்வளித்து
மறுஉயிர் தருவாயா?

**- சரவிபி ரோசிசந்திரா**

நேரிசை வெண்பா

**நாடி யளிப்பாள் நலம்!**

ஆடி அழைத்த அணங்கிவள்! என்னையும்
தேடி யுதவிய தென்றலிவள்! - கூடியே
பாடிப் பணியப் பயனுள்ள பாக்களினால்
நாடி யளிப்பாள் நலம்.

**முனைவர் ம.தமிழ்ச்செல்வி**




**இச்சிறுகதைகள் தொகுப்பு நூல் தேவைக்குத் தொடர்பு கொள்க...**

அலைபேசி தொடர்பு எண்கள்

**+ 91 9841978029**

நூலின் விலை 160 இந்திய ரூபாய்

# நறுமுகை யாளிகள்

## பறவைக் கண்ணோட்டம்

திருமதி அன்புச்செல்வி சுப்புராஜு அவர்கள் தொகுத்து வழங்கியுள்ள அருமையான 'நறுமுகை யாளிகள்' என்ற சிறுகதைகளின் அணிவகுப்பு பெண்களால் நடத்தப்பட்டுள்ளது. பாவையர் மலர் ஆசிரியர் திருமதி . வான்மதி 'எழுத்து என்றால் எழுத்துதான்' என்று அணிந்துரையில் சொல்கிறார். பெண் எழுத்து, ஆண் எழுத்து என பாகுபாடு வேண்டாம் என்றும் சொல்லியுள்ளார்.

திருமதி ராஜி வாஞ்சி தன்னுடைய வாழ்த்துரைகள் 'நறுமணம் பரப்பும் மலர்களாக' இக்கதைகளைப் பாராட்டியுள்ளார்.

நேச உரையில் அன்புச்செல்வி சுப்புராஜு 'அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்' என்ற சிறார் அமைப்பில் இருக்கும் 18 பெற்றோர்கள் எழுதிய கதைகளையும், ஆறு நண்பர்கள் கதைகளையும் இணைத்து நறுமுகை யாளிகளாக வழங்கியிருக்கிறார். பெரும் பாராட்டிற்குத் தகுதியான இச்செயல் ஒரு சிறந்த முன்னோடி. முதல்முறையாக சிறுகதை எழுதும் பல பெண்கள் இதில் தன்னம்பிக்கையுடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

தமிழுக்கு அமுதென்று பெயர் அல்லவா?

அந்தத் தமிழில், சொந்தக் கருத்தை, இயற்கை வர்ணனைகள், மனித நடவடிக்கைகள், உறவுகள், பிரிவுகள் ஆனந்தம், சோகம் என்ற வாசப் பொருட்களைத் தூவி அழகுபடத் தந்திருக்கிறார்கள் எழுத்தாளர்கள்.

திருமதி **சாம்பவி சங்கர்** 'நாகநந்தினி' என்ற கதையில் மலைவாழ் பழங்குடி இனத்திலிருந்து ஒரு பெண் மருத்துவக்கல்லூரியில் சிறப்பாகப் படித்து முன்னேறியதைச் சொல்கிறார். தன் இனத்திற்காக உழைக்க விரும்பும் அப்பெண்ணின் மனப்போக்கை அவள் காதலன் புரிந்துகொள்ளும் இடத்தில் ஒரு சிறிய எதிர்பார்ப்பை வைத்து திறமையாக முடித்திருக்கிறார்.

திருமதி **கனகா பாலன்** 'யாழன்' என்ற சிறுகதையை எழுதியுள்ளார். பழுத்து உதிர்ந்த வேப்பம் பழங்களை நகராத மஞ்சள் வண்டுகள் என்று சொல்லியிருப்பது அழகு. தன் பெண்மைக்காக, களங்கமில்லாத

தன்னுடைய வாழ்வுக்காக அவள் கேட்கும் ஒரே உரிமை அவள் கணவனுக்கு அவர்களின் மகன் செய்யவேண்டிய கடமையைத்தான்.

**புவனா பாபு** ‘பச்சோந்தி மனிதர்களைப்’ பற்றி சொல்கிறார். வாழ்வு என்பது பாற்கடலைப் போல என்று சொன்ன லா சாரா நினைவிற்கு வருகிறார். ஆம் அமுதும் நஞ்சும் அங்கிருந்துதான்.

திருமதி **ஸ்ரீதேவி** ‘வாழ்க்கை எனும் ஓடத்தை’ அனிச்சையாகக் கேட்கும் சினிமா பாடல்களின் வழியாக, ஒரு முதியவரின் வாழ்வாகக் காட்டிச் செல்கிறார்.

திருமதி **சிந்து** பறவையிடம் பாடம் கற்றுக் கொண்டாராம். என்ன பாடம்? செங்குந்தச் சின்னான் என்ற தாய்ப்பறவை தன் குஞ்சுகளைக் காக்க காக்கையுடன் போராடி வென்றதைப் பார்க்கையில் சவால் நிறைந்த வாழ்க்கையை எதிர்கொள்ளும் பாடத்தைப் படிக்கிறார்.

திருமதி **உமா** ஒரு கேள்வி கேட்கிறார் தன்னுடைய ‘மனமே மருந்தாய்’ என்ற கதையில். நம்மைவிட நம் மனதிற்கு வேறு யாரால் நிம்மதி தர முடியும்? மனம் இருந்தால் மார்க்கமுண்டு இல்லையா?.

திருமதி **ராகினி சிவகுமார்** ‘ஆதிரை’ என்ற கதையின் வாயிலாக வாழ்க்கையின் தொடர் சங்கிலிகளைக் காட்டுகிறார் .அம்மா , மகள், அம்மா எனத் தொடரும் வாழ்க்கை வளையங்கள்.

திருமதி **ஜனனி குமார்** சமுதாயத்தை நோக்கிப் ‘பொருத்தம்’ என்பதன் அர்த்தம் என்ன என்று கேட்கிறார். நம்முடைய துயரங்களில் நம்மோடு இல்லாத இனம் அல்லது ஜாதி நாம் நம் வாழ்வை தீர்மானிப்பதில் ஏன் பங்கு வகிக்க வேண்டும் என்ற கேள்வி நியாயமானது.

திருமதி **இலட்சுமி கார்த்திகேயன்** ‘அம்மா’ என்ற கதையில் குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை என்று நிரூபிக்கிறார்.

திருமதி **சித்ரா பாலன்** ‘சுடரி’ என்ற கதையில் பொருளாதாரச் சிக்கல்களை எதிர் கொள்ளும் வழியை தெளிவாகக் காட்டியிருக்கிறார். சொந்தக் கால்களில் நின்று முதலாளியாக உயர முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார்.

திருமதி **இந்துமதி** ‘தேனீர் விருந்து ‘கதையில் சங்கட சவால்கள் அடுத்தடுத்து வருவதையும் அதைக் கதாநாயகி திறமையாகக் கையாள்வதையும் சொல்கிறார்.

திருமதி **கலைவாணி** மேலேறி கீழிறங்கி சுற்றிச்சூழலும் வாழ்க்கை எனும் அந்தச் சக்கரத்தை :சுந்தரி: என்ற கதையில் சொல்கிறார். மனவளர்ச்சி குன்றிய குழந்தை எனும்போது மனமும் கலங்குகிறது.

அருள் சகோதரி **அமல ஜெயந்தி** ‘பலகாரம்’ என்ற கதையில் ஒரு சிறுவனின் ஏக்கத்தைப் பதிவு செய்திருக்கிறார். அவன் வேறு ஒன்றும் கேட்கவில்லை இட்லி தான் கேட்கிறான்; அதுவும் அவனுக்குக் கிட்டாமல் அவன் உயிர் போய்விடுகிறது. சமுதாயம், வறுமையைப்பார்த்துக் கொண்டே இருந்தாலும் இரக்கம் என்பது குறைந்து கொண்டே வருகிறது.

திருமதி **அங்கு லட்சுமி** மனதிற்குள் பயணிக்கிறார். திருமணமாகி கணவன், குழந்தை, குடும்பம் என்றான பிறகும் தாய் வீட்டிற்குச் செல்லும் ஏக்கம் பெண்களுக்கு இருக்கிறது. வால்பாறை போகும் வழியை வர்ணித்து தனது இரசனையைக் கதையில் காட்டுகிறார். வாழ்க்கையின் நிதர்சனம் புரிகிறது.

திருமதி **மனோ வெங்கடேசன்** மென்மையாகப் புன்னகைக்கிறார். நான் அனுமதித்தால் மட்டுமே என் இதயத்தைக் காயப்படுத்த முடியும் என்று ‘மெல்லிய

புன்னகை' சொல்கிறது.

திருமதி மகேஸ்வரி கிருஷ்ணசுவாமி 'கொல்லத் துடிக்கும் ஒரு மனதை' காட்சிப்படுத்துகிறார். அந்த வெள்ளை உருவம் சுவாரஸ்யம்.

திருமதி **பவ்யா எல்டன்** மீனவரின் வாழ்க்கையை, அவர்கள் எதிர்கொள்ளும் பணச் சிக்கல்களால் சிதறிப் போகும் வாழ்வின் ஆதாரங்களை உருக்கமாக எழுதியிருக்கிறார். நிலமோ நீரோ விவசாயியோ, மீனவரோ, தங்கள் தொழிற் கருவியை இழந்து விட்டால் என்ன இருக்கிறது வாழ்க்கையில்?

திருமதி **அய்யம்மாள்** பெண் ஒரு போகப்பொருளாகப் பார்க்கப்படுவதைக் கேள்விக்கு உள்ளாக்குகிறார். அவளுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகள், குறிப்பாக உறவுக்காரர்களின் தொடங்கி வெளியார் வரை காதலன் உட்பட அனைவரும் பெண் உடலை அனுபவிக்க நினைக்கிறார்கள் .ஆனால் அவள் உள்ளத்தைப் புரிந்து கொள்வதில்லை.

திருமதி **திலகவதி** 'இரட்டை மாட்டு வண்டியில்' உண்மையைச் சொன்ன சிறுவனையும், அதைப் புரிந்து கொண்ட முதலாளியையும் நேர்மறை சிந்தனை தாக்கத்துடன் வெளிப்படுத்துகிறார்.

திருமதி **அகிலாண்டேஸ்வரி** மனதில் நின்ற தயக்கத்தைப் பற்றி பேசுகிறார். கவிமலர் என்று நல்ல தமிழில் பெயர் சூட்டியுள்ளார். திறமை இருந்தும் நம்பிக்கைக் குறைவாகச் செயல்படும் ஒரு பெண், அதை அறிந்துகொண்டு முன்னேறும் நேர்மறை தாக்கம் கொடுக்கும் மற்றும் ஒரு கதை.

திருமதி **பர்வத லட்சுமி** 'காயத்ரியை' முன்னுதாரணமான நாயகியாகப் படைத்திருக்கிறார்.

திருமதி **மாரியம்மாள்** - அழகான குடும்பம் அதில் செல்போன் , ஒரு சிறுவனின் மூளை நரம்புகளை பாதிப்பதையும், அம்மா அவனுடன் இருந்து அவனை நிலைக்கு வர வைப்பதையும் சொல்கிறார்.

திருமதி **சக்தி**, மகள் வாசத்தில், மயங்காத அம்மையை பெரிய அம்மாவாகக் காட்டி, பின்னர் அவர் நோயுற்ற போது பெண் பேணி காக்கிறாள் என்பதை உணர்ந்து கொள்வதாக எழுதியுள்ளார்.

திருமதி **அன்புச்செல்வி சுப்பராஜூ** 'பாப்பாவை காணோம்' என்ற சிறுகதை எழுதியுள்ளார். சூழலில் நிலவும் பதட்டத்தை, மன ஓட்டத்தை , தெருவாசிகள் அனைவருமே இந்தச் சிக்கலைத் தீர்ப்பதில் ஈடுபடுவதை பற்றி சிறப்பாகச் சொல்லியுள்ளார். அன்னை... பேத்திக் காகவும், அவரது மகன் தனது தந்தைக்காகவும் பேசும் உரையாடல்கள் நன்றாக உள்ளன.

கதைகளைப் பொதுவாகப் பார்க்கையில் பலருக்கு எழுதும் ஆர்வம் இருப்பது தெரிகிறது. எழுத வேண்டும் என நினைப்பவர்கள் பல சிறுகதைகளை, நாவல்களை, கட்டுரைகளை, கவிதைகளை படித்துக் கருவாக எது உள்ளது அதை எப்படி கதையாக நிலை கொள்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். மைய ஓட்டத்திற்குப் பொருந்தாத விவரணைகள் வர்ணனைகள் கதையை நீர்த்துப் போகச் செய்து விடும்.

சிறந்த சிறுகதைகளை வரவேற்போம்.

எழுத்துகளைப் புரட்டிப் படிக்கும் ஆர்வத்தைத் தரும் வகையில் நூல் அழகிய அட்டைப்படத்துடன் வடிவமைப்புச் செய்யப் பட்டிருப்பது சிறப்பு.



**- பானுமதி**

## நீர் காணாமல் போனால் என்ன ஆகும்.



ஒரு நல்ல இரவு. பூமியே தூங்கியது போல இருந்தது. ஆனா, அடுத்த நாள் பூமியில் இருந்த நீரை காணோம். வானத்தோட அழகான மேகத்த காணோம். வானத்தோட நிறமே மாறி இருந்தது. நீர்வாழ் உயிரினங்கள் இறக்க ஆரம்பித்துவிட்டது. உலகம் முழுவதும் பயத்த உண்டாகிடுச்சு.

கோவிட் 19 போல கொடிய நோய் அடுத்த 8 மணி நேரத்தில பரவுச்சு. மனிதர்களில் சிலர் அடுத்த 18 மணி நேரத்தில நோய்வாய் பட்டனர். மனிதர்கள் 2 நாள் கழித்து உயிரிழக்க ஆரம்பித்தனர். நூறுகோடி மக்களும் விலங்குகளும் 3 நாள்ல இறந்தனர்.

99% மக்கள் ஒரு வாரத்தில் இறந்தனர். மண்ணின் நிறம் மாறியது. வனங்கள் அழிந்தன. வெப்பநிலை 150 ஃபாரண்ஹீட்டை நெருங்குச்சு. மனிதன் அழிந்தா. தடுக்க முடியாத தீ உண்டாச்சு. ஒட்டகம் அழிந்தது. உலகம் எரிந்தது. பூமி 2வது வெள்ளி கிரகம் ஆக மாறுச்சு. அடுத்த எழுநூறு வருடத்தில் பிறழ்ந்த வாழ்க்கை உருவாச்சு.

நமக்கு இது தேவையா? இது வெறும் கற்பனை கதை . இதுவும் நடக்கலாம் .

ஆகவே ,
“நீரை  சேகரிப்போம் !
மரம் வளர்ப்போம். !
மண்ணை காப்போம் !
உலக அழிவை தடுப்போம்!”

**பி. பர்வதவர்மன்**
ஓசூர்

## முயற்சி திருவினையாக்கும்

என் விடுமுறை நாட்களில் ஒரு நாள் கடற்கரைக்கு சென்றேன்...
அப்போது  ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்  நண்டு ஒன்றை விரட்டி விரட்டி விளையாடிக் கொண்டிருந்தனர் ...

முதலில் பெரியவர்கள் இருவர் களைப்போடு என் அருகில் வந்து அமர்ந்தனர்...

அவர்கள் அந்த நண்டு என்னா ஓட்டம் ஓடுதுங்க  அவங்களும் கொஞ்ச நேரத்தில  சோர்ந்து வந்துடுவாங்க... அப்படின்னு பேசிகிட்டாங்க...

பிறகு அக்காவும் வந்தார் அண்ணனும் வந்தார் ஒரு சிறுவன் மட்டும்  விடாமல் துரத்திய படியே இருந்தான்... துரத்தி நண்டை ஒரு வழியாக பிடித்து காட்டினான்.

உடனே அவன் குடும்பத்தார் ஏய்  கெட்டிக்காரன் டா நீ விடாம நண்ட பிடிச்சிட்டியே  அப்படின்னு பாராட்டினாங்க...

நானும் நடந்ததை கவனித்து கொண்டே விளையாடினேன்.

இனி எந்த ஒரு செயலையும் விடாமல் முயற்சித்து கொண்டேயிருந்தால் வெற்றி நமதே என்பதையும் கற்றுக் கொண்டேன்...

**வி.ஹரீஷ் ஆனந்த்**
8 ஆம் வகுப்பு
லா. எண்டத்தூர்



# அன்பு வளர்த்தச் செடிகள்

ஆலமரத்து ஊஞ்சலில் தோழிக ளோட விளையாடிக்கிட்டு இருந்த அன்பு அவங்க அம்மா கூப்பிடுற சத்தம் கேட்டதும் "வந்துட்டேம்மா"னு சொல்லிக்கிட்டே குடுகுடுனு ஓடினாள்.

''அப்பாக்கு வேலை மாற்றல் ஆகிடுச்சு. நாம இன்னும் ஒரு வாரத்துல சென்னைக்குப் போறோம்'' அம்மா சொல்லவும் "அப்ப சென்னையில தா படிப்பேனாமா'' அன்பு கேட்டாள்.

"ஆமாம் அன்பு, உன் பொருளெல் லாம் சரியா எடுத்து வச்சிக்கோ" அம்மா சொன்னதும் "சரிம்மா" தலையாட்டியபடியே தினமும் கொஞ்சம், கொஞ்சமா அவளோட விளையாட்டு பொருட்கள், பொம்மைகள், புத்தகங்கள் எல்லாம் எடுத்து வைத்தாள். நண்பர்கள் கிட்டே எல்லாம் சென்னைக்குப் போறத சொல்லி "டாட்டா" காண்பிச்சிட்டு வந்தாள்.

சென்னையில இருக்கிற ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில அன்போட அப்பா வீடு பார்த்திருந்தாங்க. அன்புக்கு சென்னைல எல்லாமே புதுசா இருந்துச்சு. வேகவேகமா போற வண்டிகள், மனிதர்கள்... பெரிய, பெரிய கட்டிடங் கள்னு பிரமிப்பா பார்த்தாள்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில இருந்த எந்தக் குழந்தையும் அன்புகூட பேசல. இவளே போய் பேசினாலும் விலகி, விலகிப் போனாங்க. அவங்க விளையாடும் போதும் சேர்த்துக்கல. அன்புக்கு பொழுதே போகல... ஏன் அவங்க இப்படி இருக்காங்கனு யோசிச்சிக்கிட்டே இருந்தாள்.

அன்பும், அவங்க அம்மாவும் அங்க சும்மா இருந்த இடத்தில கீரை, வெண்டை, தக்காளி, கத்தரிக்காய்னு காய்கறி செடி களையும், பாதையோரத்துல நிறைய பூச்செடிகளையும் வளர்க்க ஆரம்பிச்சாங்க. கொஞ்ச நாள்ல செடிகள் வளர்ந்து காய்க்க ஆரம்பிச்சது. வண்ண,வண்ணமா பூப்பூத்து பார்க்க அழகா இருந்தது. அன்பு தினமும் செடிகளோட, பூக்களோட பேச ஆரம்பிச்சாள்.

அழகாய் பூத்திருக்கிற செடிகளைப் பார்த்த குழந்தைகளும் ஒவ்வொருத்தரா வந்து அன்பு கூட பேச ஆரம்பிச்சாங்க. கூடவே செடிகளோடயும் பேசினாங்க. சேர்த்து தண்ணீர் விட்டாங்க. செடி வளர்க்கிறது எப்படினு தெரிஞ்சிக்கிட்டாங்க. இப்ப அங்க இருக்கிற எல்லாருமே அன்போட நண்பர்கள் தான்.



சு. பிரவந்திகா
சென்னை

# பூனை குட்டி

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
எட்டிப் பார்த்தது கிச்சனுக்குள்ளே;
மோப்பம் புடிச்சது பூனை குட்டி
வாசம் வந்தது மூக்குக்குள்ளே
சத்தம் வந்தது வயிற்றுக்குள்ளே
பதுங்கி பதுங்கி பார்த்தது
அம்மா சத்தம் கேட்டதும்
ஓடி ஒளிஞ்சது பூனைக்குட்டி.

- ர. நேத்ர ஸ்ரீ

# நகரத்தில் மரணம்

குளிரூட்டப்பட்ட பெட்டியில்
படுத்துக் கிடந்தாள் அம்மா
தூங்கும் போது மரணம்
நல்ல சாவென பேசிக் கொண்டார்கள்
உயர் இரத்த அழுத்தம்
புருஷனை இழந்த துக்கம்
இரண்டாவது பையனின் உடல்நிலை
ஆகாத மருமகள்களென
காரணங்கள் பல அலசப்பட்டு
மெல்லத் தொடங்கின
வெற்றிலைவாய்கள்
எப்போ பாடிய எடுக்க போறீங்க
என்று கேட்ட பக்கத்து வீட்டுக்காரரின்
கடைவாயில் துருத்திக் கொண்டு
தெரிந்தன கோரப்பற்கள்
RIP குறுஞ்செய்திகளில்
நிரம்பியது அலைபேசி
எல்லோரும் வந்துட்டாங்களா
என்றகேள்விக்கு
மயான அமைதி நிலவியது
செலவுகளை எப்படி
பங்கிட்டுக் கொள்வது
உள்ளே விவாதம் தொடங்கிய
கொஞ்ச நேரத்தில்
வீசத் தொடங்கியது
பிணவாடை!

**- பா.சிவகுமார்**



**பொழுதென்றும் நமக்கென்றே விடிகின்றது**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

பொழுதென்றும் நமக்கென்று விடிகின்றது
மலர்கூட நமக்கென்றே மலர்கின்றது
மலை,கடல் ஆகாயம் நமக்காகவே-இந்த
மண்காணும் படைப்பெல்லாம் நமக்காகவே!

மனிதர்கள் உலகத்தில் மதிப்பானவர்
மனசாலும் அறிவாலும் சிறப்பானவர்
இறைதந்த அந்தஸ்து உயர்வானதே - இதை
உணராமல் வாழ்விங்கு வீணானதே!

அழகான மனமெங்கே..?, நிலை மாறினோம்
அறிவோடு நடக்காமல் தடு மாறினோம்
இறைவனை நெருங்காமல் நாம் ஆடினோம்
இடர்ப்பட்டுத் துயர்பட்டுத் தான் வாடினோம்

மதியோடும் மதிப்போடும் நாம் வாழணும்
மக்களை அன்பாலே அணைத் தாளணும்
மனதிலுயர் எண்ணங்கள் பூத் தாகணும்
மனிதம் மலர்ந்திங்கு செழித் தோங்கணும்






வெண்பாப் பயணம் 8

# பிறந்தநாள் வாழ்த்துப் பாடல்

மன்னும் புகழோடு மாத்தமிழின் இன்சுவைபோல்
உன்னும் நலனெல்லாம் ஓங்கிடவே - கன்னல்நேர்
கன்னிமொழிக் காதலனாய்க் காலமெலாம் பேரெடுத்தே
இன்னுமொரு நூறாண் டிரும்!

**சுந்தர ராசன்**

.

வண்ணபலூன் கட்டுங்கள் வாணவெடி பூச்சட்டி
விண்ணதிரப்போடுங்கள்மென்மலர்கள் - தண்ணென்றே
அன்புமணம் வீச அமின்பிறந்த நாள் வாழ்த்தி
இன்புறவே பாடுங்கள் இன்று.

**அன்புவல்லி தங்கவேலனார்**

.

நீண்டே வளம்பெற்று நிம்மதி வாழ்வாகி
வேண்டிடும் நல்வரங்கள் விண்போற்றக் - காண்போரால்
வாழ்த்த நலத்துடன் வாழ்க இனிதாக
தாழ்த்தியே நிற்கிறோம்நின் தாள்.

**ஸ்ரீதரன்**

.

நெஞ்சில் நிறைந்தத் தமிழே அமினே!மென்
பஞ்சில் விளைந்த மனமே!நீ - தஞ்சம்
அடைந்தோரை அன்பால் அடைகாக்கும் அண்ணல் !
எடைக்கெடை பொன்போலென் வாழ்த்து

**ஞால ரவிச்சந்திரன்**

அறிவியல் மேன்மை அகிலம் உணர
புரிதல் தனையே புகுத்தி - பெருமிதம்
கொண்டு புவியோ கொடுக்கும் புதையலைக்
கண்டே உணர்வீர் களித்து .

**கவிஞர் அ முத்துசாமி தாரமங்கலம்**

விண்ணில் உதித்த விடிவெள்ளி நீயேஇம்
மண்ணில் விதைத்திட்ட மாமலை(ழை)யே - மண்ணுலகப்
பண்பில் உயர்ந்த பசும்பொன்னும் நீயாக
எண்ணம்போல் வாழ்வாய் இனிது.

**பாண்டி செல்வி கருப்புசாமி**

கண்ணின் மணிநீ கவிதையின் கடல்நீ
மண்ணின் தமிழாளும் மாண்புநீ - அண்ணனே
வண்ணமாய் பல்லாண்டு வாழிநீ ஐயனே
எண்ணம்போல் வாழ்க்கை எழில்

**மன்னை மணிமாறன்**

அன்பு மனம்வாழ்க ஆதி மொழிவாழ்க
இன்பம் தழைக்கும் இசைவாழ்க - நன்புகழ்
அண்ணன் ‘தமிழ்நெஞ்(சு) அமின்’வாழ்க நீடூழி
மண்ணுளோர் வாழ்த்தில் மகிழ்ந்து

**க.சங்கரபாண்டியன், வடுகபட்டி**

பிறந்தநாள் தந்திடும் புத்துணர்ச்சி பெற்று
உறவுசூழ நாவுவக்க உண்டு - நிறைந்த
சிறப்புடன் வாழ்ந்துநீர் சாதித்து நிற்க
பெறுவீர்நல் வாழ்த்துடன் பாட்டு.

**சுரேஷ் சீனிவாசன்**

அன்பை வழங்கி அரவணைத்த நண்பனே
பொன்னும் பொருளும் புகழில்லை - உன்வாழ்வில்
குன்றா இளமையோடு கொற்றவனாய் நீவாழ
என்றென்றும் வாழ்த்திடுவேன் யான்

**கவிஞர் வீக பொன்னையா**

ஆலம் விழுதுகளாய் ஆயிரம் சொந்தமுடன்
சீல முடன்வாழ்ந்துச் செம்மையாய் - சூலமுடன்
வீற்றாளும் சுந்தரி வேல்விழிப் பார்வையில்
நூற்றாண்டைக் காண்பீர் நுகர்ந்து !

**பாவலர் கோவதன். பட்டர்வொர்த்**

பண்தமிழாய்ப் பால்மூன்றாய்ப் பார்போற்ற நற்புகழ்தாம்
விண்ணின் உயர்வாய் விளங்கிடவே – கண்ணாகத்
தண்தமிழைக் காக்கும் தமிழ்நெஞ்ச நல்அமினே
மண்மீது வாழ்க மணந்து !

**பாவலர் கருமலைத்தமிழாழன்.**

பண்வைக்கும் பாட்டில் பழகுதமிழ் சேர்ந்தமைந்தால்
கண்வைக்கும் ஊரேபோல் காலமெல்லாம் - மண்வைக்கும்
ஆலருகாய் வேர்பிடித்து ஆன்றோர் தினம்போற்ற
சீலரமீன் வாழ்க செழித்து..!

**வள்ளி முத்து**

நேரிசை வெண்பா

தேனமுதம் போலும் தெளிந்தநன் நீர்போலும்
வானமுதம் போலும் வழங்குதலால் - ஊனகத்தின்
வண்டமிழாய், வாழுயிராய், வையம் வளர்பயிராய்
மண்டுமும் மேன்மையிம் மண்.

**படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி**

நேரிசை வெண்பா

1
"தமிழ்நெஞ்சம்" அன்பாலே தானுயரும்; ஓயா
இமிழ்கடலாய் கூடட்டும் இன்பம்; - சிமிழ்கொண்ட
முத்தெடுத்து சீரான மாலையிட்டு வாழ்த்துவோம்;
அத்தான் "அமி"னை அணைத்து....!
2
அமிழ்த்திடும் போதிலும் ஆர்த்தெழும் பந்தாய்,
இமிழ்திரை ஆழி எழிலாய், - "அமின்"தான்
இமயமாய் வாழ்நாளில் ஏற்றங்கள் காண;
நமதிதயம் வாழ்த்திசைக்கும் நன்கு...!
3
ஏன்பிறந்தோம் நாமெனத்தான் ஏங்குவோர் ஏற்றமுற
தேன்தமிழில் வாழ்த்தொன்று தீட்டுவோம்; - தேன்பிறந்த
பூவாக, தென்றலிசைப் பாட்டாக, இன்பத்தின்
தீவாக வாழ்க திளைத்து....!

**ஜ.க.நாகப்பன்**

அமினெனும் நண்பர் அருமைக் கவிஞர்
தமிழுக்கே யீந்தவர் தன்னை - தமிழ்போல்
அகவை பலநூறு ஆற்றலொடு மண்ணில்
தகவுடனே வாழ்க தழைத்து.

**செல்லமுத்து பெரியசாமி**

நெஞ்சத் தமிழோன்  நிறைமதித் தண்மையதாய்க்
கொஞ்சும் தமிழினில் கோலோச்சி – செஞ்சொல்
பதிப்பால் உலகாண்டுப்  பாவெழிலாய்ப் பூப்பீர்
உதிர்க்கின்ற நல்வாழ்த்தை உண்டு

**விசு. இம்மானுவேல்**

.

1.

தமிழ்நெஞ்சம் ஐயா தனிச்சிறப்பு வாய்ந்த
தமிழர்கள் போற்றும் தலைவர்! - அமிழ்தின்
சுவையுடைய நண்பர்கள் சூழ்ந்திருக்க சான்றோர்
அவையினை ஞானத்தால் ஆண்டு..

2.

எண்ணற்றோர் போற்றும் எழில்வானர் எப்போதும்
தண்ணிழலால் தாங்கிநிற்கும்  தானையாவார் - எண்ணத்தின்
பண்ணாய்க் கவர்ந்திழுக்கும் பண்பாளர்! வானவில்
வண்ணமாய் வாழநல் வாழ்த்து.

.

3.

மின்னிதழ் மூலம் மிகப்பெரிய சாதனையைத்
தன்னிறைவு செய்த தலைவரிவர் - பொன்னையொத்த
நன்மகனாய் என்றும் நலத்துடன் பல்லாண்டு
புன்னகையால் உள்ளம் புலர்ந்து .

.

4.

நெஞ்சம் முழுதும் நிறைந்த அமினையாவின்
அஞ்சாத தன்மை அழகாகும்! - கொஞ்சமும்
வஞ்சமிலாப் பேச்சால் வசீகரிப்பார்! இவ்வுலகில்
விஞ்சும் புகழுடைய வேண்டு.

.

5.

வெளிநாட்டில் வாழுமிவர் வெற்றியின் வித்துக்
களிப்பினைப் பெற்றக் கவிஞர் தெளிவை
அளிக்கும் தமிழ்நெஞ்சம் அமினையாவைப் போற்றி
வளியில் அனுப்புகிறேன் வாழ்த்து.

.

6.

நல்லவற்றை மட்டுமே நாடுமிவர் ஆயகலைச்
செல்வத்தால் நன்கு  சிறப்படைவார்! - எல்லோரின்
நல்லாசி வெற்றியை நல்கி உயர்வளிக்கும்
வல்லமை  சொல்லால் வணங்கு. .

**மாலதி திரு**

வேரென உன்னுழைப்பு வீழும் விழுதென
ஏருழவு நீரென நெல்லுயர்வு -  பாரில்
பழம்விதை பங்களிப்பு   பைந்தொடிப் பாவை
பழுநிலவோ பாண்மக ளே.

**சீனிவாசன் பழனி**

.

நன்றாம் கருத்தை நலமுடன் கொண்டாடும்
குன்றாப் புகழின் கொடைவள்ளல்!  - என்வாழ்வில்
நின்றாய் இறையாக! நின்புகழைப் பாடியே!
என்றென்றும் போற்றுவேன் யான் !

**நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்.**

.

என்றும் நிறைவாய் எதிலும்  சிறப்பாய்
மன்றில் நிழலாய் மகிழ்வுடன் வாழியவே
குன்றின் விளக்காம் குழந்தை மனமாம்
அன்பில் திளைக்கவே  வாழியவே.

**இந்திராணிதங்கவேல்.**

.

அன்பின் அழகில் அகத்தின் மருந்தாக
இன்பம் நிறையும்  இயல்பாக - என்றுமே
துன்பமே தராத்  துயரம் துடைத்தலே
நன்றாம் பிறந்ததின் வாழ்த்து

**திலகவதி பாஸ்கர்**

.

செந்தமிழ் போலே செம்மையாய் நீவாழ்க
இந்தநா ளின்றியே எந்நாளும்! - பந்தமும்
ஒன்றிணைந்து வாழ்த்திடும்! உன்னதம் பெற்றிடும்
வானெட்டும் நற்புகழை வாங்கு!

**நா.பாண்டியராசா**

.

அன்பின் சகோதரர் ஆளுமைப் பாவலர்
என்றும் புகழோங்கி ஏற்றமாய் - இன்பமுடன்
தன்னல மின்றித் தமிழ்நெஞ்சம் சேவைகள்
பன்மடங்காய்க் கூடிடும் பார்

**சரஸ்வதி பாஸ்கரன்**

.

தமிழ்நெஞ்சம் தந்த அமினாரே வாழ்க
தமிழ்நெஞ்சம் வாழ்த்தும் தமிழால் - தமிழ்தமிழ்தாம்
தந்த அமிழ்தமிழ்தாம் தண்டமிழின் வெண்டளையில்
வந்தவெண்பா தந்திடுமே  வாழ்த்து

**ஐயப்பன் ஐயப்பன்**

# வெண்பா போட்டி (பயணம்) 9

போட்டியின் கால அளவு - ஜூன் 25 முதல் ஜூலை 10 வரை
முழுமையாகப் படிக்கவும்

## தலைப்பு : இரட்டைக்கிளவி வெண்பா

ஒருவர் பல வெண்பாக்கள் எழுதினாலும், முதல் வெண்பா மட்டுமே போட்டிக்காக ஏற்கப்படும்

வணக்கம் பாவலர்களே.....

அன்றாட வாழ்வில் நாம் அவ்வப்போது இரட்டைக்கிளவிச் சொற்களை பயன் படுத்துவது வழக்கம் தான்.. அதை இப்போது வெண்பாவில் செய்து பார்ப்போம்.
போட்டியின் விதி : --
(1). ஏதேனும் மூன்று இடங்களில் இரட்டைக்கிளவிச் சொற்களை பயன்படுத்த வேண்டும்.
(2) முதற்சொல், ஐந்தாம்சொல், தனிச்சொல்லில் வந்தால் சிறப்பு. ஆனால் கட்டாயம் இல்லை...
இதோ எ - கா வெண்பா....

**தடதடவென் றோடித்**
**தனியாக நின்று**
**படபடக்கும் கண்ணிரண்டால்**
**பார்த்தாள் -- கடகடவென்(று)**
**அக்கணமே ஓடி**
**அணைக்கும் தருணத்தில்**
**வெக்கத்தால் பெற்றாள்**
**விடை.**




அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,

# நட்பின் மேன்மை..!

– அனுராஜ்

திருக்கோவிலூரை நோக்கி மேடு பள்ளமான மண் பாதையில் ஆடியும் அசைந்தும் சென்று கொண்டிருந்த அந்த எருது வண்டியில் தான் பாரியின் அருமை நண்பரும், தமிழ்ப் புலவருமான கபிலர் சற்றே முகவாட்டத்துடன் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே அமர்ந் திருந்த இரண்டு இளம்பெண்களைக் கண்டால் உயர்குலத்தவரைப் போல் காட்சி தந்தாலும், எளிமையும் நற்குணச்சாயலும் அப்பெண்களின் முகத்தில் படிந்திருந்ததையும் மீறி அதில் ஒரு சோகம் இழையோடிப் போயிருந்தது. அவர்களது சோகத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை, தந்தையின் மரணம் அவர்களை தவிக்கச் செய்து விட்டது. மரணத்தைத் தழுவிய பாரியின் மகள்களே அவர்கள். கபிலர் அவர்களிருவரையும் திருக்கோவிலூர் மலையமானிடத்தில் அடைக்கலமாய் ஒப்பு விக்க எண்ணியதோடு, அவர்களுக்கு உரிய வரன் தேடி மணமுடித்து தருவதாகவும், இறக்கும் தருவாயில் பாரியிடம் சத்தியப் பிரமாணம் செய்திருந்தார். பலரிடமும் பாரியின் மகள்களை மணமுடிக்க வேண்டுகோள் விடுத்தும், காரியம் கைகூடாத நிலையில் மனம் வெதும்பியவராய், சிலகாலம் அப்பெண்களைப் பாதுகாப்பாய் மலையமானாட்டில் இருத்தி விட்டு, கருவூர் ஆண்ட செல்வக்கடுங்கோனை காணும் ஆவல் கொண்டிருந்தார். எனவே தான் பாரி மகளிர் இருவரோடு இப்பயணத்தைத் தொடங்கிவிட்டார்.



மூவேந்தரில் அன்று சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறைக்கும், பொறையன் பெருந்தேவிக்கும் மகனாய் பிறந்து கருவூரில் இருந்தபடி ஆட்சி புரிந்த சேர மன்னன் செல்வக்கடுங்கோன் வாழியாதன் நற்புகழுடனும், சிறப்புடனும் ஆட்சி புரிந்து வந்தான். பகைவரிடத்திலும் பண்போடு கூடிய அறநெறியை அவன் கையாண்டு கொண்டிருந்ததோடு, இரந்து வரும் புலவருக்கோ இல்லையென கால நேரமில்லாது கணக்கற்ற செல்வங்களை எப்போதும் வாரியிறைத்துக் கொண்டி ருந்தான்.

சேரநாட்டில் பந்தர் எனும் ஊரில் தயாராகும் முத்துச்சரங்களையும், கொடுமணல் ஊரில் தயாராகும் உன்னத அணிகலன்களையும் பாணர்களுக்கும், விறலியர்களுக்கும், புலவர்களுக்கும் வாரி வழங்குவதில் வள்ளலாய் விளங்கியதால் செல்வக்கடுங்கோன் என வழங்கப்பட்டான்.

அவனது வீரமும், அறமும், கொடையும் கபிலரை ஈர்க்கவே, அவனைக் காணச் சென்றார். சென்ற வேளையில் சேரமான் இருந்ததோ, போர்க்களத்தில்.

வந்திருப்பவர் கபிலர் என்று அறிந்த சேரன் உளமகிழ்வோடு வரவேற்றான்.

“வாருங்கள் புலவரே.. தாங்கள் பறம்பின் வேந்தன் பாரியின் நண்பரல்லவா..! என்னைக் காண வந்ததன் நோக்கம்..?”

‘‘வஞ்சகப் போரில் மாய்ந்தான் பாரி. அவனது புதல்விகளோ இன்று யாருமற்ற நிலையில் என் பொறுப்பில்..! அவர்களுக்குரிய மணாளன்கள் அமையாத காரணத்தால் எனது மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. தங்களது வீரமும், கொடையும், அறமும் பாரிக்கு நிகராய் என் மனதை கவர்ந்ததனால் தங்களைக் காணும் ஆவலோடு இங்கு வந்தேன். தங்களை என் தமிழினால் பாடவும் விரும்புகிறேன்.’’

“ஆஹா.. நான் மிகுந்த அதிர்ஷ்டசாலி...!எவருக்கும்கிட்டாதபாக்கியமல்லவா..! தாங்கள் என்னுடனே இருந்து என்னை மகிழ்விக்க வேண்டுகிறேன்.”

‘‘அப்படியே.. அரசே..!’’ பாரியின் பிரிவினை வாழியாதனிடத்தில் இருந்து மறக்க எண்ணியவராய், சேர நாட்டில் தங்கி விட்டார் கபிலர்.

‘‘நன்றி புலவரே..! இன்று அயிரைமலை கொற்றவைக்கு விழா நடைபெறவிருக்கிறது. தாங்களும் கலந்து

# நகரும் வாழ்க்கை

மேடைகள் ஒவ்வொன்றிலும்
வழக்கமாய் நடக்கிறது
வாழ்க்கை நாடகம்
நடித்தால்தான்
வாழ்க்கை என்று
அறிந்துக் கொள்ளாமலேயே

யார் யாரோ வருகிறார்கள்
யார் யாரோ போகிறார்கள்
போகும் முன் தமக்குப்பதிலாய்
நகல்களை விட்டுச் செல்கிறார்கள்

அசலின் நன்கொடையாய்
வந்தநகலும்ஓர்நாளில்
அசலாவதைக் கண்டு
அதிசயபடாமல்
நகர்கிறது வாழ்க்கை

மனம்போனப் போக்கில்
நகரும் வாழ்க்கையில்
வாழாதவர்களாய் நினைத்து
புலம்பிகொண்டிருக்கிறோம்

விலங்குகளும் பறவைகளும்
வாழும் வாழ்க்கையைக் கூட
மனிதர்கள் வாழாதது
ஆசையால் விளைந்த
ஆகாத்தனம் தானே



காதோரம் நரைமுடி
கண்சிமிட்டும் முன்னே
கரையேற வேண்டும்
வாழ்க்கைப் படகு

விதியின் கைகளைவிட
மதியின் கைகள் மீது
நம்பிக்கை வைத்து
நகரட்டும் நம் வழ்க்கை

**பாவலர்.கருமலைப் பழம் நீ**
வியாசர்பாடி, சென்னை 39

கொள்ளுங்கள்.''

''அவசியம் கலந்து கொள்கிறேன்.''

விழாவின் குதூகலம் கபிலரை மனவருத்தத்தில் இருந்து சற்றே மீட்டது.

செல்வகடுங்கோ வாழியாதனின் அவையில் கபிலர் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் காலங்களைப் போக்கினார்.

புகழூர் வாழும் சமணர்கள் ஒருமுறை தங்களுக்கு படுகை ஒன்றினை அமைத்துதர வேண்டி அரசனை நாட, மகிழ்வுற்றவனாய் சமணர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததோடு., படுகையும் அமைத்து தந்தான்.

வாழியாதனின் சமய வேறுபாடற்ற கொள்கைகளும், வறியவருக்கு இல்லை யெனாது வழங்கும் கொடைத் தன்மை யையும் கபிலர் நேரிலேயே காணும் சந்தர்ப்பங்களும் நிறையவே நேரிட்டது. அது மட்டுமின்றி எவ்வேளையிலும் உதவி என வருகின்றவருக்கு இல்லையெனாது கொடுத்து உதவிய இவனை பாராட்டும் விதமாய் கபிலர், ''கதிரவனே, நீ கூட பகல் பொழுதுகளில் மட்டுமே ஒளியினை வழங்குகிறாய், ஆனால் இச்செல்வக்கடுங்கோ, இரவிலும் தன்னிடம் உதவி நாடி வருபவருக்கு வழங்குவதை வாடிக்கையாகவே கொண்டி ருக்கிறான்.'' எனப் பாடினார்.

பறம்பின் பாரியைத் தவிர வேறு எவரையும் பாடியறியாதவர் கபிலர், அவர் சேரனின் கொடைத்தன்மையையும், அற நெறியையும் அருகிலிருந்து கவனித்து அவனது மாண்பை பறைசாட்டும் விதமாய், செல்வக் கடுங்கோவை பதிற்றுப்பத்து பாடல்களில் ஏழாம் பத்தாய் பாடிச் சிறப்பித்தார்.

கபிலரின் பாடல்களில் தன்னை மறந்த செல்வக்கடுங்கோ, அவரை ''நன்றா'' எனும் குன்றுக்கு அழைத்துச் சென்றான். குன்றின் மேல் கபிலரை ஏற்றியவன் அவரது கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரிந்த ஊர்களையெல்லாம் கபிலருக்கு நிவந்தமாய் அளித்தான். அது மட்டுமின்றி மேலும் நூறாயிரம் காணம் பொன் பரிசளித்து அவரை திகைப்பில் ஆழ்த்தினான்.

''அரசே, ஏழைப் புலவன் எனக்கு எதற்கு இத்தனைச் செல்வங்கள்..! பாரி இறந்தவுடன் தங்களை வந்து சந்தித்தது என்னைக் காத்தருளுங்கள் என்பதற்காக அல்ல..! தங்கள் கொடை யின் பெருமையினை செவிவழிச் செய்தி யாய் கேட்டிருந்தேன். வள்ளல்தன்மை மிக்க வேந்தனை பாடாது போவது நியாயமில்லை என்பதனால், தங்களைச் சந்திக்க வந்தேன், தங்களது குணநலன் களும் கண்டேன், முதியரைப் பேணும் தொல்கடன் கண்டேன். இரவு பகலென பாராது உதவி வேண்டி வருபவருக்கு உதவும் பெருங்குணம் கண்டு மலைத்தேன். நீ வாழ்வாங்கு வாழ்ந்து பலருக்கும் உதவி, பெரும்புகழ் எய்துவாயாக..!'' என வாழ்த்தினார் கபிலர்.

''ஐயனே, நான் தங்களுக்கு வழங்கிய செல்வமோ சொற்பம்..! விரைவில் அழிந்து விடும் செல்வத்தை தந்து, அழியாப் புகழினை எனக்குத் தரும் தமிழ்ப்பாடல்களை தங்கள் மூலம் நான் பெற்றிருக்கிறேன். இதற்கு நான் தந்த செல்வம் ஈடாகாது..! தாங்கள் உயரிய நட்பினை வலியுறுத்தும் விதமாய் பாரிமகளிர்க்கு மணமுடிக்க தவமிருக்கிறீர்..! அதற்கு நான் வழங்கிய செல்வம் ஏதேனும் வகையில் உதவக் கூடுமானால் உண்மையில் மகிழ்வேன். அது போதாது என்றாலும், எப்போதும் எனை நீங்கள் நாடலாம்.. தயங்க வேண்டாம்..! உங்களது உடல் சேர நாட்டில் இருப்பினும் உங்களது உள்ளமோ மலையமானாட்டில் நீங்கள் விட்டுவிட்டு வந்த பாரி மகளிரிடத்தில் இருப்பதை நான் உணர்ந்தேயிருக்கிறேன்.'' என்றான் சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதன்.

“ஆம்..அரசே..! எனது உள்ளத்தில் உள்ளதை மிகச்சரியாக உரைத்து விட்டீர்கள். நட்பின் மேன்மை இதுவல்லவா..! நண்பர்களின் உள்ளத்தே உள்ளதை அறியும் ஆற்றலே நட்பின் மேன்மை யாகும்..! பாரியின் மகளிரை மணமுடித்து தரும் வரை எனக்கு மனநிம்மதியில்லை தான். அவர்களே எனது நினைவில் எப்போதும் வந்து கொண்டிருக்கிறார்கள். பாரிக்கு செய்து தந்த சத்தியமும் என்னைப் பாடாய் படுத்துகிறது. ஆகவே, நான் திருக்கோவிலூர் சென்று வர உத்தரவு தர வேண்டும்..!”

‘‘புலவரே, தாங்கள் செல்வதை நான் ஏன் தடுக்கப் போகிறேன். நல்ல காரியத்தை முன்னிட்டல்லவா தங்களது பயணம் உள்ளது. போய்வாருங்கள்..! காரியங்களை செவ்வனே முடித்து திரும்புங்கள்..! தங்களுக்காக இங்கு ஒருவன் வழி மீது விழி வைத்துக் காத்திருப்பான் என்பதை மறவாதீர்..!’’ என்றார் சேரமான் வாழியாதன்.

‘‘அரசே.. தங்களது நட்பினைப் பெற்றதற்குநான்பெருமிதம்கொள்கிறேன். பாரிமகளிர்க்கு மணமுடித்து தந்ததும் உடனே வந்து விடுகிறேன்.’’ என்றார் கபிலர்.

‘‘நல்லது புலவரே.. போய்வாருங் கள்..!’’என்றவனாய்வழிகூட்டியனுப்பினான் சேரன்.

புலவர் சென்ற ஒரு திங்களில்..

சேரனோடு பகைத்தவனாய் பாண்டியன் சினந்தெழுந்து போரிட அழைத்தான். சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனும் தன் பெரும்படையுடன் பாண்டிய நாட்டினை நோக்கி நகர்ந்தான்.

*சிக்கற்பள்ளி எனுமிடத்தில் பயங்கர யுத்தம் இரு தரப்பினருக்கும். யானைகளும், புரவிகளும், காலாட் படையினரும் பலத்த சேதங்களுக்கு உட்பட, இருதரப்பிலும் பல இழப்புகள். குருதியோ செந்நீராய் ஓடிக் கொண்டிருக்க, களத்தில் துணிந்து வீரத்தைக் காட்டிய செல்வக்கடுங்கோவின் மார்பினை நோக்கி வேலொன்று பாய்ந்து வந்திறங்கியது. பலருக்கும் கொடுத்து கொடுத்து சிவந்த கரங்கள் அன்று குருதியில் தோய்ந்து சிவந்து காணப்பட்டது. மலர்ந்த முகத்தினனாய் மார்பினில்தாங்கியவேலுடன்வீரமரணத்தைத் தழுவினான் செல்வக்கடுங்கோ.

வாழியாதனின் கொடைத் தன்மை யைப் பாடிய புலவரெலாம் அவனது வீரத்தைப் பாடியதோடு, ‘‘சிக்கற்பள்ளி துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன்’’ எனவும் புகழ்ந்துரைத்தனர்.

மன்னனின் மரணம் திருக்கோவி லூரில்கபிலரைஎட்டியது.வேதனையிலும், துன்பத்திலும் துடித்தவராய், ‘‘நான் நட்பு பாராட்டும் வேந்தரெலாம் போரினில் மடியும்அவலம்ஏன்..?இந்தபாழும்உலகம் நல்லவர்களை மட்டும் ஏன் விரைவில் மரணத்தின் பிடியில் ஆழ்த்தி விடுகிறது..! சே..என்ன வாழ்க்கையிது. முன்னர் ஒரு நண்பனை இழந்தேன், அவனது மக்களை மலையமானின் புதல்வருக்கே மணமுடித்தும் தந்தேன். பின்னொரு நண்பனைப் பெற்றேன். அவனையும் இன்று இழந்து நிற்கின்றேன்..! எனக்கு ஏன் இந்த உலகினில் வாழ்வு..! தேவையில்லை..! எனது நண்பர் கள் இல்லாத இவ்வுலகில் நான் வாழ்வ தில் பயனில்லை..!’’ என்றவராய், திருக்கோவிலூர் *மலையமானாட்டு குன்றொன்றில் வடக்கிருந்து தனது இன்னுயிரைப் மாய்த்துக் கொண்டார் கபிலர். தனது நட்பின் மேன்மையை உரைக்கும் வண்ணம்.

**நூல் :**

**வரையாட்டின் குளம்படிகள்**

**ஆசிரியர் :**

**கோ.லீலா**

**வெளியீடு :**

**படைப்பு பதிப்பகம்**

**விலை :**

**150 /-**

இயற்கையோடு இயைந்த வாழ்வு அமைவது அனைவருக்கும் அரிதென்று சொல்லுவார்கள். ஆசிரியருக்கு அது பெருங் கொடை.

தான் பெற்ற இன்பம் பெறுக வையகமென்று, நமக்கும் கொடுப்பது சிறப்பு.

நம்மைச்சுற்றி இருக்கிற கொஞ்ச நஞ்சம் தெரிகிற இயற்கையை அனுபவிக்கலாமே? எனக்கு நம்மைச் சுற்றி எத்தனை பறவைகள், விலங்குகள் வாழ்கின்றன எனத் தெரிந்து கொள்ள ஆசை.



அந்தப் பறவை இப்படிக் கத்துகிறது. அது பேரென்ன?எருமைமேல் இந்த பறவை உட்கார்ந்துகொண்டு என்ன செய்கிறது? எருது காலுக்கடியில் கொக்கு என்ன பண்ணுகிறது? காக்காவை ஏன் இரட்டைவால் குருவி துரத்துகிறது?




நீலநிறத்தில் அழகா ஒரு குருவி மட்டும் இங்கேயும் அங்கேயும் பறக்குதே.. அவுங்க யாருன்னு எனக்குள்ளே ஆயிரம் கேள்விகள்..

ஏன்? எதற்கு? எப்படின்னு தோழி கோ.லீலா அவர்களின் 'வரையாட்டின் குளம்படிகள்' என் கேள்விக்கான பல விடைகளைக் கொடுத்தது என்று சொன்னால் மிகையாகாது..

இயற்கையின் மீது காதல் கொண்ட அன்புத் தோழி லீலா அவர்களின் முகநூலில் பதிவுகள் நிறையக் கண்டும்,படித்தும் ரசித்திருக்கிறேன்..

நானும் அந்த காட்டுக்குள் கலந்து நிற்பது போல உணர்வு களை ஏற்படுத்தக் கூடியது, இவரின் எழுத்துகள்.

இவர் இந்நூலில் கானுயிர்களைப் பற்றிக் கூறும்போது, அதனுடைய இயல்பு, வகை,அதன் வாழ்வியல், இலக்கியத்தில் என்ன சொல்கிறார்கள்...

சுற்றுச் சூழலுக்கு இவை என்ன உதவி செய்கிறது? என்று ஆசிரியர் சுவைப்பட எழுதி யிருக்கிறார்.

சுற்றுச்சூழலுக்கு உதவக் கூடிய இந்த சூழலியலாளர்களை நாமும் தெரிஞ்சுக்கலாமே?!

கரிச்சான் குருவி

கரிச்சான் குருவிங்கற வங்க யார் எனத் தெரியுமா? அவர்களுக்கு எத்தனை பேர் எனத் தெரியுமா? அவர்கள் எப்படி இருப்பார்கள் எனத் தெரியுமா? எத்தனை மணிக்கு எந்திரிப்பார்கள் எனத் தெரியுமா? (அதிகாலை 3.30)

1600 வருடங்களுக்கு முன் இதன் பெயர் என்ன தெரியுமா? பூச்சி வேட்டையை இவர்கள் எத்தனை மணிக்கு ஆரம்பிக்கி றார்கள் தெரியுமா? எவ்வளவு செய்திகள்.

கரிச்சான் குருவிக்கு வெட்டுக் கிளி தான் உணவாமே?

காலையில் 100, மாலையில் 100ன்னு வெட்டுக்கிளியைச் சாப்பிடுமாமே? வெட்டிக் கிளியினால் பிரச்சனையா? இனி மேல் இவர்களை நாடுங்கள்..

யானை

யானை எவ்வளவு சாப்பிடுகிறது, யானைக்கழிவுகளால் உருவாகும் காடுகள்.

மலையின் உயிர்ச்சூழலைச் செழிப் புறச் செய்கிறது... அடுத்த ஆச்சரியம் யானைக்கு இத்தனை பேரா? மலைப்பாக இருந்தது. 50க்கும் மேற்பட்ட பெயர்கள்.

அடுத்து...

கரையான், மைனா,ஆந்தையார், மயில், வண்ணத்துப்பூச்சி (யாருக்குத்தான் பிடிக்காது?) காக்கா, எறும்பு, வெளவால், மீன்கொத்தி, தேனீ,போன்றவை பற்றிய தகவல்கள் பல...

மலையில் வாழும் கானுயிர்களின் பாதைகளை, வழித்தடங்களை நாம் எப்படி வழிமறித்து நிற்கின்றோம் எனச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்..

எ ல் லா வ ற் றை யு ம் ஒழித்துக்கட்டிவிட்டு மனித இனம் மட்டும் வாழமுடியாது.

தீர்வு

இயற்கையை மீட்கத் தீர்வென்ன..?!!

என்ற கேள்விகளோடே படித்தபோது இறுதியில் தீர்வுகள் என்ற பிரிவில் தீர்வுகள் சொல்லி இருப்பது, அரசாங்கமும், மக்களும் கவனத்தில் கொள்ள வேண்டியவை..

மழைக்காடுகளைப் போற்றி பாது காத்து, மழை பெறுவோம் என ஆசிரியர் சொல்வது ஒரு வேண்டுகோளாக முன் வைக்கப்படுவதாகக் கருதுகிறேன்.

குழந்தைகளுக்கு மற்றும் அனைவ ருக்குமான நூல்.

பயனுள்ள நூல்.வரையாடு பற்றிச் சொல்ல மாட்டேன்.நீங்கள் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

கண்டிப்பா வாங்கிப் படியுங்கள். நல்ல படைப்பு.

**- சித்ராதேவி வேலுசாமி,**

குழலிமசாலா
இயக்குனர்
ஈரோடு.



---

# பல்லாண்டு வாழி ‘அமின்’!

வண்ணங்கள் அலைமீதில் மிதந்தி ருக்கும்
    வடிவமைப்புக் கலைவாழ்க்கை! அன்பை யள்ளி
உண்ணுங்கள் எனவூட்டும் ஈரக் கைகள்
    உயிர்மொட்டை மலர்த்துகின்ற தமிழின் நெஞ்சம்!
தண்குளிரும் தலைதுவட்டும் தென்றல் காற்றோன்!
    தலைமுறைக்குச் சொத்தாகும் இதழாம் தோட்டம்!
பண்ணெடுத்து வாழ்த்துகின்றேன் வெற்றி அண்ணன்
    பல்லாண்டு வாழி’அமின்’ இனிய தம்பி!

**வெற்றிப்பேரொளி**

# மரகத நடராஜர்

இராமேஸ்வரம் போகும் வழியில் மண்டபம் என்று பகுதி உண்டு. அந்தப் பகுதியில் ஏழை மீனவரான 'மரைக்காயர்', வறுமையின் பிடியில் நம்பிக்கையுடன் மங்களேஸ்வரரை தினமும் வழிபட்டு வந்தார். பாய்மரப்படகில் சென்று மீன் பிடித்து வந்து வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒரு சமயம் அவர் கடலில் மீன் பிடிக்கும்போது சூறாவளிக் காற்று அடித்து அவருடைய படகு நிலை குலைந்து எங்கேயோ அடித்து சென்று விட்டது. அப்படியே வெகுதூரம் போனபிறகு ஒரு பாசிபடிந்த பாறையின் மேல் மோதி நின்று விட்டது. பாறை அப்படியே சரிந்து படகிலே விழுந்து விட்டது.

ரெண்டு சின்ன பாறைகளும் ஒரு பெரிய பாறையுமாக இருந்துள்ளது. அதுவரை அடித்துக் கொண்டிருந்த புயலும் மழையும் சற்றேன்று நின்று விட்டது. மரைக்காயர் அதிர்ச்சியில் இருந்து மீண்டதும், மண்டபம் நோக்கித் திரும்பி வருவதற்கு பார்த்தால் அந்த இடத்தில் இருந்து திக்கும் திசையும் தெரியலை.

மங்களேஸ்வரரை நினைத்து படகை செலுத்தி மிகவும் கஷ்டப்பட்டுப் பலநாள் கடலில் திரிஞ்சலைந்து ஒருவழியாக மண்டபம் வந்து சேர்ந்தார். கடலுக்குப் போன இவர் திரும்பிவர வில்லை என்று பலநாட்கள் கவலையோடு காத்திருந்த குடும்பத்திற்கு அப்போது தான் நிம்மதி கிடைத்தது.

படகில் கொண்டு வந்த பாசிபடிந்த கற்களை என்ன என்று தெரியாமல் வீட்டுப் படிக்கல்லாக போட்டு வைத்தார் மரைக்காயர். அந்த கல் மீது வீட்டுக்குள் போக வர்ற ஆட்கள் நடந்து நடந்து, மேலே ஒட்டி இருந்த பாசி கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி ஒரு நாள் சூரிய வெளிச்சத்தில் பளபள வென்று மின்னியது.

மங்களேஸ்வரர் மரைக்காயரின் வறுமையான காலக் கட்டத்தில் இருந்து விடுபட அளித்த பரிசு என்பதை உணர்ந்து, மின்னும் பச்சைப் பாறையை அரசருக்கு அன்பளிப்பாகத் தந்தால் வறுமை நீங்கும் என்ற எண்ணத்தால் பாண்டிய மன்னரின் அரண்மனைக்கு சென்றார்.

நடந்த அனைத்தையும் விவரித்து, தன் வீட்டில் ஒரு பெரிய பச்சைக் கல் உள்ளது என்று சொன்னார். அரண்மனை ஆட்கள் பச்சைப் பாறையை வீட்டில் இருந்து எடுத்து வந்து அரசரிடம் காட்டினார்கள். கற்களைப் பற்றி விவரம் உள்ள ஒருவர் பச்சைப் பாறையை சோதித்து பார்த்தார்...

சோதித்தவர் ஆச்சரியத்துடன் "இது விலை மதிக்கமுடியாத அபூர்வ மரகதக்கல், உலகில் எங்கு தேடினாலும் கிடைக்காது" என்று சொன்னார். உடனே மன்னரும் மரைக்காயருக்கு பச்சைப் பாறைக்கு உரிய பொற்காசுகளை அளித்து வழி அனுப்பினார்.

இவ்வளவு அருமையான கல்லில் ஒரு நடராஜர் சிலை செதுக்க வேண்டும் என்பது அரசரின் ஆசை. இந்த வேலைக்கு உகந்த சிற்பியைப் பல இடங்களில் தேடிக் கடைசியில் இலங்கை அரசன் முதலாம் கயவாகுவின் அரண்மனையில் சிற்பியாக இருக்கும் சிவபக்தர் இரத்தின சபாபதியைப் பற்றிய விவரம் கிடைத்தது.

அவரை அனுப்பி வைக்கும்படி பாண்டியன் ஓலை அனுப்பினார். சிற்பியும் வந்து சேர்ந்தார். அவ்வளவு பெரிய



மரகத கல்லை பார்த்த உடன் மயங்கியே விழுந்துவிட்டார், "என்னால் மரகத நடராஜர் வடிக்க இயலாது மன்னா" என்று கூறிவிட்டு இலங்கைக்கு சென்றார்.

மன்னன் மன வருத்தத்துடன் திருஉத்திரகோசமங்கை மங்களேஸ்வரர் சன்னதி முன் நின்று பிரார்த்தனை செய்துக் கொண்டிருந்தார்,

அப்போது... "நான் மரகத நடராஜர் வடித்து தருகிறேன் மன்னா" என்ற குரல் வந்தது .

குரல் வந்த திசை நோக்கி மன்னர் மற்றும் பிரஜைகள் அனைவரும் திரும்பியதும் ஆச்சரியத்துடன் ஒரு மாமனிதரை கண்டனர். அவர் வேறு யாரும் இல்லை... 'சித்தர் சண்முக வடிவேலர்' தான்

மன்னனின் கவலையும் நீங்கியது. மரகத நடராஜரை வடிக்கும் முழு பொறுப்பையும் சித்தர் சண்முக வடிவேலரிடம் ஒப்படைத்தார். அவருக்கு தேவையான அனைத்து உதவி களையும் செய்து கொடுத்தார்.

அந்த பெரிய மரகத பாறையில் அஞ்சரை அடி உயர நடராஜரை ஒன்னரை அடி உயர பீடத்துடன் "ராஜ கோலத்தில்" மிகவும் நுணுக்கமாக மரகத நடராஜர் திருக்கரங்களில் உள்ள நரம்பு தெரியும் அளவிற்கு (பால் அபிஷேகத்தின் போது காணலாம்) வடித்தார் சித்தர் சண்முக வடிவேலர்.

பின்னர் மன்னரை அழைத்து முதலில் மூர்த்தியே (மரகத நடராஜரை) நிறுவி பின்னர் ஆலயம் அமைக்கும் படி அறிவுரை கூறினார். இதனால் மன்னர்கள், முகலாயர்கள், அன்னியர்கள் என பல படையெடுப்புகளை தாண்டி, இன்று மரகத நடராஜர் கம்பீரமாக புன்னகை தவழும் முகத்துடன் திருநடனம் புரிகிறார்...

ஓம் நமசிவாய

அஷ்வின்

# வயிற்றுக்கு!

பிறர் வயிற்றுப் பசி
போக்கத்தான்
தன் வயிறு புடைக்க
தீனி கொடுத்து
வளர்க்கப்படுகிறோம்
என்பதறியாமல்
ஓடியாடிக் குதித்து
எஜமானரின் தொடுவிரலை
துளிர்விடும் இலைகளென
எண்ணி எண்ணி
மனித அன்பை
நுகர்ந்து பார்த்தது
சுட்டித் தனமான
ஆட்டுக்கிடாக் குட்டி!

**- பா.சக்திவேல்**
கோயம்புத்தூர்













muththamizh-kalasam.com



























# ‘முத்தமிழ் கலசம்’ அறிமுகம்

‘முத்தமிழ் கலசம்’ எனும் பல்சுவை இதழ், 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இணையத்தில் பவனி வர ஆரம்பித்தது. இருமாதங்களுக்கொரு முறை மாத ஆரம்பதில் - முதலாம் வாரத்தில் வெளிவரும் இவ்விதழானது, நூல் மதிப்புரை, கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தன்முனைக் கவிதைகள், ஹைக்கூ, குறுங்கதைகள், மருத்துவக் கட்டுரை, பாட்டி வைத்தியம், சமையல் குறிப்புகள், நகைச்சுவையென பலவிதமான அம்சங்களை ஏந்தி வெளிவருகிறது.

இதன் ஆசிரியராக சித்தி வஃபீராவும், கௌரவ ஆசிரியராக தமிழ்நெஞ்சம் அமின் அவர்களும் இயங்கி வருகிறார்கள். இதன் வடிவமைப்புக்கான முழுப் பொறுப்பையும் கௌரவ ஆசிரியரே மேற்கொண்டு அழகாக வடிவமைத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரபட்சமின்றி திறமையான எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் தம் படைப்பைப் பகிர களம் அமைத்துக் கொடுத்து ஊக்குவிப்பதோடு, நேர்மறை சிந்தனைகளுள்ள படைப்பாளர்களை உருவாக்குவதே இவ்விதழின் நோக்கமாகும்.

முத்தமிழ் கலசத்தின் ஆசிரியர் உரைகளும், கட்டுரைகளும் சமூகத்துக்கு படிப்பினையூட்டும் விதமாகவும், விழிப்புணர்வூட்டக் கூடியதாகவும், பயனளிக்கும் விதத்திலும் அமைந்திருப்பது சமூக சீர்திருத்தத்துக்கு வழிகோலும் என்பது நிச்சயம்.

வாழ்க்கையில் அல்லலுறும் சகலருக்கும் நேர்மறையான எண்ணங்களை மனதில் விதைக்கும் தொடர் கட்டுரை ‘வாழ்தல் இனிது’ இதழுக்கு மெருகூட்டும் வகையில் இடம்பெற்று வருகிறது. இதுவரை பதின்மூன்று இதழ்கள் வெற்றிகரமாக வெளி யிடப்பட்டுள்ளன. மின்னிதழாக இணையத்தில் மட்டுமேயல்லாமல் பத்தாவது இதழிலிருந்து அச்சிதழாகவும் வெளிவந்து பாராட்டினைப் பெற்றிருக்கிறது. இதன் முதல் அச்சுப்பிரதியானது புரவலர் ஹாஷிம் உமர் அவர்களுக்கு, இதழாசிரியரினால் வழங்கப்பட்ட நிகழ்வு கொழும்பு 03 சசகாவா மண்டபத்தில் நடைபெற்றது. இதழ் பத்திலிருந்து அச்சுப்பிரதிகளாகவும் வெளிவந்துக்கொண்டுள்ளன.

இதுவரை வெளியான அனைத்து இதழ்களையும் muththamizh-kalasam.com இணைய தளத்தில் பார்வையிடலாம். தரவிறக்கம் செய்தும் வாசிக்கலாம்.

இவ்விதழுக்கான ஆக்கங்களை Muththamizh.kalasam@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி, உங்கள் திறமைகளும் களம் காணச் செய்யலாம்.

இத்தருணத்தில், முத்தமிழ் கலசம் மென்மேலும் வளர்ந்து, இலக்கியப் பணியில் சிறந்து விளங்க, இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

**- கமர்ஜான் பீபி**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com ஜூலை 2022



## தமிழ்ப்பணி என்றும் தொடர்க!!!

பிரான்சு தேச அய்யாவே
  பிறர்க்காய் உழைக்கும் பெரியவரே
கரும்பின் உள்ளம் கொண்டவரே
  கபட மில்லா நல்லவரே
உருகும் இவரின் தமிழ்த்தொண்டு
  உள்ளம் வியப்பில் ஆழ்ந்திடுமே
பருகும் தமிழாம் இதழினிலே
  பலரைத் தூக்கி நிறுத்திடுமே

இனிய பிறந்த நல்வாழ்த்து
  இனிதாய் மொழிந்தோம் வாழியவே!
பனியின் மலராய்க் குளிர்ந்திடவே
  படைப்பை அச்சில் ஏற்றிடுவார்
கனிய வைத்தச் சேவைகளில்
  களித்தே மகிழ்ந்தோம் வாழியவே!
மனமும் நிறைந்தே வாழ்த்துகிறோம்
  வாழ்க! வாழ்க! தமிழ்நெஞ்சம்!!

- தென்றல்கவி